வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள பழங்கால இடங்களின் பெயர்களை கவனியுங்கள், இவை அன்றைய கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. பல பெயர்கள் மாறியுள்ளன மகதா - பீகார், கலிங்கா > ஒடிசா, சேரா > கேரளா, இந்திரபிரஸ்தா > டெல்லி, பிரியாக் > அலகாபாத், ஆனால் சில பெயர்கள் அப்படியே உள்ளன. (எ.கா) காஷ்மீர், நேபாளம், கைலாசம், குருஷேத்ரம், அயோத்தி, காசி, மதுரா. இப்பெயர்கள் அவ்வப்போது மாறுபடும். (எ.கா) மெட்ராஸ் > சென்னை, ப்ரயாக் > அலஹாபாத், பரோடா > வதோதாரா, பம்பாய் > மும்பை, இத்தகைய இடம் மாற்றத்தை அறிமுகப்படுத்த வகையில் இவ்வரைபடம் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

©KTBS NOT TO BE REPUBLISHED

கணிதத்துறைக்கு இந்தியர்களின் பங்களிப்பு:

அசோகரின் கல்வெட்டுகளில் எண்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை 2300 ஆண்டுகள் பழமை வாய்ந்தவைகள். ஐரோப்பிய நாடுகள் 1000 ஆண்டுகளுக்கு பிறகும் எண்களை அறியாதிருந்தனர். எண்கள், தசம பின்னங்கள் மற்றும் இயற் கணிதம் ஆகியவை பண்டையஇந்தியாவின் பங்களிப்புகள் ஆகும். பூஜ்ஜியத்தை முதன் முதலாக எண்ணாக பயன்படுத்திய பெருமை இந்தியர்களை சாரும். பூஜ்ஜியத்தை கண்டுபிடித்த பிறகு கணக்கீடுகள் எளிதாகிபோயின. பூமி கோளக வடிவத்தில் உள்ளது. பூமி சூரியனை சுற்றிவருகின்றது. என்பதை இந்திய வானவியலரான ஆரியபட்டா எடுத்துரைத்தார். நவீன அறிவியலில், இவ்வறிக்கையை மேற்கோளிட்டு காண்பித்துரைத்த பெருமை காபர்னிகஸ் என்பவரைச் ச ாரும். ஆர்யபட்டா, காபர்னிகஸ் காலத்திற்கு, பத்து நூற்றாண்டுகளுக்கும் பழமை வாய்ந்தவர் இந்தியர்கள். உஜ்ஜையினியில் கடல் வழியாக பயணிக்கும் மாலுமிகளுக்கு வேண்டி தீர்க்கரேகை வரைபடத்தை தயாரித்தனர்.

இந்தியர்களின் இன்றும் சில பங்களிப்புகள் பற்றின கருத்துக்கள்

* புகழ்பெற்ற பிதாகரஸ் தேற்றம், இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்திய விஞ்ஞானி போதயான என்பவர் அங்கீகரித்தார்.
* பொருளின் மீண்டும் பிரிக்க இயலாத அலகு 'அணு' என்று அழைக்கப்படுகிறது. இதை ஒரு இந்தியாவைச் சார்ந்த கணாத விஞ்ஞானி 27 நூற்றாண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தினார்.
* பண்டைய காலத்தில் இந்தியர்கள் எஃகு தயாரிப்பை அறிந்திருந்தனர்.
* கப்பல் கட்டுவதில் இந்தியர்கள் முதன்மையானவர்கள். குஜராத்தில் உள்ள சூரத் கப்பல் கட்டும் இடமாக திகழ்ந்தன.

  இந்தியர்கள் பருவகாற்றை அடையாளம் கண்ட பின் கப்பல்களின் வேகம் அதிகரித்தன.
* யோகா மற்றும் சமஸ்கிருதம் ஆகியவை இந்தியவில் பங்களிப்புகள் ஆகும்.

அயல் நாடுகளில் இந்திய கலாச்சாரத்தின் தாக்கம் :

இந்தியர்கள், கடல்வழி பயணத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள், ஆவர். பயணங்களில், கலாச்சார பரிமாற்றங்கள் நாடுகளுக்கு இடையே நிகழ்ந்தன.

பௌத்தமதம் இந்தியா எல்லைகளை கடந்து, ஆப்கானிஸ்தானில் பரவி மங்கோலியா, சீனா, கொரியா மற்றும் ஜப்பான், இலங்கை பௌத்தத்தை தழுவின. மிக உயரமான புத்தர்சிலை ஆப்கானிஸ்தானில் இருந்த பாவியான் என்னும் இதை குறித்து நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் அல்லவா?

புத்தர், இலங்கை

போரோபுதூர், புத்தர் கோயில்

பௌத்தம் மற்றும் இந்து கலாச்சாரம் தெற்காசியாவின் பல்வேறு நாடுகளில் பரவின. காம்போடியாவின் அங்கோர் வாட்டில் உள்ள பிரம்மாண்டமான இந்து கோவில் உலகின் தலைசிறந்த கட்டிடக்கலை சிற்பங்களில் ஒன்றாகும் ஜாவாவில் உள்ள போரோபுதூரில் உலக புகழ்பெற்ற புத்தகோவில் உள்ளது. இல்விரண்டும் யூனஸ்கோ பட்டியலில் பாரம்பரிய சின்னங்கள் ஆகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

தென்கிழக்கு ஆசியாவில், இந்திய கலாச்சாரம் குறைந்தது ஒன்பது நூற்றாண்டுகளாக மக்களின் வாழ்க்கையையும், கலாச்சாரத்தையும் வடிவமைத்தது. இராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்ற கதைகள் நடனம் மற்றும் பாடல்கள் இன்றும் நிலைத்து வாழ்கின்றன.

அங்கோர் வாட், காம்போடியாவில் உள்ள இந்து கோயில்

NOT TO BE REPUBLISHED ©KTBS

காலத்தால் அழியாத இந்தியாவின் சில விழுமியங்கள் :

ஆச்சார்ய தேவோ பவ : பண்டைய இந்திய கலாச்சாரத்தில் கல்வி என்பது வியாபாரமாக கருதப்படவில்லை. 3000 ஆண்டுகளுக்கு முன்னர் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள் அளித்த விழுமியங்கள் அனைவருக்கும் பொருந்த்தக்கதாகும். உண்மையையே பேசு நேர்மையை கடைபிடி, கல்வி கற்பதில் மனநிறைவு கொள்ளாதே, கர்வம் கொள்ளாதே. தாய், தந்தை, குரு மற்றும் உறவுகளை கடவுளை போல் கருது, இவ்விழுமியங்கள் இன்றும் நம்மிடத்தில் உள்ளன.

அகிம்சை : உலகில் இந்தியர்கள் அகிம்சை முன்மொழிவதில் சிறந்து விளங்கினர். பௌளத்தம் மற்றும் ஜைன மதங்களும் அகிம்சையை முன்மொழிந்தனர். அகிம்சை கொள்கையை மகாத்மா காந்தி ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாக கொண்டு நமக்கு சுதந்திரத்தை வாங்கி தந்தார் என்பது கருதத்தக்கது.

''ஸர்வே ஜந, சுகினோ பவந்து'' மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். என்பதே முன்னோர்களின் உள் நோக்கம் ஆகும். ''வசுதைவ குடும்பகம்'' (பூமியில் உள்ள அனைத்தும் ஒரே குடும்பம்) என்பதே நம் தேசிய மந்திரமாக உள்ளன.

சமய சமத்துவம் : இந்தியா நம்பும் மற்றொரு விழுமியம், மதங்களுக்கு இடையிலான சமத்துவமாகும். ஒளி எங்கிருந்து வந்தாலும் அது ஒளிபே

ஆகும். இருளை போக்கும் ஆற்றல் கொண்டது. அதுப்போன்ற மதம் எதுவாக இருந்தாலும் கடவுள் ஒருவரே; பல பெயர் என்பது வேத வாக்கியம் ஆகும்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து விழுமியங்களும் இந்திய கலாச்சார சிந்தனைகளின் பெருமைக்குரியவைகள் ஆகும்.

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. கணிதத் துறைக்கு இந்தியர்களின் சிறப்பான பங்களிப்புகள் .... ஆகும்.
2. சகுந்தலா, சமஸ்கிருதப் படைப்பை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் .... ஆவார்.
3. காம்போடியாவில் .... என்ற இடத்தில் அற்புதமான இந்து கோவில் உள்ளது.

II. பின்வரும் வினாக்களுக்கு பதிலளிக்கவும்:

4. புராணங்களில் இந்தியாவை எவ்வாறு அழைத்தனர்?
5. இந்தியர்கள் கணிதத்திற்கு அளித்த சிறப்பு பங்களிப்புகள் யாவை?
6. ஆரியபட்டாவின் மாபெரும் சாதனை எவை?
7. உலக புகழ்பெற்ற பிரமாண்டமான புத்தர்கோயில் எங்கு அமைந்துள்ளன?
8. இந்தியக் கலாச்சாரம் பரவிய தென்கிழக்கு ஆசிய கண்டத்தின் மூன்று நாடுகளை குறிப்பிடுக.
9. ஏதேனும் இரண்டு இந்திய விழுமியங்களை குறிப்பிடவும்.

III. குழுவில் கலந்துரையாடி விடையளிக்க :

10. இந்தியாவில் அனைத்து மதங்களின் சமத்துவம் நடைமுறையில் உள்ளது.

செயல்பாடு

✵ அட்லாஸில் இந்திய வரைபடத்தில் இந்திய கலாச்சாரம் பரவிய ஆசிய கண்ட நாடுகளை குறிப்பிடவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பாடம் 3	நமது பெருமைக்குரிய கருநாடக மாநிலம்

N7R1T2

பாட அறிமுகம்

கருநாடகம் நமது மாநிலம். நமது மொழி கன்னடம். நமது நிலப்பகுதியின் இயற்கை வளங்கள், வேளாண்மை. நிறுவனங்கள் வணிகம் ஆகியவற்றை பற்றி நாம் அறிந்துகொள்வது அவசியமாகும். இப்பாடத்தில் கருநாடகத்தின் நான்கு நிருவாகப்பிரிவுகளை பற்றி அறியலாம், ஆறுகள், விளைப்பயிர்கள், உற்பத்தி செய்யும் பொருட்கள். வங்கிகள், நீர்பாசன வசதிகள், காடுகள் மற்றும் வனவிலங்குகள் போன்றவைகளைப் குறித்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன நிர்வாக வசதிக்காக, நம் மாநிலத்தை நான்கு வருவாய் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இங்கு நான்கு முக்கிய பிரிவுகளை குறித்து விவரிக்கப்பட்டுள்ளன.

திறன்கள்

1. கருநாடகத்தின் நிர்வாகப்பிரிவுகள், மாவட்டங்களின் ஒவ்வொரு பிரிவுகளிலும் அதன் வரலாற்று முக்கியத்துவம் பற்றி அறிந்துக் கொள்ளுதல்.
2. பயிர்கள், அவைகளின் விளைச்சல், மக்கட் தொகை, நிறுவனங்கள், ஆறுகள் மற்றும் பல செய்தி பிரிவுகள் பற்றி புரிந்துககொள்ளுதல்.
3. நம்முடைய பிரிவில் காணப்படும் இயற்கை வளங்கள், வன விலங்குகளின் வாழ்க்கை, பறவைகள் சரணாலயங்கள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
4. கலை, இலக்கியம், விளையாட்டுகள் மற்றும் அரசியல் முதலான துறைகளில் பிரபலமானவர்களை பற்றி அறிந்து கொள்ளுதல்.

© KTBS NOT TO BE REPUBLISHED

1. கருநாடகத்தின் நிர்வாக பிரிவுகள் :

கருநாடகம், நமது மாநிலமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது மாநிலத்திற்கென்று ஒரு வரலாறு உண்டு. வரலாற்றிற்கு முந்தைய கந்காலத்திலேயே நமது மாநிலத்தில் பல ஸ்தானங்கள் காணப்பட்டன. இப்பாடத்தில் நம்முடைய மாநிலத்தின் நான்கு நிர்வாகப் பிரிவுகளின் முக்கியத்துவத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆங்கிலேயர் ஆட்சியின் போது, பல்வேறு மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. மாவட்ட தலைநகரங்கள், கால போக்கில் மாற்றி அமைக்கப்பட்டன. சில மாவட்டங்கள் சிறிய அளவிலும், சில பரந்தும், விரிந்தும் காணப்பட்டன.

மாவட்ட வாரியாக கருநாடகம்

@KTBS NOT TO BE REPUBLISHED

நிர்வாக முறைக்காக நமது மாநிலம் நான்கு வருவாய் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

பெங்களூரு பிரிவு (ஒன்பது மாவட்டங்கள்)

மைசூர் பிரிவு (எட்டு மாவட்டங்கள்)

பெல்காம் பிரிவு (ஏழு மாவட்டங்கள்)

கலபுர்கி பிரிவு (ஏழு மாவட்டங்கள்)

மொத்தம் முப்பத்தொரு மாவட்டங்கள் ஆகும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட ஆட்சியர் (துணை ஆணையர்) இதேப்போன்ற, பிரிவுக்கு ஒரு பிரிவு அதிகாரி (மண்டல ஆணையர்) உள்ளார். இப்பகுதியில் நான்கு பிரிவுகளில் உள்ள மாவட்டங்கள், அவற்றின் சிறப்பியல்கள், இயற்கை வளங்கள், பயிர்கள், நீர்வளங்கள் ஆறுகள், காடுகள், தட்பவெப்ப நிலைகள், கலை, இலக்கியம், நாட்டுப்புறவியல், விளையாட்டு, திருவிழாக்கள் போன்றவற்றை பற்றி அறிந்து கொள்ளலாம்.

1.1 பெங்களூரு பிரிவு

கருநாடகத்தின் தலைநகரம் பெங்களூரு ஆகும், இது ஒரு கருநாடகாவின் ஆட்சி நிர்வாக வருவாய் பிரிவாகும், பெங்களூரு பிரிவில் 9 மாவட்டங்கள், அவை பெங்களூரு நகரப்புறம், பெங்களூரு கிராமப்புறம், கோலார், சிக்கபள்ளாபுரம், பெங்களூரு தெற்கு (ராமநகர), துமுக்கூரு, சித்ரதுர்கா தாவனகேரே மற்றும் சிவமொகா. (நில வரைப்படத்தை காணவும்) கருநாடகத்தின் தென்பிரிவில் பெங்களூரு அமைந்துள்ளது.

NOT TO BE REPUBLISHED @KTBS

1.1.1 வரலாற்றுப் பின்னணி :

பெங்களூர் பிரிவிற்கு, கருநாடக போன்ற பழமையான வரலாற்று பின்னணி உள்ளது. பெங்களூரு பழங்கால மன்னர்களான கங்கர்கள் வம்சத்தின் தலைநகரம் குவலல்லாபுரம் இன்றைய கோலார் ஆகும். கங்கர்களின் வீழ்ச்சிக்கு பின்னர் அவர்களின் பகுதிகளை சோழர்கள், ஹொய்சளர்கள் விஜயநகர மன்னர்கள், மைசூர் ஒடயர்கள் மற்றும் பீஜாப்பூரின் ஆதில்ஷாஹி மன்னர்கள் ஆட்சியின் கீழ் வந்தன. விஜயநகர பேரரசின் பாளையக்காரர்கள், குறுநிலமன்னர்கள் ஆட்சி முறையிலுள்ள நிர்வாகிகளை அந்தந்த பகுதிகளில் நியமித்தனர். இவ்விதமான பகுதிகள் ‘‘பாலே பட்டு’’ என்றழைக்கப்படுகின்றன.

பாளையக்காரர்களுள், தலைவர்கள் (நாயக்கர்கள்) மற்றும் விஜயநகர மன்னருடன் ஒப்பந்தம் செய்துக்கொண்டனர். முக்கியமான கெலதி, சித்திரதுர்கா, யலஹங்கா மற்றும் சிக்கப்பள்ளாபுரா முக்கியமான பாலேபட்டுகள் ஆகும்.



பெங்களூரு பிரிவின் மாவட்ட வாரியான வரைப்படம்

1.1.2 இயற்கை வளங்கள் :

இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருட்கள் இயற்கை வளங்களாகும் ஆறுகள், காடுகள், நீர் வீழ்ச்சிகள், விலங்குகள், மண், தாதுப்பொருட்கள் போன்றவைகளை இயற்கை வளங்களாக நமக்களித்துள்ளன. பெங்களூரு பிரிவு பகுதிகளில் வெப்பமண்டல பருவகாற்று காலநிலை நிலவுகின்றன. பெங்களூரு மாவட்டங்கள் முழுவதும் ஒரேமாதிரியான தட்பவெப்ப நிலை நிலவுவதில்லை, கோலார் அதிக வெப்பமண்டல பகுதியாகும். சிவமொகா அதிக அளவில் மழையை பெறுகின்றது. அதேசமயம் சித்திரதுர்கா குறைந்த அளவு மழையை பெறுகின்றன. பிற மாவட்டங்கள் தும்கூரு, தாவனகரே, பெங்களூரு தெற்கு (ராமநகர) மற்றும் சிக்கபள்ளாபுரா, பெங்களூரு கிராமப்புறம் போன்ற மாவட்டங்கள் மிதமான மழையை பெறுகின்றன.

மேற்கு தொடரிலிருந்து ஏராளமான ஆறுகள் உற்பத்தியாகின்றன. சில முக்கிய ஆறுகளான வட பினாகினி, தென் பினாகினி, வேதாவதி, சிம்சா, துங்கபத்ரா, சராவதி, வரதா முதலியனவைகளாகும். சராவதி நதி, மேற்கு நோக்கி பாய்கின்றது. உலக புகழ்வாய்ந்த ஜோக் நீர்வீழ்ச்சி சிவமொகா மாவட்டத்திலும், முத்தியாலாமடு நீர்வீழ்ச்சி பெங்களூரு

©KTBS NOT TO BE REPUBLISHED

மாவட்டத்திலும் உள்ளன. இப்பகுதியில் நுற்றுக்கணக்கான ஏரிகள் உள்ளன. சிவமொகாவில் காஜனூர் அல்லது துங்கபத்ரா அணைகட்டுகள் கட்டபட்டுள்ளன. இப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஏரிகள் உள்ளன. மைசூர் மன்னர்கள் ஏராளமான அணைகளை கட்டினர், வாணிவிலாஸ் சாகரா அணை நீர்பாசன திட்டமாக அமைந்துள்ளது. இப்பாசன முறை சித்திரதுர்கா மாவட்டத்தில் ஹிரியூறு தாலுக்காவில் உள்ளது. இதேப்போன்று மார்கோண ஹல்லி நீர்வீழ்ச்சி தும்கூரு மாவட்டத்தின் குனிகல் தாலுக்காவில் உள்ளது.

சுற்றுத் சூழல் மாசுபடுதல், காடுகளை அழித்தல், அதிகளவில் நகரமயமாக்குதலினாலும் ஏராளமான ஏரிகள் வறண்டு போகின்றன. பெங்களூரு நகரபுறத்தில் பல்வேறு ஆறுகள் அழிவின் விளிம்பை எட்டியுள்ளன. ஏராளமான ஏரிகள் ஆக்கிரமிக்கப்படுவதாலும் அப்பகுதிகள் அழிந்து நாசமடைந்து வருகின்றன. இக்காரணங்களால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அணைகளையும், நிலத்தடி நீரினையும் பாதுகாப்பதில், நாம் அனைவரும் கவனம் செலுத்துவது இன்றியமையாகதாகும்.

பெங்களூரு மாகாணங்களில் ஏராளமான தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன, கருநாடகாவில் கோலார் தங்கச் சுரங்கங்களில், மிக வளமான தங்கச்சுரங்க படிவங்கள் உள்ளன. ஆனால் தற்போது எதிர்பாராதவிதமாக சுரங்கத்தில் தங்கம் கிடைப்பதில்லை. சித்திரதுர்காவிலும் துமக்கூரிலும் இரும்பு தாதுவும், செம்பும் நிறைந்துள்ள சுரங்கள் காணப்படுகின்றன.

1.1.3 காடுகள், வனவிலங்குகள் மற்றும் தேசிய பூங்காக்கள் :

பெங்களூரு பிரிவில், சிவமொகா மாவட்டத்தில் அடர்ந்த காடுகள் உள்ளன. பெங்களூரு நகரப்புற மாவட்டத்தில் குறைந்த பரப்பளவு கொண்ட காடுகள் உள்ளன. இப்பிரிவின் மாவட்டங்களில் பசுமைநிறைந்த காடுகள் முதல் இலையுதிர் காடுகள் வரை பல்வேறு வகையான காடுகள் உள்ளன. சயாத்ரி மலைத் தொடரில் உள்ள கணவாய்கள், சிவமொகா மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளில் அமைந்துள்ளன. இக்காடுகளில் மூங்கில், ஆலமரம், புளியமரம், சந்தன மரம், திண்டிகா, தேக்கு, ஜாலி, மாமரம் மற்றும் வேப்பமரங்களும் காணப்படுகின்றன.

ஏராளமான மக்களுக்கு இக்காடுகள் வாழ்வாதாரமாக அமைந்துள்ளன. சித்திரதுர்கா மாகாணத்திலுள்ள மிக உயரமான மலைப்பகுதியில் ஹாலு ராமேஷ்வரா குன்றுகள் காணப்படுகின்றன கவேலதுர்கா, சந்திரகுத்தி, கொடசாத்திரி மற்றும் நந்திதுர்கா முதலியவன மற்ற சிறப்புமிக்க குன்றுகள் ஆகும்.

© KTBS Not to be republished

இப்பிரிவில் பல்வேறு வகையான வனவிலங்குகள் வாழ்கின்றன, காட்டுப்பூனை, புலி, சிறுத்தை, காட்டெருமை, காட்டுப்பன்றி, மான் மற்றும் ஓநாய் காணப்படுகின்றன. காடுகளிலுள்ள வனவிலங்குகளை பாதுகாக்க ஆங்காங்கே வனவிலங்கு சரணாலயங்களும், தேசியபூங்காக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பெங்களூர் பிரிவிலுள்ள முக்கிய சரணாலயங்கள்.

ஜோகிமட்டி வனவிலங்கு சரணாலயம் - சித்திரதுர்கா, பன்னரகட்டா தேசிய பூங்கா - பெங்களூரு, நகரப்புறம் பத்ரா வனவிலங்கு சரணாலயம் - சிவமொகா மாவாட்டம், சராவதி மற்றும் செட்டிவிள்ளியில் வனவிலங்கு சரணாலயம்-சிவமொகா மாவட்டத்தில் அமைந்துள்ளன. குடவி மண்டகெத்தேயின் பறவைகள் சரணாலயமும், சிவமொகாவில் காணப்படுகின்றன. துமக்கூரில் காக்கலடு பறவைகள் சரணாலயமும், ராமதேவர குன்றில் கழுகுகளின் சரணாலயம்-பெங்களூரு தெற்கு (ராமநகர), ஜெயமங்கலி- வனவிலங்கு சரணாலயம் துமக்கூரிலும் உள்ளன.

புலி, பன்னேர்கட்டா வனவிலங்கு தேசிய பூங்கா

குழந்தைகளே, நீங்கள் வனவிலங்குகளை காடுகளில் காண விரும்புவீர்களா? அப்படி என்றால் வனவிலங்குகளான புலி, கரடி, யானை, சிறுத்தை மான் இப்பிரிவு பகுதியிலுள்ள வனவிலங்கு சரணாலயம் மற்றும் பறவைகள் சரணாலயத்திற்கு சென்று காணுங்கள். காடுகளில் உள்ள விலங்குகளை பார்த்து மகிழுங்கள்.

1.1.4 வேளாண்மை மற்றும் தொழில் வளர்ச்சிகள்:

பெங்களூரு மாகாணங்களில் வேளாண்மை முக்கிய தொழிலாகும். மக்கள் வேளாண்மைக்காக மழையை சார்ந்திருக்கும் சூழ்நிலை

NOT TO BE REPUBLISHED

காணப்படுகின்றது. ஏனென்றால் இது ஒரு வறண்ட நிலப்பகுதியாகும். சிவமொக்கா மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான ஏரி நீர்ப்பாசன பகுதிகள் உள்ளன. இப்பகுதியில் மணலில் சிவப்பு மண் கலந்து அதிகளவில் காணப்படுகின்றன. மேலும் சில பகுதிகளில் மண் வளமானதாக உள்ளன. இப்பகுதியின் முக்கிய பயிர்கள் கேழ்வரகு, மக்காச்சோளம், நெல், நிலக்கடலை மற்றும் பருப்பு வகைகள் முதலியான. தேங்காய், வெற்றிலை, பாக்கு, பருத்தி, கரும்பு முதலியன வணிகப் பயிர்களாகும். முசுக்கொட்டையிலிருந்து முக்கியமாக பட்டுப்பூச்சி வளர்த்தல் தொழில் வளர்ச்சியடைந்துள்ளன, பெங்களூரு தெற்கு (ரா888888888888888888மநகர), கோலார், சிக்கபள்ளாபுரம் மற்றும் பெங்களூரு கிராமப்புறங்களில் முசுச்கொட்டை (மல்பெரி) செடியை அதிகளவில் பயிரிடுகிறார்கள். பழவகைகளான சப்போட்டா, பப்பாளி, பலாப்பழம், ஆரஞ்சு மற்றும் வாழைப்பழம் முதலியன இப்பகுதியில் பயிரிடப்படுகின்றன.

இப்பகுதியிலுள்ள மக்கள் கேழ்வரகு களி மற்றும் அரிசியை பயன்படுத்துகின்றனர். கேழ்வரகிலும், அரிசியிலும் ரொட்டி தயாரித்து சாப்பிடுகின்றனர். தற்போது கோதுமையிலும் இதுபோன்ற உணவுப்பொருட்கள் சமைத்து உட்கொள்வதை பழக்கபடுத்திக் கொண்டுள்ளனர். திருவிழா காலங்களில் பலவித இனிப்புகளாலான பாயாசம், போளி, இனிப்பு அல்வா, சேமியா முதலியன தயாரிக்கப்படுகின்றன. மேலும் சிலவிழாக்களில் அசைவ உணவும் சமைத்து உண்ணும் வழக்கம் உள்ளன. ஒவ்வொரு மாவட்டம் மற்றும் தாலுக்கா மையங்களிலும் விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதற்கு அரசாங்கம் வேளாண் சந்தைகளை ஏற்படுத்தி உள்ளன. விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களை சேமிப்பதற்கு தானியக்கிடங்குகளை அரசு கட்டியுள்ளது.

NOT TO BE REPUBLISHED @KTBS

தொழில்கள் :

சர்.எம்.விசுவேசுவரய்யா



நால்வடி கிருஷ்ணராஜ ஒடையர்

நமது பல்வேறு அரசர்கள், திவான்கள் காலத்தில் கைத்தொழில்கள் வளர்ச்சியடைந்தன. கே. ஷேஷாத்ரி ஐயர், அவர்கள் திவானராக இருந்த காலத்தில் சிவனசமுத்திரம் மின் உற்பத்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டன. கே.ஜி.எப்.ல் தங்க சுரங்க திட்டம் ஆரம்பமானது பின்னர் சர்.எம். விசுவேசுவரய்யா, மிர்சா ஸ்மாயில் அவரின் காலத்தில் அநேக கைத்தொழில்கள் ஆரம்பமாகின. முக்கியமாக சர்.எம். விசுவேசுவரய்யாவின் பங்களிப்பு இன்றியமையாவதாகும். நம்முடைய மாநிலத்தின் தொழில் பிரிவுகளை தோற்றுவித்தவர் சர்.எம். விசுவேசு வரய்யா ஆவார். நால்மடி கிருஷ்ணராஜா உடையாருடன், சர்.எம். விசுவேசுவரய்யா இணைந்து செயல்பட்டார்,

பெங்களூரு இந்தியாவின் தொழிற்சாலைகளின் மையமாக விளங்குகின்றது. 1923-ல் சிவமொகாவில். இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள், நிறுவப்பட்டன. விசுவேசுவரய்யா இரும்பு எஃகு தொழிற்சாலை என்று என்றழைக்கப்படுகின்றது. 1936-ல் காகிதத் தொழிற் சாலை நிறுவப்பட்டன. மாநிலத்தில் முதன்மையாக பத்ராவதியில் சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டன. துமகூரு மாவட்டத்திலுள்ள அம்மச்சந்திராவில் பிர்லா சிமெண்ட் தொழிற் சாலை உள்ளன. பெங்களூரில் தகவல் தொழில் நுட்ப தொழிற் சாலைகள் (IT) மற்றும் உயிரி தொழில்நுட்ப தொழிற்சாலைகளுமுள்ளன. தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பிற்கான ஒரு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன.

ஆடைகள் ஏற்றுமதியில் கருநாடகம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. நம் பிரிவில் உள்ள தொட்டபள்ளாபுரம், ஆனெக்கல் போன்ற நகரங்களில் அரசு ஆயத்த ஆடை பூங்காக்களை நிறுவி உள்ளது. பெங்களூரில் விமான தொழிற்சாலை, மின்னணுவியல் தகவல் தொழில் நுட்பம் (IT) மற்றும் உயிர் தொழில் நுட்பம் (BT) தொழில்களில் பெங்களூரு பரப்பரப்பாக உள்ளன. இவற்றில் சில பொதுத்துறை கம்பெனிகள் இடம் பெறுகின்றன. மற்றவை தனியாருக்கு உரியவைகள் ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

1.1.5 கலை, இலக்கியம், நாட்டுப்புறவியல், நாடகம் மற்றும் நடனம்;

இப் பிரிவு பண்டைய காலங்களிலிருந்து அதன் கலை மற்றும் இலக்கியத்திற்கு பெயர் பெற்றது. 12ஆம் நூற்றாண்டில் வசன இலக்கியத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கிய. அக்காமகாதேவி மற்றும் அல்லமபிரபு ஆகியோர் சிவமொக மாவட்டத்தின் பெலகாவியை சார்ந்தவர்கள். அதேபோன்று தாசா பரம்பரையில் அங்கம் வகித்த ஸ்ரீபாதாராயா, புரந்தரதாசா மற்றும் பலர் பொங்களூருப் பிரிவை சார்ந்தவர்கள் ஆவர்.

நவீன காலத்தில் ராஷ்டிரகவி மற்றும் ஞானபீடவிருது பெற்ற குவெம்பு இப்பிரிவைச் சார்ந்தவர் ஆவார்.

மாஸ்தி வெங்கடேஷ அய்யங்கார்

குவெம்பு

டி.ஆர் அனந்த மூர்த்தி

ஜி.எஸ். ஷிவருத்ரப்பா

நிஸார் அஹமத்



பி. லங்கேஷ்

டி.எ. குண்டப்பா

அனுபமா நிரஞ்சனா

எம்.கே இந்திரா

என் டிஸோஜ

சித்தலிங்கய்யா

மேலும் இலக்கியதுறையில் சாதனை புரிந்த எழுத்தாளர்களுக்கான ஞானபீட விருது மாஸ்தி வெங்கடேச ஐயங்கார் மற்றும் டாக்டர் T.R.அனந்தமூர்த்திக்கு வழங்கப்பட்டது. இன்றைய நவீன காலங்களில் குவெம்பு, D.V குண்டப்பா, P. லங்கேஷ், T.P கைலாசம், M.K இந்திரா, த. ரா. சு, டாக்டர் அனுபமா நிரஞ்சன், ஹ.மா. நாயகா, எம்.வி.சீதா ராமய்யா, பி.ஜி.எல். சுவாமி, கே.வி. சுப்பண்ணா, ஜி. வெங்கட சுப்பய்யா, ஜி.எஸ். சிவருத்தரப்பா, பரகூரு ராமசந்திரப்பா, டாக்டர், டி. ஆர், நாகராஜ், டாக்டர். சித்தலிங்கய்யா, நா. டிஸோஜா, தொட்ட ரங்கே கௌவுடா, பிரதிபாநந்தகுமார் ஆகியோர் கன்னட இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தவர்கள் ஆவர்.

இலக்கிய துறை போன்றே நாடகத்துறையிலும் சாதனை மகத்தானது. குப்பி வீரண்ணாவின் பெயர் கன்னட நாடக துறை வரலாற்றில் இன்றும் புகழோடு நிலைத்து நிற்கின்றன. நாடக ரத்னா ''நட சார்வ பௌமா'' போன்ற விருதுகள் பெற்றவர் ஆவார். கருநாடக நாடக வரலாற்றில் சுப்பையா நாயுடு ஒரு பிரபலமான நபராக விளங்குகின்றார். முதல் கன்னட திரைஉலக படமான 'சதிசுலோசனாவில்' கதாநாயகனாக நடித்தவர் ஆவார். K. ஹிரன்னயா சிறந்த நகைச்சுவை நடிகர் என்று பெயர் பெற்றார். K. ஹிரன்னயா மற்றும் அவரது மகன் மாஸ்டர் ஹிரன்னயா கலாச்சார நகைச்சுவைக்கு, மிக முக்கிய பங்காற்றியுள்ளனர். திருமதி. மாயாராவ் அவரின் பங்களிப்புகள், நடனத்துறைக்கு அளவிடற்கரியதாகும். இவர் பெங்களூரைச் சார்ந்தவர். பெங்களூர் திரைப்படத்துறையின் மையமாக விளங்குகிறது. திரைப்படத்துறை வளர்ச்சிக்கு Dr. ராஜ்குமார், Dr. விஷ்ணுவர்தன், சங்கர்நாக் போன்றவர்களின் பங்களிப்பு போற்றத்தக்க நினைவுகளாக உள்ளன. இப்பிரிவு நாட்டுப்புற இலக்கியம் மற்றும் கலைக்கு பிரபலமானது. பிரபல நாட்டுப்புறவியலாளரான எச்.எல். நாகே கவுடாவால் நிறுவப்பட்ட 'ஜனபதாலோக' ராமநகர மாவட்டத்தில் உள்ளது.

Dr. ராஜ்குமார்

Dr. விஷ்ணுவர்தன்

அம்பரீஷ்

சங்கர்நாக்

மாயாராவ்

சுப்பய்யா நாயுடு

குப்பிவீரண்ணா

பெங்களூரு பிரிவின் பிரபலமான நாட்டுப்புற கலைகள்:

பெங்களூரு பிரிவில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் கரக உற்சவம், ஒரு நாட்டுப்புற கலையாகும். தென்கன்னடாவிலிருந்து

மற்றொரு புகழ்பெற்ற நாடகவியல் கலை சோமண்ணா குனிதா என்பதாகும். சிறப்புமிக்க நாட்டுப்புற கலைகளான மூடலபாலயா, யக்ஷகானா, காருடி குனிதா, 'டொல்லு குனிதா' மற்றும் 'கம்சால குனிதா' போன்ற வேறு சில புகழ்பெற்ற நாட்டுபுற கலைகளும் உள்ளன. கலைத்துறையில் ஆர்.எஸ் நாயுடு ருமலே சென்னபசவய்யா, வெங்கடப்பாவின் பங்களிப்பு தனித்துவமானது.

ஜனபத லோக

கரக உற்சவம்

வெங்கடப்ப கலைக்கூடம்

1.1.6 கல்வி மற்றும் ஆரோக்கியம்:

பெங்களூரு மாகாணம் கல்விக்குத் தொடர்பான பல சாதனைகளைப் புரிந்துள்ளன. பாரத ரத்னா விருதினைப் பெற்ற இருவர் இம்மாகாணத்திற்கு உட்பட்ட கோலார் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். அவர்களில் ஒருவர் சர்.எம் விஷ்வேஷ்வரய்யா, மற்றொருவர் விஞ்ஞானி சி.என்.ஆர்.ராவ் ஆகும். நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி.ராமன் அவர்கள் பெங்களூரில் ஆய்வு நடத்தினவர் ஆவார்.

சித்தகங்கா மடம்

ஸ்ரீ சிவகுமார சுவாமிஜி

KTBS NOT TO BE REPUBLISHED

பெங்களூரு பிரபலமான கல்வி மையமாக திகழ்கின்றன. இங்கு ஏராளமான பொது மற்றும் தனியார் பல்கலைகழகங்கள் உள்ளன. அது மட்டுமல்லாமல் மத்திய அரசின் ஆராய்ச்சி மையமும் அறிவியல் சோதனைக்கூடமும் இங்குள்ளன. பெங்களூரு, துமகூரு, சிவமொகா மற்றும் தாவனகெரேயிலும் பல்கலைக்கழகங்கள் உள்ளன. பெங்களூரில் வேளாண் பல்கலைக்கழகம் உள்ளது. சுதந்திரத்தின் முன்னரே, அரசு, தொடக்கக் பள்ளி கல்விக்கு ஊக்கம் அளித்தள்ளன. பல சமய நிறுவனங்கள், கல்வித் துறையில் அரும்பணியாற்றின. சித்தகங்கா மடத்தின் தலைவரான ஸ்ரீ சிவகுமார சுவாமிஜி, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி மற்றும் உணவு சலுகைகளை அளித்துள்ளார். பெங்களூரு தெற்கு (ராமநகர) மாவட்டத்தில் பிறந்த மற்றொரு மடாதிபதியான ஸ்ரீபாலகங்காதர நாத சுவாமிஜியின் தலைமையில் வளர்ச்சியடைந்த ஆதி சுன்சுனகிரி மடத்தின் கல்வி சேவைகள் குறிப்பிடத்தக்கவைகள். அடிப்படை கல்வி மற்றும் தொழிற்கல்வி கல்லூரிகளையும் செயலாற்றுகின்றன. சித்திரதுர்காவின் முருக ராஜேந்திர மடம், சிரிகேரியின் தரளபாளு மடம் போன்றவைகளின் கல்வி சேவைகளும் குறிப்...

ஸ்ரீ பாலாகங்காதர் சுவாமிஜி

ஆரோக்கியத்தின் நோக்கிலும், இம்மாகாணம் மகத்தான சாதனை புரிந்துள்ளன. தொற்று நோய்களும் பரவலாக தடுக்கப்பட்டன. சிசுகொலை விகிதம் குறைந்துவிட்டன. பெரியம்மை மற்றும் போலியோ முற்றிலும் ஒழிக்கப்பட்டன. கிராமப்புறங்களில் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் ஊட்டச்சத்து குறைபாடு காணப்படுகின்றன. கிராமங்களில் அடிப்படை சுகாதார மையங்களும், அடிப்படை கிளை மையங்களும், மக்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குகின்றன. ஒவ்வொரு மாவட்ட, சுகாதார மையங்களிலும், சுகாதாரமிக்க மாவட்டத்தில் மருத்துவமனைகள் உள்ளன. பெரிய கிராமங்களில் சமுதாய சுகாதார மையங்கள் உள்ளன. தாலுக்கா மையங்களில், தாலுக்கா மருத்துவமனைகள் உள்ளன. மகப்பேறு ஆரோக்கியத்தை மேம்படுத்த அரசாங்கம் பல்வேறு அடிப்படை ஆரோக்கிய மையங்களை நிறுவி 24 /7 (எப்பொழுதும் இயங்கக்கூடியவை) மையங்கள் என அறிவித்துள்ளன. கிராமப்புறங்களில் கர்ப்பிணி பெண்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்கு நடமாடும் வாகன வசதிகள் வழங்கப்படுகின்றன.

1.1.7 கலாச்சார வளங்கள் :

பெங்களூரு பிரிவு, கலாச்சாரத்திற்கு சிறந்து விளங்குகின்றன. காடுகள், விலங்குகள், ஆறுகள், பள்ளதாக்குகள், சமயம் சார்ந்த இடங்கள்,

©KTBS NOT TO BE REPUBLISHED

மலைக்கோயில்கள், போக்குவரத்து மையங்கள், பண்பாடு திருவிழாக்கள், ஊர் திருவிழாக்கள் போன்றன மிக உன்னதமான, கலாச்சாரத்திலிருந்து உருவானது, மாநிலத்தின் வளர்ச்சிக்கு அரசியல் தலைவர்களின் பங்களிப்பு மகத்தானது. கருநாடக ஐக்கியத்திற்கு முன்னோடியாக திகழ்ந்தவர்களில் கெங்கல் ஹனுமந்தையாவும் ஒருவர் ஆவார். அவர் இப்பிரிவைச்சார்ந்தவர் இவர் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்தில் விதானசவுதா கட்டப்பட்டது. மற்றொரு கருநாடக முன்னோடியாக திகழ்ந்தவர் எஸ். நிஜலிங்கப்பா முதல் அமைச்சராக இருந்தார். இவர் கட்டுமான பணிகளை கைக்கொண்டார். சுற்றுப்புறங்களில், செடிகளை நட்டு வளர்த்து வந்த சாலுமரத திம்மக்காவை மரங்களை வளர்த்து வரும் முன்னோடி என்று அழைப்பர். பெங்களூரைச் சார்ந்த கிரிக்கெட் நட்சத்திரம் அனில் கும்ளே, நம் நாட்டிற்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். யோகா துறைக்கு B.K.S ஐயங்கார் மற்றும் மல்லாதிஹள்ளி ஸ்ரீராகவேந்திரா சுவாமி ஆற்றிய பங்கு மிக மகத்தானது. இப்பிரிவு பகுதிகளில் ஏராளமான எழில் மிகுந்த இடங்களும் உள்ளன.

விதான செளதா

லால்பாக்

NOT TO BE REPUBLISHED

1.1.8 சுதந்திர போராட்ட வீரர்கள்:

கெங்கல் ஹனுமந்தையா

S. நிஜலிங்கப்பா

பாரதத்தின் சுதந்திரப் போராட்டத்தில், இப்பிரிவின் பல முக்கியஸ்தர்கள் பங்கு பெற்றனர். மைசூர் இராஜ்ஜியத்தின் முதல் முதலமைச்சராக இருந்த கெ.சி.ரெட்டி, இரண்டாம் முதலமைச்சர் கெங்கல் ஹனுமந்தய்யாவுடன், முதலமைச்சர் எச். நிஜலிங்கப்பா, எச்.எஸ். துரைசாமி, கடிதாள் மஞ்சப்பா, தி.தா.ஷர்மா, பாகீதரம்மா முதலானவர்கள் சுதந்திர போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள் ஆவர். கெங்கல் ஹனுமந்தய்யா மற்றும் எச். நிஜலிங்கப்பா கர்நாடக ஒருங்கிணைப்பாளர்கள் ஆவார்கள்.



சாந்தவேரி
கோபாலகௌடா

சாந்தவேரி கோபால் கவுடா, கன்னட நாட்டை கண்டு பிடித்த சிறந்த இலட்சிய அரசியல்வாதி ஆவார். 1923 ஆம் ஆண்டு மார்ச் 14 ஆம் தேதி சிவமோகா மாவட்டத்தின், தீர்த்தஹள்ளி தாலுகாவில் உள்ள அரகாவில் பிறந்த, 28 வயது இளைஞரான இவர், 1951 ஆம் ஆண்டு காகோடு நில இயக்கத்தில் நுழைந்து கைது செய்யப்பட்டார். குத்தகை தாரர்களின் நிலப் போராட்டமும் கோபால கவுடாவால் சமாஜவாதி கட்சிப் போராட்டமாக அங்கீகரிக்கப்பட்டன. கன்னடம் பேசும் பகுதிகள் மற்றும் மாநிலத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் மைசூர் என்று இருந்ததை கர்நாடகா என்று பெயர் மாற்றும் போராட்டத்தில் கோபால் கவுடாவும் முக்கியமானவர் ஆவார். சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள், வாழ்க்கைமுறை, அவரை கர்நாடகம் கண்டிராத அரசியல்வாதிகளில் ஒருவராக கருதப்பட்டார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. பெங்களூரு பிரிவில் .... மாவட்டங்கள் உள்ளன.
2. பெங்களூரு பிரிவில் அதிக மழை பொழியும் இடம் ....
3. பன்னர்கட்டா தேசிய பூங்கா .... மாவட்டத்தில் உள்ளது.
4. முசுக்கொட்டை (மல்பெரி) இலை .... தொழிலுக்கு மூலப்பொருளாகும்.
5. பிரபலமான நாட்டுபுற அருங்காட்சியம் ‘ஜனபத லோக’ வை நிறுவியவர் .... ஆவார்.
6. பெங்களூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற திருவிழா ....

7. மைசூரு மாவட்டத்தின் முதல் முதலமைச்சர் ....

8. பெங்களூரு தெற்கு (ராமநகர) மாவட்ட பறவை சரணாலயத்தில் .... பறவைகள் பாதுகாக்கப்படுகிறது.

பின் வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் :

9. பண்டைய கருநாடகவில் ஆண்ட மூன்று அரச வம்சங்களை குறிப்பிடுக.

10. இப்பிரிவில் ஆட்சி செய்த இரு பாலேபட்டுகளின் பெயர்களை குறிப்பிடவும்.

11. இயற்கை வளங்கள் என்றால் என்ன? உதாரணம் தருக.

12. பெங்களூரு பிரிவில் தண்ணீர் பற்றாக்குறைக்கான காரணங்கள் யாவை?

13. பெங்களூரு பிரிவில் உள்ள ஏதேனும் இரண்டு நீர் வீழ்ச்சிகளின் பெயர்களை குறிப்பிடுக.

14. பெங்களூரு பிரிவில் உள்ள மிக உயரமான மலையின் பெயரை எழுதுக.

15. பெங்களூரு பிரிவில் உள்ள இரண்டு பறவைகள் சரணாலயங்கள் பெயர்களை குறிப்பிடுக.

16. பெங்களூரு பிரிவின் முக்கிய உணவு பயிர்கள் யாவை?

17. பெங்களூரு பிரிவில் எந்தெந்த இடங்களில் ஆயத்த ஆடை பூங்கக்கள் அமைக்கப்பட்டுள்ளன?

18. பெங்களூர் பிரிவில் இருந்து மூன்று ஞானபீட விருது வென்றவர்களின் பெயர்களை குறிப்பிடுக.

NOT TO BE REPUBLISHED @KTBS

செயல்பாடுகள் :

* பன்னார்கட்டா தேசிய பூங்காவிற்கு சென்று பூங்காவிலுள்ள விலங்குகளின் பட்டியல் செய்து. வன விலங்குகளின் படங்களை சேகரித்து அவற்றை குறித்து ஒரு அறிக்கை தயாரிக்கவும்.
* பெங்களூரில் உள்ள முக்கியமான தொழிற் சாலையின் பட்டியலை தயாரித்து, அவற்றின் படங்களை சேகரித்து அறிக்கை தயாரிக்கவும்.

1.2 மைசூரு பிரிவு



மாவட்ட வாரியாக மைசூரு பிரிவு வரைபடம்

நமது மாநிலத்தின், மற்றொரு நிர்வாக பிரிவு மைசூரு ஆகும். ஆரம்பத்தில் உடையார் அரசர்களின் தலைநகரம் மைசூராகும். இப்பிரிவில் மைசூரு, மண்டியா, ஹாசன், சிக்கமகளூர், உடுப்பி, தென்கன்னடா, சாமராஜநகர் மற்றும் குடகு போன்ற எட்டு மாவட்டங்கள் உள்ளன. இப்பிரிவின் நிர்வாக மையம் மைசூரு ஆகும். இப்பிரிவில் உள்ள மிக வளமான ஆறுகள், மலைத்தொடர்கள், காடுகள், வனவிலங்குகள், காப்பி தோட்டங்கள், கடற்கரை மற்றும் துறைமுகங்கள் போன்றவைகள் சிறப்பு வாய்ந்தவைகள் ஆகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

1.2.1 வரலாற்று பின்னணி

சிக்கதேவராஜ உடையார்

மைசூரின் அரசியல் வரலாறு கங்கர்கள் ஆட்சி புரிந்த காலத்திலிருந்து ஆரம்பமாகின்றது. கங்கர்களின் தலை நகரம் தலக்காடு ஆகும், பின்னர் மைசூரை சோழர்கள், ஹொய்சலர்கள் மற்றும் விஜயநகர மன்னர்கள் ஆண்டனர்.

பல ஆண்டு காலமாக, மைசூரு பிரிவை உடையார் அரசர்கள் ஆண்டு வந்தனர். சில ஆண்டுகள் காலம் ஹைதர் அலியும் அவரது மகன் திப்பு சுல்தானும் ஆண்டு வந்தனர். வரலாற்று பின்னணியில் மற்றும் புராணங்களின் அடிப்படையில், மைசூரை மகிஷ நாடு என்று

டிப்பு சுல்தான்

அழைக்கபட்டது. புராணக்கதைப்படி தேவி பார்வதி சாமுண்டேஷ்வரியாக உருவமெடுத்து இராக்ஷசனான மகிஷாசூரணை கொன்றார். மகிஷாசூரணை கொன்ற இடமே மைசூர் எனப் பெயர் பெற்றது. உடையார் அரசின் முதல் அரசர் யதுராயா ஆவார். சிக்கதேவராஜ உடையார் புகழ் வாயந்தவராகவும் விளங்கினார். அவருக்கு பின்னர் வந்த வாரிசுகள் வலிமை குன்றியிருந்தனர்.

அச்சமயம் சேனாதிபதியாக இருந்த ஹைதர் அலி ஆட்சி முழுவதையும் கைப்பற்றினார். ஹைதர் அலி மற்றும் அவரது மகன் திப்புசுல்தான் பொ.சா. 1761 முதல் பொ.ச. 1799 வரை ஆட்சி செய்தனர். திப்பு ஆங்கிலேயர்களுக்கு எதிராக பல போர் புரிந்தார். திப்பு, ஆங்கிலேயருடன் போர் புரிந்து பொ.ச. 1799 இல் உயிர் நீத்தார்.

திப்பு சுல்தான் இறந்த பின்னர் ஆட்சி பொறுப்பு மீண்டும் உடையரிடமே வந்தன. ஆங்கிலேயர் பொ.ச. 1831-ல் ஆட்சியை தம் வசப்படுத்திக் கொண்டனர், பின்னர் மீண்டும் பொ.ச. 1881-ல் ஆட்சியை உடையரிடமே அளித்தனர். கடந்த 20 ஆம் நூற்றாண்டில் முதல் பகுதியில் நால்வடி கிருஷ்ணராஜ உடையார் ஆட்சியில் பல்வேறு பொது நலத்துறை திட்டங்களான தரமான கல்வி, கலாச்சாரம், நீர்பாசனத்திற்கு முக்கியத்துவம் அளித்தனர். திவானாக இருந்த சர்.எம். விசுவேசுவரய்யா மற்றும் சர். மிர்சா இஸ்மாயில் போன்றவர்களின் காலத்தில் மைசூர் மிகப் பெரிய வளர்ச்சியை கண்டது. தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்த பொ.ச. 1947-ல் மைசூரு சமஸ்தானம், இந்தியக் குடியரசுடன் இணைக்கப்பட்டது.

© KTBS NOT TO BE REPUBLISHED

நால்வடி கிருஷ்ணராஜ உடையார்

சர்.எம். விசுவேசு வரய்யா

சர் பிர்ஷா இஸ்மாயில்

இப்பிரிவின் பல்வேறு மாவட்டங்களை பல அரசு வம்சங்கள் ஆட்சி புரிந்த வரலாறு உண்டு. குடகு பிரதேசத்தை பல அரச வம்சங்கள் ஆட்சி

ராணி அப்பக்க

புரிந்தனர். ஹாலேரி வம்சம், 17-ஆம் நூற்றாண்டில் தங்கள் ஆட்சியை நிறுவின. அதன் தலை நகரம் பீதனூர் ஆகும். ஹாலேரி மன்னர்களில் தொட்டவீரப்பா புகழ்வாய்ந்த மன்னராவர். இவ்வம்சத்தின் இறுதி மன்னர் ச்க்கவீராஜா ஆவார். இவர் வலிமைகுன்றிய மன்னராக கருதப்பட்டதால், இதனை பயன்படுத்திக் கொண்டு ஆங்கிலேயர் ஆட்சியை கைப்பற்றினர். சுதந்திரத்திற்கு பிறகு குடகு தனி இராஜ்ஜியமாக்கப் பட்டன. ஆனால் பொ.ச. 1956-ல் கருநாடகவுடன் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டன. கௌதி சமஸ்தானம் மற்றொரு அரச வம்சமாக திகழ்ந்தன. உல்லாலாவின் ராணி அப்பக்கா போர்ச்சுகிசியர்களுக்கு எதிர்ராக போர் புரிந்ததாக இங்கு குறிப்பிடப் பட்டுள்ளன.

கருநாடகாவின் கடற்கரை பகுதிகளை துளுநாடு என்று அழைக்கப்பட்டன. துளு நாட்டின் தக்ஷின கன்னடா மற்றும் உடுப்பி மாவட்டங்களை 7-ஆம் நாற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை அலுப்பா அரசவம்சம் ஆட்சி புரிந்தனர். இப்பல்வேறு காலகட்டத்தில் உதயாவர, மங்கலபுர, ஹன்சா மற்றும் பனவாசி அலுப்பா பேரரசுகளின் தலைநகராக விளங்கின. ஏராளமான குறுநில மன்னர்கள் துளுநாட்டை ஆட்சி புரிந்தனர். இப்பகுதியில் சில குறிப்பிட்ட அரசர்கள் புத்திகெய சௌடாரு, பங்கவாடிய பங்கரு, கார்களத்தின் பைரவரசர்கள், காசரகோடின கும்பளெ மன்னர்கள் முதலானவர்கள் ஆவர்.

ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்த கடற்கரை பகுதிகளை கனரா என்றழைத்தனர். அவர்கள் பொ.ச. 1801 - ஆம் ஆண்டிலிருந்து ஆட்சி செய்து வந்தனர். ஆங்கிலேயர் கடற்கரை பகுதிகளை பொ.ச. 1860-ல் வடகன்னடா மற்றும் தென்கன்னடா என்று பிரித்தனர். தென்கன்னடா மாவட்டத்தை பிரித்து பொ.ச. 1997-ல் உடுப்பி மாவட்டம் உருவாக்கப்பட்டன.

1.2.2 இயற்கை வளங்கள் :

இப்பகுதியில் பல்வேறு காலநிலை நிலவுகின்றது. உடுப்பி மற்றும் தென்கன்னடா பகுதி பரந்து விரிந்த கடற்கரை பகுதிகளாகும். இங்கு மலைப்பிரதேசம், அடர்ந்த காடுகள் மற்றும் கடற்கரை சமவெளி பகுதிகள் உள்ளதால் இங்கு வெப்பமண்டல பருவமழை காணப்படுகிறது.

இப்பகுதிகளில் கடுமையான குளிர் மற்றும் மிதமான வெப்ப மண்டல காலநிலை நிலவுகின்றன. மண்டியா மற்றும் மைசூர் மாவட்டங்களில் வறண்ட காலநிலை நிலுவுகின்றன. இப்பகுதியிலுள்ள

NOT TO BE REPUBLISHED @KTBS

உடுப்பி மாவட்டத்தில் அதிகளவில் மழையும், மண்டியா மாவட்டத்தில் மிகக்குறைந்த மழையினையும் பெறுகின்றது. ஏனென்றால் காடுகளிலும் மலைகளிலும் பல்வேறு வகையான தாவர பயிற் வளர்வதற்கு ஏற்ற கால நிலையும், சீதோஷண நிலையும் இங்கு நிலவுகின்றது. முக்கிய உணவுப் பயிர்கள் கேழ்வரகு நெல், உளுந்து, பச்சைபயிறு, சோளம் மற்றும் கொள்ளு ஆகும். வணிகபயிர்களான காப்பி, கரும்பு, புகையிலை, பாக்கு, ஏலக்காய், ஆரஞ்சு, அன்னாசிப் பழம் மற்றும் முந்திரி ஆகும். இந்தியாவில் சிக்கமங்களூர் பகுதியில் முதன்முதலில் காபி பயிரிடப்பட்டன இப்பகுதிகளில் வெற்றிலை ஏராளமாக பயிரிடப்படுகின்றன.

இப்பிரிவு பகுதிகளில் வளமான இயற்கை வளங்கள் காணப்படுகின்றன. குடகு, தென்கன்னடா, மைசூரு, சிக்கமங்களூர் போன்ற மாவட்டங்களில் அநேக காடுகள் உள்ளன. காடுகளில் பலவகையான தேக்கு, சந்தனம், புங்கை, நந்தி, மத்தி போன்ற மரங்கள் இங்கே வளர்கின்றன. இந்த காடுகள் பலவகையான உற்பத்தி பொருள்களுக்கு பெயர்பெற்றவை ஆகும். சிறிய காடுகளில் பிசின், தேன், காட்டு பழங்கள் காணப்படுகின்றன.

இப்பகுதிகளில் சிறிய மற்றும் பெரிய குன்றுகள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை சுப்பிரமணிய குன்று, ஹிமவத் கோபால சுவாமிகுன்று, மலை மாதேஷ்வராகுன்று, பிளிகிரி ரங்கனகுன்று, முள்ளய்யனகிரி, கெம்மன்குண்டி, சாமுண்டி மலை, சந்திர கிரியிலுள்ள சரவணபௌளகொளா மற்றும் இந்திரகிரி முதலானவை புகழ் பெற்றவைகளாகும்.

மைசூரிலுள்ள புகழ்வாய்ந்த அடர்ந்த காடுகள், வனவிலங்குகளின் வாழ்வாதாரமாக விளங்குகின்றன. புலி, சிறுத்தை, மான், நரி, காட்டெருமை, பல்வேறு பாம்பினங்கள் முதலிய வனவிலங்குகள் இங்கு வாழ்கின்றன. மைசூரில் பன்னூரு என்ற இடம் செம்மறி ஆடுகளின் வளர்ப்புகளுக்கான சிறந்த இடமாக விளங்குகின்றன.

இப்பிரிவிலுள்ள புகழ்வாய்ந்த ஆறுகளான காவேரி, ஹேமாவதி, ஹாரங்கி நேத்ராவதி, குமாரதாரா, வேதவதி, கபிலா, யகச்சி, முதலியன ககன சுக்கி, பர சுக்கி, அபே, இருப்பு, ஹேப்பே போன்றன முக்கிய நீர் வீழ்ச்சிகளாகும்.

மைசூரு பிரிவு மாவட்டங்களில் கிடைக்கும் முக்கிய கனிமங்கள் பாக்ஸைட், பெல்சைட், குரோமைட், சுண்ணாம்புக்கல், கிரானைட் மாங்கனீசு முதலியன. இந்தியாவின் மைசூரில் மட்டும் பெல்சைட் (Felisite) தாது அதிக அளவில் கிடைக்கின்றன. கடற்கரை பகுதியான உடுப்பி

©KTBS NOT TO BE REPUBLISHED

மற்றும் தென் கன்னடாவில் மிகச்சிறந்த கடற்கரை துறைமுகங்கள் அமைந்துள்ளன. இங்கு மீன்பிடி தொழில் சிறந்த விளங்குகின்றன. இப்பகுதியிலிருந்து மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது ஏராளமான மீனவர்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளன. குடகு, சிக்கமங்களூர் மற்றும் மைசூர் போன்ற மாவட்டங்கள் மரக்கட்டைகள் விற்பனை மையங்களாக உள்ளன.



ககனசுக்கி - பரசுக்கி நீர்வீழ்ச்சிகள்

கராவளி (கடற்கரை பகுதி)

1.2.3 காடுகள், வன விலங்குகள், தேசிய பூங்காக்கள் :

மைசூரு காடுகள் நிறைந்த பகுதியாகும். மைசூரு, குடகு, சிக்கமகளூர், ஹாசன் போன்ற இடங்கள் அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதியாகும். பண்டிபூர், நாகர ஹோளே, மலை மாதேஷ்வரா குன்று மற்றும் புஷ்பகிரி போன்றவை புகழ்வாய்ந்த வனப் பகுதிகளாகும். இங்குள்ள சிறிய காடுகளில் பல்வேறு வகையான உற்பத்தி பொருட்கள் கிடைக்கின்றன. மலை வாழ் மக்களுக்கு இச்சிறிய காடுகளிலிருந்து வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. மலைவாழ் இன மக்களில் மக்கள் தொகை அதிகமாக உள்ளன. ஜேனுகுருபரு இனத்தை சாரந்த மக்கள் அதிக அளவிலான எண்ணிக்கையில் மைசூரு மற்றும் சாமராஜ்நகரில் நிலையாக தங்கி வாழ்கின்றனர்.

புடகட்டு சமுதாயம்

தென்கன்னடா மற்றும் உடுப்பியில் கொரகா இனத்தவர் அதிகளவில் உள்ளனர். இவர்கள் மிகவும் பின் தங்கியவர்கள். மேல்குடி மலைவாழ் இனத்தவர்கள், குடகு மற்றும் தென் கன்னடாவில் நிலையாக தங்கி வாழ்ந்து வருகின்றனர். சோலிகர் இனத்தவர் சாம்ராஜநகரில் உள்ளனர். இவர்களை தவிர குறிப்பிட தக்க இனமாக

© KTBS NOT TO BE REPUBLISHED

யரவா, ஹக்கி பிக்கிகளு, ஹலசா, மேதரா முதலான மலைவாழ் இன மக்களும் உள்ளனர்.

புலி

யானை

காட்டெருமை

ரங்கனதிட்டு பறவைகள் சரணாலயம்

நம்முடைய தேசிய விலங்கு புலியாகும். நம்முடைய மாநிலத்தில் புலிகள் பாதுகாப்பு திட்டம் நடைமுறையிலுள்ளன. மொத்தம் ஐந்து பாதுகாப்பு இடங்கள் ஆகும். மைசூரில் மட்டும் மூன்று பகுதிகளில் இத்திட்டம் செயல்படுகின்றது. அவைகள் பந்திப்பூர், நாகரஹொளே மற்றும் பத்ராவில் புலி பாதுகாப்பு திட்டத்திற்கான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. யானைகள் பாதுகாப்பு திட்டமும் நடைமுறையிலுள்ளன. யானைகளை தந்தங்களுக்காகவும், புலிகளை அதன் தோல்களுக்காகவும் வேட்டையாடி கொன்றுவிடுகின்றனர். யானைகள் மற்றும் புலிகள் பாதுகாப்பு திட்டம் செயல்படுத்தபட்டுள்ளதால், இவ்விலங்குகளின் இறப்பு பெருமளவு குறைந்துள்ளன. இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை மிகுதியாக உள்ள மாநிலம் கருநாடகம் ஆகும்.

கருநாடகாவில் வனவிலங்கு சரணாலயங்களும், பறவைகள் சரணாலயங்களும் அதிக அளவில் மைசூரில் உள்ளன, மைசூரில் ரங்கன திட்டு பறவைகள் சரணாலயம். குடவி பறவைகள் சரணாலயம், கொக்கரே பெள்ளூரு முக்கிய சரணாலயங்களும், மேல் கோட்டை வனவிலங்கு சரணாலயம். மலை மாதேஷ்வரா வனவிலங்கு சரணாலயம், சிறந்த காவிரி வன விலங்கு சரணாலயம் முதலிய சரணாலயங்களாகும். மைசூர் பிரிவில் காணப்படுகின்றன.

மைசூரில் நாகரஹொளே, ராஜீவ்காந்தி தேசியப்பூங்கா, சாம்ராஜ நகரில் பந்திபூர் தேசியப்பூங்காவும் உள்ளன. காட்டுயானைகளை பழக்குவிக்கும் முறையாக 'கெட்டா திட்டமும்' செயல்படுத்தப் படுகின்றன.

1.2.4 வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகள் :

வேளாண்மை நமது மக்களின் உயிர்நாடி ஆகும். மைசூரு பிரிவு மாவட்டங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. மைசூர் மாவட்டம், பட்டு உற்பத்திக்கும், குடகு, ஹாசன் மற்றும் சிக்கமகளூர் இம்மாவட்டங்கள்

©KTBS NOT TO BE REPUBLISHED

காப்பி தோட்டமும், மண்டியாவில் கரும்பும், தென் கன்னடா மற்றும் உடுப்பி மாவட்டத்தில் முந்திரி, மிளகு, ஏலக்காய் மற்றும் இரப்பர் போன்ற பயிர்கள் விளைவிப்பதில் புகழ்பெற்றவை ஆகும். நம்நாட்டிலேயே சிக்கமங்களூரில் அதிகளவில் காப்பி விளைவிக்கின்றனர். வேளாண்மை மட்டுமல்லாமல் அதனுடன் பால்பண்ணை, கோழிப் பண்ணை, ஆடுகள் பண்ணை மற்றும் காய்கறிகள் பண்ணை, தோட்டங்கள் போன்ற செயல்பாடுகளும் வழக்கத்தில் உள்ளன. இப்பகுதியில் முக்கிய உணவுப்பயிர்களான நெல், கேழ்வரகு, சோளம், அவரை, பச்சைபயிறு உளுந்து முதலியனவும், காபி, புகையிலை, முந்திரி, வெற்றிலை பாக்கு, உருளைக்கிழங்கு, கரும்பு, பருத்தி, ஆரஞ்சு மற்றும் தேங்காய் போன்றன சில வணிகப் பயிர்களாகும்.

பால் பண்ணை

இப்பிரிவு பகுதியில் வேளாண்மைக்காக நான்கு நீர்பாசன திட்டங்கள் உள்ளன. அவையாவன ஹாரங்கி, ஹேமாவதி, கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி ஆகும். இங்கு ஏராளமான வேளாண்மைப் பண்ணைகள் மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவியாக கல்லூரிகளும் அமைந்துள்ளன.

இம்மாவட்டங்களில் மைசூரு, மங்களூரு, ஹாசன், சிக்கமகளூர், மண்டியா, மடிகேரி போன்ற கைத்தொழில் மையங்களாகும். மருந்து தொழிற்சாலை, காபி பதபடுத்தும் தொழிற்சாலை, உணவு பாதுகாப்பு கூடங்கள், உரத் தொழிற் சாலைகள், மங்களூரில் பெட்ரோலிய சுத்திகரிப்பு தொழிற்சாலைகள், காம்ப்கோ சாக்லேட் தொழிற்சாலை, கரும்பு தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை போன்றவை இப்பிரிவு பகுதிகளில் காணப்படும் முக்கிய தொழிற்ச்சாலைகளாகும். இப்பிரிவில் பெரிய நிறுவனங்கள் குறைவாகவும் சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அதிகமாக உள்ளன.

© KTBS
NOT TO BE REPUBLISHED

1.2.5 கலை, இலக்கியம், இசை, நாட்டுப்புறவியல், நாடகம் மற்றும் நடனம்

இப்பிரிவு கலை, இலக்கியம், நாடகம், நாட்டியம் போன்ற கலைத்தறைகளில் சிறந்து விளங்குகின்றன. மைசூரு நகரத்தை கலைகளின் இருப்பிடம் என்று அழைக்கின்றனர். கடற்கரையோர பகுதிகளில் யக்ஷகானா மற்றும் பயலாட்டா போன்ற நாட்டுப்புற கலைகள் புகழ்பெற்று விளங்குகின்றன. யக்ஷகானா தேசிய அளவிலும் உலக அளவிலும் அங்கீகாரம் பெற்றுள்ளன. கம்சாலேகுனித்தா,

சௌடிகே கலை, வீரகாசி குனிதா, படகுனிதா, நந்திகோலு, இவை அனைத்தும் பிரபலபான நாட்டுப்புற கலைகளாகும். குடகில் உத்தரி திருவிழாவும், உருவ வழிபாடு, கம்பள போன்றன கடற்கரை பகுதிகளில் கொண்டாப்படும் பிரபலமான சடங்காச்சாரங்கள் ஆகும்.

கலை, நடனம் மற்றும் இசைக்கு மைசூரு அரசர்கள் மிகச் சிறந்த முறையில் ஆதரவளித்துள்ளனர். இதனால் மைசூர் பாரம்பரியத்தின் சிறப்பியல்புகளான நடனம், இசை, ஓவியம் போன்றவை உருவானது. பரத நாட்டியம், கருநாடக சங்கீதம் மற்றும் கலையரங்க நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் ஊக்கமளித்தனர். மைசூரில் அரசு நிதியுதவியுடன் ரங்காயண (ரெபர்டரி) மண்டபம் நிறுவப்பட்டுள்ளன. ஆண்டு முழுவதும் நடிப்புக் கலைகளை கற்றுக் கொள்வதற்காக கலையரங்கத்தையும் அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளன. தற்போது மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் ரங்காயண மையங்கள் தொடங்கியுள்ளன. மைசூரில் மிகப்பெரிய கலாமந்திர் (கலைக்கூடம்) கட்டப்பட்டுள்ளன.

மைசூரு அரண்மனை

NOT TO BE REPUBLISHED

மைசூரு பிரிவு மாவட்டங்கள் பல புகழ் வாய்ந்த இலக்கிய வாதிகளின் இருப்பிடமாகும். ஆர்.கெ. நாராயணனும், ஹாசன் ராஜாவும் நன்கறிந்த ஆங்கில நாவலாசிரியர்கள் ஆவர். ஞானபீட விருதினை பெற்ற சிவராமகாரன்த் தென் கன்னட பகுதியை சார்ந்தவர். கன்னட மெல்லிசை பாடல்களுக்கு ஊக்கம் அளித்த எஸ். நரசிம்மசுவாமி மைசூரை சார்ந்தவர் ஆவார். இப்பிரிவின் கோருரு இராமசாமி ஐய்யாங்கார், Dr. S.L பைரப்பா, M. கோபாலகிருஷ்ண அடிகர், B.M ஸ்ரீ கண்டய்யா, மூர்த்திராவ், தேவனூரு மகாதேவா, அக்பர் அலி சாரா ஆபூபகர், அலனஹள்ளி கிருஷ்ணா, பூர்ண சந்திர தேஜஸ்வி,

R.K. நாராயண்

குடகின கௌரம்மா, திருமாலம்பா, திருவேணி, நிரஞ்சன் போன்றவர்கள் கன்னட இலக்கியத்தை சிறப்பித்த மாமனிதர்கள் ஆவர். R.K. ஸ்ரீ கண்டன், வீணை ஷேசண்ணா, வயலின் சௌடய்யா, வீணை துரை சாமி ஐயங்கார், கத்ரி கோபாலநாத் போன்றவர்கள் இசைத்துறையில் சிறந்தவர்கள் ஆவார். நையாண்டி கலைஞர் R.K. லஷ்மண், நாடகத்துறை முகமது பீர், திரைக்கலைஞர் K.K ஹெப்பார், நாடகத்துறை மற்றும் திரைபட உலகின் B.V காரந்த். நவீன காலத்தின் முந்தைய எழுத்தாளர்களான சஞ்சி ஹொன்னம்மா, ரத்தின கராவாணி, மைசூரின் பிரிவை சார்ந்த சிங்காராயா போன்றவர்கள் கன்னட கலச்சார சாதனையாளர்கள் ஆவர். பீல்டு மார்ஷல் ஜெனரல் காரியப்பா, ஜெனரல் K.S.திம்மய்யா இருவரும் நம் நாட்டிற்கு புகழ் சேர்த்த இராணுவப்படை அதிகாரிகள் ஆவர். அறிவியலறிஞர்கள் ராஜா ராமண்ணா மற்றும் U.R.ராவ் அவர்களின் சாதனை குறிப்பிடத்தக்கது. கருநாடக சமூக நீதிகாவலராக தேவராஜ் அரசு விளங்கினார்.

பி.எம்.ஸ்ரீ

வயலின் சௌடய்யா

K S நரசிம்ம சுவாமி

ராஜாராமண்ணா

K.K. ஹெப்பர்

தேவனூர் மஹாதேவ்

பீல்ட் மார்ஷல் காரியப்பா

தேவராஜ் அரசு

1.2.6 கல்வி மற்றும் சுகாதாரம் :

மைசூரு ஒரு கல்விமையமாகும். இங்கு கல்வியறிவின் நிலை சிறப்பாக உள்ளன. அக்கால கட்டங்களில் ஆட்சி செய்த

அரசர்கள் கல்விக்கு அதிகளவு ஊக்கமளித்துள்ளனர். பல ஆண்டு நூற்றாண்டுகள் கண்ட மைசூரு பல்கலைக்கழகம், பொ.சா. 1916 தொடங்கியது. இம்மாவட்டத்தில் ஏராளமான பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவ கல்லூரிகள் காணப்படுகின்றன. மங்களூரு மாவட்டத்தில் குறிப்பாக, மங்களூரு பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இப்பிரிவில் ஏராளமான தனியார் பல்கலைகழகங்கள் உள்ளன. மைசூரில் மத்திய உணவு தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது. CFTRI (சென்ட்ரல் புட் டெக்னாலஜிகன் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்) உள்ளது கல்வித் துறைக்கு சுத்தூரு மடத்தின் பங்களிப்பு மகத்தானது. இப்பிரிவினில் கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு தர்மஸ்தலா மற்றும் மணிபால் நிறுவனங்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கவைகள் ஆகும்.

ஒவ்வொரு மாவடத்திலும், மாவட்ட மருத்துவமனைகள் உள்ளன. கிராமப்புற பகுதிகளில் சிறு சிறு சுகாதார அமைப்புகள் அமைக்கப்பட்டு மருத்துவ சலுகைகள், தடுப்பூசி மற்றும் மருந்துகள் வழங்கப்படுகின்றன. கர்ப்பிணி பெண்களுக்கு மற்றும் பிரசவித்த மகளிரின் ஆரோக்கியத்திற்காக, சுகாதார உதவியாளர்கள் (ஆஷா) பணியாளர்களும் உள்ளனர். இதனால் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்து காணப்படுகின்றன. மருத்துவ சலுகைகள் அனைத்தும் அளிக்கப்பட்டுள்ளதால், மக்களின் இறப்பு விகிதம் மிகக்குறைந்துள்ளன. இதனால் மக்களின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளன. தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைந்துள்ளன. இவைகள் அனைத்தும் மக்களின் முக்கிய ஆரோக்கிய நலன் குறிப்பீடுகளாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

1.2.7 இப்பிரிவின் கலாச்சார வளங்கள்

மைசூர் பிரிவு கலாச்சார பழக்க வழக்கத்திற்கு சிறந்து விளங்குகின்றன. மைசூரில் இயற்கை வளங்கள் உள்ளன. அவை ஆறுகள், அடர்ந்த காடுகள், வனவிலங்குகள், நீர் வீழ்ச்சிகள், கலை, கட்டிட கலை பெருமை, இலக்கியம் கலைகளின் பிறப்பிடம் மைசூர் பிரிவின் மாவட்டங்கள் ஆகும். மண்டியா கரும்பிற்கு புகழ்பெற்று விளங்குகின்றது. ஹாசன் மற்றும் சிக்கமங்களூர் பகுதிகள் காப்பிக்கு பெயர் பெற்ற இடங்களாகும். யக்ஷகானாவிற்கு கடற்கரை பகுதிகளும், கம்சாலே குனிதா சாம்ராஜ் நகரிலும் நாட்டுப் புற கலைகள் புகழ்பெற்று விளங்குகின்றன.

சோமநாதபுரா, பேளூர், சென்னகேசவ கோவில்களில் உள்ள சிற்பங்கள், மதனிகே சிலைகள், சரவணபெளகொளத்தின் கொம்மடேஷ்வரன் ஒரே கல்லினால் ஆன சிலையாகும். ஹளேபீடு, மூடுபித்ரே போன்றவைகள் கலை சிற்பங்களுக்கு புகழ்பெற்ற கோயில்களாகும்.

கொம்மடேஷ்வரா சிலை
சரவணபெளகொளா

நாட்டின் பிரதமராக இருந்த ஸ்ரீ எச்.டி. தேவகவுடா
இந்தப் பிரிவின் ஹாசன் மாவட்டத்தைச் சார்ந்தவர்.

புத்திரி குடகு திருவிழா

சுத்தூரு மடம் - மைசூரு

எல்லா மாவட்டங்களை காட்டிலும் மைசூரில் பெருமளவில் சுற்றுலாதலங்கள் காணப்படுகின்றன. குடகு மாவட்டத்தில் தலகாவிரி என்னுமிடத்திலிருந்து காவேரி ஆறு உற்பத்தியாகின்றது. இது கருநாடக மாநிலத்திற்கு வாழ்வாதாரமாக விளங்குகிறது. 320 கிலோமிட்டருக்கும் அதிகமான நீண்ட கடற்கரையை கொண்டுள்ளது. மீன்பிடி துறை முகங்கள், கடல் மீது வீர விளையாட்டுகள் மற்றும் கல்விமையங்கள் இப்பிரிவின் பகுதியில் உள்ளன. மைசூர் பிரிவு கலாச்சார வளம் மிக்க பிரிவாகும்.

1.2.8 சுதந்திர போராட்ட வீரர்கள்:

இம்மாவட்டம் சுதந்திர போராட்டத்தில் முன்னணியாக திகழ்ந்தது. காந்திஜிக்கு விருப்பமான கதர் மையங்கள், குடிசைகைத் தொழில்கள் அதிகளவில் செயல்பாட்டில் இருந்தன. மங்களூரில் தீண்டாமைக்கு எதிரான போராடத்தில் குத்மல் ரங்காராவ் அவர்கள் தீண்டாமை

©KTBS
NOT TO BE REPUBLISHED

ஒழிப்பிற்கு, தமது வாழ்க்கையே அர்ப்பணித்தார். தகடுரு இராமசந்திரராவ் அவர்கள் காந்திஜியின் ரசிகர் ஆவார். இருவரும் தீண்டாமையை ஒழிக்க போராட்டம் செய்தார். H.C தாசப்பா, யஷோதரம்மா, தாசப்பா, கர்நாடக சதாசிவராவ், H.K. வீரண்ணா கவுடா, K.T பாஷியம், கமலாதேவி சட்டோபாத்யாயா, K.V சங்கர் கௌடா, K. இராம கிருஷ்ண காரந்த், C.M. பூர்ணச்சா போன்றவர்கள் சுதந்திர போராட்டங்களில் பங்கேற்றனர். அநேகர் கர்நாடக ஒருங்கிணைப்பு போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். இவ்வாறாக மைசூரு பிரிவு மாவட்டங்கள் தேசிய மற்றும் மாநில அளவில் புகழ்பெற்று விளங்குகின்றன. மைசூரின் தசரா தேசியளவிலும், உலகளவிலும் பிரபலமான திருவிழாவாகும்.

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. தென் கன்னடா மாவட்டம் ____________ ஆண்டு பிரிக்கப்பட்டு உடுப்பி மாவட்டம் உருவானது.
2. மைசூரு பிரிவுகளில் ____________ மற்றும் ____________ கடற்கரை மாவட்டங்களாக அமைந்துள்ளன.
3. நம்முடைய தேசிய விலங்கு ____________ ஆகும்.
4. காட்டு யானைகளை பராமரிக்கும் திட்டம் ________ என்றழைக்கப்படுகிறது.
5. மைசூர் பிரிவில் ____________ மாவட்டத்தில் காபி அதிக அளவு பயிரிடப்படுகின்றன.
6. காவேரி ஆறு, குடகு மாவட்டத்தில் _________ என்னுமிடத்திலிருந்து உற்பத்தியாகின்றது.
7. குத்மல் ரங்காராவ் ____________ க்கு எதிராக போராடினார்.
8. மைசூரில் நடைபெறும் உலகபுகழ்பெற்ற திருவிழாவின் பெயர் _______ ஆகும்.
9. மைசூரு பிரிவின் ____________ மற்றும் ____________ மாவட்டங்களில் துறைமுகங்கள் உள்ளன.

© KTBS NOT TO BE REPUBLISHED

II. பின்வரும் வினாக்களுக்கு விடைதருக:

10. தற்போது மைசூரு பிரிவில் எத்தனை மாவட்டங்கள் உள்ளன?

11. மைசூரு என்ற பெயர் வர காரணம் என்ன?

12. மைசூரு சமஸ்தானத்தின் வளர்ச்சிக்கு 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் காரணமான உடையார்கள் பெயர்களை எழுதுக.

13. கடற்கரை பகுதியை ஆங்கிலேயர்கள் முதலில் என்னவென்று அழைத்தனர்?

14. மைசூரு பிரிவிலுள்ள இரண்டு புகழ்வாய்ந்த ஆறுகளின் பெயர்களை எழுதுக.

15. மைசூரு பிரிவில் அதிக அளவு மழைப்பொழியும் மற்றும் குறைந்த அளவு மழைப்பொழியும் மாவட்டங்கள் யாவை?

16. மைசூர் பிரிவில் கிடைக்கும் தாதுபொருட்கள் இரண்டின் பெயரினை எழுதுக.

17. மைசூரு பிரிவின் கடற்கரை பகுதிகளின் முக்கிய தொழில் என்ன?

18. மைசூரு பிரிவுகளிலுள்ள பிரபலமான வனப்பகுதிகள் ஏதேனும் இரண்டின் பெயர்களை எழுதுக.

19. மைசூரு பகுதியில் நிலைகொண்டு வாழும் மலைவாழ் இன மக்களின் பெயர்களை எழுதுக.

20. இரு வனவிலங்கு சரணாலயம் மற்றும் இரு பறவைகள் சரணாலயங்கள் பெயர்களை எழுதுக.

21. மைசூரு பிரிவில் உள்ள இரண்டு தேசிய பூங்காக்கள் பெயர்களை எழுதுக.

22. மைசூரு பிரிவில் பயிரிடப்படும் ஏதேனும் 6 பயிர்களின் பெயர்களை எழுதுக.

23. மைசூரு பிரிவிலுள்ள ஏதேனும் இரு நீர் பாசன திட்டங்களின் பெயர்களை எழுதுக.

24. மைசூரு பகுதியிலுள்ள ஏதேனும் மூன்று முக்கிய தொழிற்சாலைகளின் பெயர்கள் எழுதுக.

25. குடகில் நடைபெறும் அறுவடை திருநாளின் பெயர் என்ன?

26. கருநாடகத்தில் ''ரங்கயான கலையரங்க மையம்'' எந்த நகரத்தில் அமைந்துள்ளன?

@KTBS NOT TO BE REPUBLISHED

27. கன்னட நாவலாசிரியர்களில் பிரபலமான இருவர் பெயர்களை எழுதுக.

28. பல்கலைகழகம் மைசூரில் நூற்றாண்டு விழாவினை கொண்டாடிய பல்கலைகழகத்தின் பெயரை எழுதுக.

29. கிராமப்புற பகுதிகளில் மக்களுக்கு (சுகாதார சேவை) ஆரோக்கிய சேவை அளிக்கும் மையங்களின் பெயர்கள் யாவை?

30. ஏதேனும் இரு சுகாதாரக் குறிப்புகளை எழுதுக?

31. மைசூரு பிரிவின் ஏதேனும் இரு ஆங்கில நாவலாசியர்களின் பெயர்களை எழுதுக.

32. தீண்டாமைக்கு எதிராக போராடிய இரு சுதந்திர போராட்ட வீரர்களின் பெயர்களை எழுதுக.

33. சரவணபெளகொளா புகழ் பெற்றதாக கருதப்படுவது, ஏன்?

34. இம்மாவட்டத்தை சார்ந்த நான்கு சுதந்திர போராட்ட வீரர்களின் பெயர்களை எழுதுக?

செயல்பாடுகள்

- இந்த பிரிவுகளிலுள்ள பழமை வாய்ந்த கோயில்களை பட்டியலிடவும். அக்கோயில்களை கட்டிய மன்னர்கள் / அரசவம்சங்களின் பட்டியல்களையும் படங்களையும் சேகரிக்கவும்.
- இப்பிரிவைச் சேர்ந்த பல்வேறு மாவட்டங்களிலுள்ள கோமடேஷ்வரர் சிலைகள் உள்ள இடங்களின் பெயர்கள் பட்டியலை தயாரிக்கவும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

1.3 கலபுரகி பிரிவு (கலபுரகி)

கலபுரகி பிரிவு 7 மாவட்டங்களை கொண்டதாகும். அவை கலபுரகி, பீதார், பல்லாரி, விஜயநகர், ராய்ச்சூர், கொப்பளா மற்றும் யாதகிரி ஆகும். ஆரம்பத்தில் இப்பிரிவில் நான்கு மாவட்டங்கள் இருந்தன. பின்னர் பொ.ச. 1997-ல் ராய்ச்சூர் மாவட்டதில் இருந்து கொப்பல் மாவட்டம் உருவாக்கப்பட்டது. டிசம்பர் 31, 2019 அன்று யாதகிரி மாவட்டம், கலபுரகி மாவட்டத்தில் இருந்து பிரிந்து புதிய மாவட்டமாக உருவாக்கப்பட்டது. பல்லாரி மாவட்டத்தை பிரித்து விஜயநகர மாவட்டமாக 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.



NOT TO BE REPUBLISHED @KTBS

1.3.1 வரலாற்று பின்னணி

கல்வெட்டு

சன்னதி

இப்பிரிவின் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்புமிக்க வரலாறு உண்டு. வரலாற்று பூர்வ நினைவுச் சின்னங்களை இங்கு காணலாம். வரலாற்று காலத்தின் தொடக்கத்தில், இந்த பகுதி மௌரியரின் மற்றும் சாதவாகனரின் ஆட்சியின் கீழ் வந்தது. அசோகரின் பல கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. பண்டைய பௌத்த ஸ்தூபிகள் இந்த பகுதியில் அமைந்துள்ளன அசோகரின் கல்லின் சிற்பம் அனைவரையும் கவரந்திழுக்கக் கூடியவை. அவ்வாறே பண்டைய பௌத்த தூண்கள் மற்றும் கல்வெட்டுகள் கவர்ந்திழுக்கக் கூடியவைகள். பொ.ச. 8-ஆம் நூற்றாண்டில் இராஷ்டிரகூட பேரரசு, இங்கு ஆட்சி புரிந்தனர். இராஷ்டிர கூடர்களின் தலைநகரான மான்யகேடா என்பது இன்றைய கலபுரகி மாவட்டத்தின் மலகெடா ஆகும் அவர்களுக்கு பிறகு கல்யாண சாளுக்கியர்கள் இப் பகுதியை ஆண்டனர், பசவகல்யாண அவர்களின் தலைநகரமாக இருந்தது. விஜய நகர மாவட்டத்தின ஹம்பி விஜயநகர மன்னரின் தலைநகரமாக இருந்தன. கலபுரகி பிரிவிற்கு உட்பட்ட பசவ கல்யாணத்தில் பசவண்ணர் தலைமையில் வரலாற்று சிறப்புமிக்க வசன இயக்கம் நடைபெற்றன. பின்னர் இடைக்காலத்தில் பாமினி மன்னர் ஆட்சிக்கு வந்தார். கலபுரகி இவர்களின் தலைநகரம் ஆகும். பாமினி மற்றும் விஜய நகர ஆட்சியாளர்களின் வீழ்ச்சிக்குப்பிறகு, கலபுரகி ஹைதராபுரத் நிஜாமின் ஆட்சியின் கீழ் வந்தன, பின்னர் பொ.ச. 1948-ல் ஹைதராபாத் சுதந்திர இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. பொ.ச. 1956 ஆம் ஆண்டு மாநிலங்களின் மறுசீரமைப்பின் போது ஹைதராபாத் நிஜாமின் ஒரு பகுதியாக, இருந்த கலபுரகி, பீதர் மற்றும்

NOT TO BE REPUBLISHED ©KTBS

ராய்ச்சூர் மாவட்டங்கள் கர்நாடகா மாநிலத்துடன் இணைக்கப்பட்டன. கலபுரகி பகுதியின் மையமாகும், மெட்ராஸ் மாநிலத்தின் ஒரு பகுதியான பல்லாரி, கர்நாடகா மாநிலத்துடன் இணைக்கப்பட்டன.

விஜயநகர மற்றும் பஹாமனி சுல்தான்களின் வீழ்ச்சிக்கு பின்னர் பல பாலேகாரர்கள் வலிமை மிக்கவர்களானார்கள். அவர்களின் ஹரப்பன ஹள்ளி, சந்தூர், ஜரிமலே மற்றும் சுரபுராவின் பாலேகர்கள் பிரபலமானவர்கள் ஆவர் சூரபுரத்தை சேர்ந்த கிருஷ்ணப்ப நாயக்கரின் மரணத்திற்குப்பின்னர் அவரது மகன் வெங்கடப்ப நாயக்கர் ஆட்சிக்கு வந்தார். முதல் இந்திய சுதந்திரப் போரை அவர் அறிந்திருந்து, ஆங்கிலேயருக்கு எதிராக போரிட்டார். ஆனால் ஆங்கிலேயர்கள் வெங்கடப்ப நாயக்கரைக் கைப்பற்றி சிறையில் அடைத்தனர். ஆங்கிலேயர்கள் ஹைதராபாத் நிஜாமிற்கு சூரபுராவை பரிசளித்தனர். பீதர், கலபுரகி மற்றும் ராய்ச்சூர் ஹைதராபாத் நிஜாமின் ஒரு பகுதியாக மாறியன. இம் மாவட்டங்கள் பொ.ச. 1956 ஆம் ஆண்டில் கருநாடக மாநிலத்தினுடன் இணைக்கப்பட்டன.

ஹைதராபாத் கர்நாடக விடுதலைக்கான போராட்டம்

இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னர் ஹைதராபாத் நிஜாம் இந்தியாவுடன் ஒருங்கிணைக்க தயாராக இல்லை. இக்காரணத்தால் பொது மக்கள் ஆத்திரமடைந்து நிஜாமிற்கு எதிரான போராட்டம் செய்தனர். இப்பகுதியின் போராட்டத்திற்கு சுவாமி இராமானந்த தீர்த்தா தலைமைவகித்தார். சர்தார் சரண கவுடா, இனாம்தார், சிவமூர்த்தி அளவண்டி, சிரூடுவீரபத்ரப்பா, பிரபுராஜா படில் சங்கனாலா, புண்டலிங்கப்பா ஆகியோர் நிஜாமிற்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்தனர். நிஜாம் அரசு, பொது மக்களை துன்புறுத்த தொடங்கின. ரஜாக்ஸ் எனப்படும் நிஜாமின் தனிப்படைக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர். இந்திய மத்திய அரசு நிஜாமுக்கு எதிராக நேரடி நடவடிக்கை எடுத்தன. செப்டம்பர் 17, பொ.ச. 1948 அன்று, இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. அச்சமயத்தில் சர்தார் வல்லபாய் படேல் உள்துறை அமைச்சராக இருந்தார்.

வரலாற்று ரீதியாக கலபுரகி மக்கள் பல்வேறு அரசு நிர்வாகிகளின் கீழ், பல்வேறு வகையான சுரண்டலுக்கு ஆளாகி இருந்தனர். இவை அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதார சுதந்திரத்தை பறித்தன. இத்தகைய வரலாற்று, அநீதியை சீர்ப்படுத்த பொ.ச. 2012 ஆம் ஆண்டில், அரசாங்கம் 98 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டுவந்தன. மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்விற்கு

©KTBS NOT TO BE REPUBLISHED

முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அதிகாரமளிப்பதற்கான புதிய பாதைக்கு வழி வகுத்தன. தற்போது இப்பிரிவு கல்யாண கருநாடகம் என அழைக்கபடுகிறது.

1.3.2 இயற்கை வளங்கள் :

இப்பிரிவுகளின் முக்கியமான ஆறுகள் பீமா, துங்கபத்ரா, கிருஷ்ணா, முல்லமாரி மற்றும் பென்னதொரா, கரஞ்சா அணை ஆகியவைகள், பீதர் மாவட்டத்திற்கு ஒரு வரபிரசாதமாகும். இப்பிரிவில் சிவப்பு, கருப்பு மற்றும் வண்டல் மண் காணப்படுகின்றது. கொப்பள மற்றும் ராய்ச்சூர் மாவட்டத்தில் நெல் முக்கிய பயிரிடப்படுகின்றன. கரும்பு ஒரு முக்கிய வணிகப்பயிராகும். மற்ற முக்கிய பயிர்கள் பருத்தி. சாமை, தினை, குதிரைவால் மற்றும் பருப்பு வகைகள் ஆகும். இப்பகுதிகளில் காடுகள் ஆங்காங்கே உள்ளன. பெல்லாரி மாவட்டத்தின் சந்தூர் தாலூகாவில் அடர்ந்த காடுகளும், பீதர் மாவட்டத்தில் சிறிய காடுகளும் உள்ளன. கொப்பளத்தில் மிகக்குறைந்த காடுகள் உள்ளன.

இப்பிரிவில் கிடைக்கும் கனிமங்கள் வெள்ளி, சிலிக்கா, தங்கம் (ராய்ச்சூர் மாவட்டம்) இரும்புத் தாது, சுண்ணாம்பு, மாங்கனிசு தாது (பெல்லாரி) விஜயநகர் கிரானைட் கல் இப்பிரிவின் அனைத்து மாவட்டங்களிலும் கிடைக்க கூடியவைகளாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS



துங்கபத்ரா அணைக்கட்டு

இரும்புச் சுரங்கம்

விஜயநகர மாவட்டங்களுக்கு துங்கபத்ரா அணை, ராய்ச்சூர் பெல்லாரி வரை நீர்பாசன வசதிகளை வழங்குகின்றன. கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே கட்டடப்பட்டுள்ள பசவசாகர் அணை, ராய்ச்சூர் மற்றும் யாதகிரி மாவட்டங்களுக்கு நீர் பாசன வசதியை வழங்குகின்றது. கரஞ்சா திட்டம், பீதர் மாவட்டத்திற்கு வேளாண்மைக்கு நீர்ப்பாசன வசதியை அளிக்கின்றன.

1.3.3 காடுகள், வனவிலங்கு சரணாலயங்கள்:

தரோஜி கரடி சரணாலயம்

இப்பிரிவுகளில் காடுகள் அதிகளவில் இல்லை. குறைந்த அளவான விலங்கினங்கள் உள்ளன. லங்கூர், மான், நரி, கரடி, ஓநாய், காட்டுநாய்கள் இப்பிரிவில் காணப்படுகின்றன. கரடி தரோஜி சரணாலயம் பெல்லாரியில் உள்ளன. ராய்ச்சூர் மாவட்டத்தில் மான்கள் காணப்படுகின்றன.

1.3.4 வேளாண்மை மற்றும் தொழிற் சாலைகள் :

ஹட்டி தங்கச்சுரங்கம்

இப்பிரிவில் வேளாண்மை முக்கிய தொழிலாகும். சராசரி மழையின் அளவு குறைந்து காணப்படுகின்றன. இப்பிரிவுவில் மழை குறைபாடின் காரணத்தினால் கடும் வறட்சி நிலவுகின்றன. மக்கள் அவதிக்குட் படுகின்றன.இரும்பு மற்றும் எஃகு தொழில்கள், சர்க்கரை தொழிற் சாலைகள், சிமெண்ட் தொழிற் சாலைகள் மற்றும் அனல் மின் நிலையங்கள் இப்பிரிவின் முக்கிய தொழில்களாகும் இத்தொழிற்சாலைகள் இப்பிரிவுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளன. பெல்லாரியில், பெரிய இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் உள்ளன. அதே போன்று யாதகிரி மற்றும் கலபுரகியில் பெரிய சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன. பீதரில் மூங்கில் கலை பிரலமானதாகும். இப்பகுதியில் சுற்றுலா தளங்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன. குறிப்பிடதக்க. சுற்றலா தளங்கள் விஜய நகர மாவட்டத்தின் ஹம்பி, துங்கபத்ரா அணை, கலபுரகி மாவட்டத்தின் சன்னதி, க்வாஜா பந்தே நவாஸ் தர்கா, பீதர் கோட்டை பசவகல்யாண, ராய்ச்சூர் மாவட்டத்தின் ஹட்டி தங்கச் சுரங்கம் போன்றவை ஆகும். இந்தியாவில் ராய்ச்சூர் மாநட்டத்தில் உள்ள ஹட்டியில் தங்கம் உற்பத்தி செய்யும் சுரங்கம் உள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

1.3.5 கலை, இலக்கியம், இசை, நாட்டுப்புற கலை, நாடகம் மற்றும் நடனம்.

இப்பிரிவு பொருளாதார நிலையில் பின்தங்கியிருந்தாலும், கலை, இசை, நாட்டுப் புறக்கலை, நடனம் ஆகியவற்றில் புகழ் வாய்ந்தவைகளாக திகழ்கின்றன. கலபுரகி பிரிவு இலக்கியத்திற்கென்றே பண்டைய கால வரலாறு உண்டு. கன்னடத்தில் முதல் இலக்கிய படைப்பு கவிராஜமார்கா, இது இராஷ்டிர கூடர்களின் ஆட்சியின் படைப்பாகும். ஆதிகவி பம்பா அரிகேசரி மன்னரின் ஆதரவில் 'விக்ரமார்ஜுனா விஜயம்' என்ற காவியத்தை இயற்றினார். கன்னட இலக்கியத்தின் மூவர் இரத்தினர்கள் குறிப்பிடத்தவர்கள். அவர்கள் பம்பா, பொன்னா மற்றும் ரன்னா போன்ற புகழ்பெற்றவர்கள் கலபுர்கி பிரிவை சார்ந்தவர்கள் ஆவர். முதல் கன்னட இலக்கண நூலான ''சப்தமணி தர்பணா'' வை எழுதிய கேசிராஜா இப்பிரிவை சார்ந்தவராவர்.

வசன இயக்கம்

பசவன்னா

கர்நாடகாவில் 12 ஆம் நூற்றாண்டில் மிக முக்கியமான சமூக சீர்திருந்த இயக்கம் என்று கருதப்பட்ட வசன இலக்கிய பாரம்பரியம், கலபுரகி பகுதியான கல்யாண் நகரில் வளர்ச்சியைக் கண்டன. பசவண்ணர், அல்லமபிரபு, அக்கமகாதேவி, ஜேடரதாசிமையா, சித்தராமா போன்ற சிவசரணர்கள் சித்தி சாதனை புரிந்த இடங்கள் கலபுரகி பகுதியைச் சார்ந்தவையாகும். இவ்வியக்கத்தின் அங்கமாக அனைத்து தரப்பு ஆண்களும், பெண்களும் வசனங்களை இயற்றினர்.

தாச இலக்கியம் (சாஹித்தியா)

கலபுர்கி பிரிவின் ராய்ச்சூர் மாவட்டம் தாச இலக்கியத்தின் பிறப்பிடமாகும். ஸ்ரீவியாசராயரின் தலைமையில் தாசகூட்டம் உருவானது. புரந்தரதாசர், கனகதாசர், ராகவேந்திர தீர்த்தர் போன்றவர்கள் கீர்த்தனைகளை இயற்றினர். கர்நாடகம் இசை வளர்ச்சிக்கு தாசா இலக்கியம் மகத்தான பங்களித்துள்ளன. தாசாஸ், நூல்கள்

புரந்தரதாசர்

©KTBS NOT TO BE REPUBLISHED

கீர்த்தனைகள், சுளதிகள், கீதைகள் கட்டுரைகள் மற்றும் நாமாவலி ஆகியோரின் நூற்றுக்கணக்கான படைப்புகளின் பங்களிப்பால் கன்னட இலக்கியம் வளம் பெற்றன.

தத்துவக்கவிஞர்கள் (தத்துவ பதகாரரு)

வசன இலக்கியம், தாச இலக்கியம் மற்றும் பழங்கவிதைகளால் ஈர்க்கப்பட்ட மக்கள் தத்துவகவிதைகளை இயற்றினர். நாட்டுப்புற கலைஞர்கள், ஃபக்கீர்கள் மற்றும் பிற துறவிகள் எழுதிய பாடல்களை தத்துவப் பாடல்கள் என அழைத்தனர். இக்கவிஞர்கள் 18 மற்றும்19 ஆம் நாற்றாண்டுகளில் பாலின சமத்துவமின்மை, தீண்டாமை, பொய் கூறுவர்களுக்கு எதிராக பணம் சம்பாதிப்பதில் பேராசை கொண்டவர்களை குறித்து தங்கள் பாடல்களில் நையாண்டியாக விமர்சித்துள்ளனர். சென்னூரு ஜலால் சாப், ஹனுமத்தவ்வ முதலியோர் தத்துவ பாடல்களை இயற்றினர். பல படிப்பறிவில்லாதவர்களும் இத்தகைய பாடல்களை இயற்றிப் பாடியுள்ளனர்.

நவீன காலத்தில் கலபுர்கி பகுதிகளில் இலக்கியம், பல எழுத்தளார்களால் சிறப்பிக்கப்பட்டன. அவர்கள் சித்தய்யா புராணிக, ஜெயதீர்தா, ராஜபுரோஹித், சாந்தராசா, பண்டிட் தாராநாத், பீச்சி, முதேனூர் சங்கன்னா, சிம்பிலிங்கண்ணா, திருமதி ஷைலஜா சடசன, ஜெயதேவிதாயி லிகடே, சென்னன்னா வாலிகாரா, ஜம்பன்னா, அமரச்சிந்தா மற்றும் இன்னும் பலர் ஆவர். கலபுர்கி பிரிவு இசைத்துறைக்கு மகத்தான பங்களிப்பை அளித்துள்ளன. சித்தராமாஜம்பலதின்னி, பண்டிட் தாராநாத், கஜல் குண்டம்மா, சுபத்ரம்மா, மன்சூர் போன்ற இசைக்கலைஞர்கள் இசைக்கு பங்களித்தனர் எஸ்.எம். ஓவியத்துறையில் பண்டிட் பிரபலமானவர் ஆவார். தொட்டாட்டா, சன்னாட்டா, தோல் பொம்மலாட்டம் நாட்டுப்புற கதை, நாடகங்கள் வழக்கத்தில் உள்ளன. பெகல் வீரண்ணா அவர்கள் தொகலு பொம்மலாட்டம் நாடகத்துறையில் பிரபலமானவர் ஆவார்.

நந்தி குனிதா, ஆலவி குனிதா, சௌடம்மனகுனிதா, லம்பானி குனிதா, கோலாட்டா, வீரகாசே, துர்கா-முருகி மற்றும் பிற நாட்டுப்புற நடன வகைகள் கரடி மஜலு ஷில்லேக்யதாரா, மொகரம் குனித்தா, ஹகலுவேஷா ஆகியவை நாட்டுப்புற கலைகளின் ஒரு அங்கமாகும். பீதரின் மூங்கில் கலை, கின்னாலா பொம்மைகள் மற்றும் கொப்பள மாவட்டத்தின் கௌதிகள் ஆகியவை பிரபலமான பாரம்பரிய கலைகள் ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

1.3.6 கல்வி மற்றும் சுகாதாரம்

நமது மாநிலத்தின் கல்வியில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களான ராய்ச்சூர் மற்றும் யாதகிரி ஆகியவை கலபுரகிப் பிரிவைச் சார்ந்தவை. கல்வியின் வளர்ச்சியை குறிக்கும் வண்ணம் எழுத்தறிவின் விகிதம் சமீபகாலமாக இப்பகுதியில் முன்னேற்றம் அடைந்துள்ளன. குல்பர்கா பல்கலைக்கழகம் மற்றும் கர்நாடக மத்தியப் பல்கலைக்கழகம் ஆகியவை கலபுர்கி நகரத்தில் உள்ளன. கன்னட பல்கலைக்கழகம் விஜயநகர மாவட்டத்தின் ஹம்பியில் உள்ளன. பெல்லாரியில், ஸ்ரீ கிருஷ்ண தேவராய பல்கலைக்கழகம் உள்ளன. வேளாண்மைப் பல்கலைக்கழகம், ராய்ச்சூரிலும் உள்ளன. பீதரில் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளப் அறிவியல் பல்கலைக்கழகம் உள்ளன மற்றும் நரசிம்மஜரா கோவில் பிரபலமானதாகும். கலபுர்கியில் புத்த விஹார் உள்ளது.

கொப்பளத்தின் கவிசித்தேஷ்வரர் மடத்தின் தேர்

இப்பிரிவில் பெல்லாரி, யாதகிரி, கலபுர்கி மற்றும் ராய்ச்சூரில் மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு மாவட்ட மருத்துவமனை உள்ளன. கிராமப்புற மக்களுக்கு சுகாதார வசதிகளை அளிப்பதற்காக சுகாதார துணைமையம் உள்ளன. கல்வி மற்றும் சுகாதார துறையில் வளர்ச்சி பெற்றுள்ளன. பெரிய ESI மருத்துவமனையும் உள்ளது.

இப்பிரிவில் கவிசித்தேஸ்வரா மடம், கொப்பளத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகளுக்கு கல்வி மற்றும் உணவு வசதியை வழங்குகின்றது. இங்கு நடைபெறும் திருவிழா உலக புகழ் பெற்றவை ஆகும்.

NOT TO BE REPUBLISHED

புத்த விஹார்

குல்பர்கா பல்கலைக்கழகம்

குவஜா பந்தே நவாஜ் தர்கா

நாநக் ஜரா

கர்நாடக மத்திய பல்கலைக்கழகம்

நரசிம்ம ஜரா

1.3.7 கலாச்சார வளங்கள் :

சின்னாலா பொம்மைகள்

கலபுரகி பிரிவிலுள்ள மாவட்டங்கள் கலை, இசை, ஓவியம், நாடகம், நாட்டுப்புறகலை, நடனம் மற்றும் பிற கலைத் துறைகளுக்கு அதிகளவில் பங்களித்துள்ளன. இப்பிரிவு கர்நாடகாவின் நான்கு முக்கியமான பண்டைய அரச வம்சங்களுக்கு ஆதரவளித்துள்ளன. அவை இராஷ்டிரக்கூடர், கல்யாண சாளுக்கியர்கள், விஜயநகரம் மற்றும் பாமினி அரசுகள் ஆகும். இந்த வம்சங்கள் இசை கலை மற்றும் இலக்கியங்களுக்கு ஊக்கமளித்தன. இப்பிரிவு தொழில் முறை நாடகங்களுக்கு பெயர் பெற்று விளங்குகின்றது.

பீதரின் மூங்கில் கலை, கொப்பளத்தின் கின்னாலா பொம்மைகள் கவுடி போன்ற குடிசை கை தொழில்கள் இங்குள்ளன. பண்டைய கட்டிட கலைக்கு பெயர் பெற்றவை ஆகும். பீதர் கோட்டை, ஹம்பியின் நினைவுச்சின்னங்கள், பசவ கல்யாணத்தின் பசவ நினைவுச்சி,ன்னங்கள், கலபுர்கியின் குவாஜா பந்தே நவாஸ் தர்கா மற்றும் சன்னதியின் நினைவுச்சி ன்னங்கள் ஆகியவை கட்டிட கலைக்கு சிறந்து விளங்குகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

1.3.8 சுதந்திரப் போராட்ட வீரர்கள்:

கர்நாடகாவின் மற்ற பகுதிகளை சார்ந்த மக்கள் சுதந்திர போராட்டம் மற்றும் கர்நாடக ஒருங்கிணைப்பு போராடத்தின் போது அதே நேரத்தில் ஐதராபாத் நிஜாமின் ஆட்சிக்கு எதிரான போராட்டத்திலும், கருநாடக

ஒருங்கிணைப்பு இயக்கத்திலும் கலபுர்கி பகுதி மக்கள் பங்கேற்க வேண்டியிருந்தன. சுதந்திரப்போராட்டத்திற்கு தொடர்பான கலபுரகிப் பகுதியில் நடத்தப்பட்ட இரண்டு வளர்ச்சிகள் இங்கு குறிப்பிடதக்கவைகள் ஆகும். முதலாவது தேசிய உணர்வை தூண்டும் நிறுவும் நோக்கத்தில் நூலக இயக்கம் மற்றும் இரண்டாவது குழந்தைகள் கல்வி கற்பதற்காகவும், அவர்களுக்கு சுதந்திரம் போராட்டம் குறித்து பயிற்சி அளிக்கவும். தேசிய பள்ளிகளை தொடங்கப்பட்டது. நான்கு தேசிய பள்ளிகள் இங்கு நிறுவப்பட்டன.

அவை :

1. புதிய வித்யாலயா, கலபுர்கி (1907)
2. உஸ்மானியா தேசியபள்ளி, சிஞ்சோலி
3. வித்யானந்தா குருகுலம், குகனுர் (1922)
4. ஹம்தர்த் தேசிய பள்ளி ராய்ச்சூர் (1922)

ஆர்ய சமாஜ் மற்றும் வந்தேமாதரம் போன்றவற்றின் விளைவுகளால். இப்பிரிவில் தேசிய முழக்கம் ஏற்பட்டது. மகா கவியின் கல்யாண் ஷெட்டி அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்க ''தருண் சங்கம்'' ஒன்றை உருவாக்கினார். அதன் தலைவராக மகாகவியின் சந்திரசேகர் பாட்டீல் தலைமை வகித்தார். இப்பிரிவை சார்ந்த ஸ்ரீ ரமாணந்த தீர்த்தர் முக்கிய சுதந்திரப்போராட்ட வீரர் ஆவார். இவரை போன்றே ஆயிரங்கணக்கான மக்கள் சுதந்திரப்போராட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

நிஜாம் ஷாஹீ எதிரான விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர்களில் சர்தார் சரணகவுடா இனாம்தார் குறிப்பிடத்தக்கவராவர். நிஜாமின் தனிப்படையான ரஸாகர்கள் கலபுரகி மக்களை மனிதாபிமானமற்ற முறையில் துன்புறுத்தினர். மக்கள் அவர்களை கடுமையாக எதிர்த்தனர். இந்தியா ஆகஸ்ட் 15, 1947 இல் சுதந்திரம் அடைந்ததும், செப்டம்பர் 17, 1948 இல் நிஜாம் இராஜ்ஜியம் இந்தியாவுடன் ஒருங்கிணைக்கப்பட்டன.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. விடுப்பட்ட இடங்களை நிரப்புக:

1. கலபுரகி மாவட்டம் விடுதலைப் பெற்ற ஆண்டு ________ ஆகும்.
2. இப்பிரிவின் ________ என்ற இடத்தில் சுரங்கம் உள்ளது.

3. பல்லாரி மாவட்டத்தில் __________ என்ற இடத்தில் கரடி சரணாலயம் உள்ளது.

4. கர்நாடகா மத்திய பல்கலைக்கழகம் __________ மாவட்டத்தில் உள்ளது.

5. விஜயநகர மாவட்டத்தின் ஹம்பியில் உள்ள பல்கலைக்கழகத்தின் பெயர் __________ ஆகும்.

II. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:

6. எந்த ஆண்டு நிஜாமின் மாகாணம் இந்தியாவுடன் இணைக்கப் பட்டது?

7. ஹம்பி எந்த மன்னர்களின் தலைநகரமாக விளங்கினது?

8. பாமினி மற்றும் விஜயநகர மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆட்சி செய்த இரு பாலேகார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

9. கலபுர்கி பிரிவின் இரு முக்கிய ஆறுகள் எவை?

10. பீதர் மாவட்டத்தில் உள்ள அணையின் பெயரை எழுதுக.

11. விஜயநகர், பெல்லாரி மாவட்டத்திற்கு நீர்பாசன வசதிகளை வழங்கும் அணையின் பெயர் என்ன?

12. கலபுரகி மாவட்டத்தின் முக்கிய தொழில்கள் யாவை?

13. கலபுரகி பிரிவின் எந்த மாவட்டங்களில் இரும்பு தாது மற்றும் மாங்கனிஸ் சுரங்கம் உள்ளது?

14. கலபுரகியில் உள்ள புகழ்பெற்ற தர்காவின் பெயர் என்ன?

15. இப்பிரிவில் பண்டைய காலத்தில் எழுதப்பட்ட இரண்டு காவியக் கவிதைகளை குறிப்பிடவும்.

16. வசன இயக்கம் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுக.

17. தாச இலக்கியத் துறையில் சாதனை புரிந்தவர்களில் இருவரின் பெயர்களை குறிப்பிடவும்.

18. கலபுரகி பிரிவின் நாட்டுப்புற நடனத்தின் பெயர் என்ன?

19. இப்பிரிவின் ராய்ச்சூரில் உள்ள பல்கலைக்கழத்தின் பெயர் என்ன?

20. பெல்லாரி மாவட்டத்தில் உள்ள பல்கலைக்கழகத்தின் பெயர் என்ன?

NOT TO BE REPUBLISHED @KTBS

21. ''கன்னட'' பல்கலைக் கழகம் இப்பிரிவில் எங்குள்ளது?

22. சுதந்திரப் போராட்டத்துடன் மேலும் இரண்டு இயக்கங்கள் கலபுரகி பிரிவில் நிகழ்ந்தன. அவற்றின் பெயர்களை எழுதுக.

23. ''நிஜாம்களின்'' தனியார் இராணுவத்தின் பெயர் என்ன?

24. கலபுரகி பிரிவில் சுதந்திரப் போராட்டத்தின் அங்கமாக நிறுவப்பட்ட ஏதேனும் இரண்டு தேசியப்பள்ளிகளின் பெயர்களை குறிப்பிடவும்.

25. நிஜாம் மாகாணம் இந்தியாவுடன் எப்போது இணைப்பட்டன?

26. கலபுரிகியின் முக்கிய சுதந்திர போராட்ட வீரரின் பெயர் என்ன?

செயல்பாடுகள் :

* இப்பிரிவில் உள்ள இரும்பு தாது சுரங்கங்கள் மற்றும் இரும்பு மற்றும் எஃகு தொழிற் சாலைகளின் பட்டியலை தயாரிக்கவும். அவற்றின் படங்களுடன் அறிக்கை ஒன்றை தயாரிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

1.4 பெலகாவி பிரிவு

பொ.ச. 1956-வரை இப்பிரிவின் 4 மாவட்டங்கள் மும்பாய் பகுதியோடு இணைந்திருந்தன. மாநிலங்களின் மறுசீரமைப்பு பணியின் போது அவைகள் கர்நாடகாவுடன் இணைக்கப்பட்டன. இப்பிரிவின் தார்வாட் மாவட்டம் பொ.ச. 1997-இல் பிரிக்கப்பட்டு, ஹாவேரி மற்றும் கதக் மாவட்டங்களாக அமைக்கப்பட்டன. விஜயபுரா மாவட்டத்தை,பிரித்து பாகல்கோட்டை மாவட்டம் என உருவாக்கப்பட்டன. இப்பிரிவில் ஏழு மாவட்டங்கள் உள்ளன. அவை பெலகாவி, தார்வாட், ஹாவேரி, கதக், விஜயபுரா, பாகல்கோட்டை மற்றும் உத்தர கன்னடா ஆகும்.



NOT TO BE REPUBLISHED
@KTBS

பெலகாவி பிரிவின் மாவட்ட வரைபடம்

வரலாற்று பின்னணி:

சாதவாகனர்கள் மற்றும் மௌரியர்கள் இப்பகுதிகளை ஆட்சிபுரிந்து வந்தனர். இப்பகுதியின் பனவாசி கதம்பரின் தலைநகரமாக விளங்கியது. பாதாமி சாளுக்கியர்களின் தலை நகரமாக பாதாமி விளங்கியது. பாதாமி, பட்டதகல்லு மற்றும் ஐஹொலே ஆகிய இடங்களில் உலகப் புகழ்பெற்ற கோயில்கள் உள்ளன. பாதாமியின் குகைகளில் சிற்பக்கலைகளின் சிறப்பைக் காணலாம். இப்பகுதியின் பசவன்பாகேவாடி, கூடலசங்கமா போன்றவை வசன இயக்கத்தின் மையங்களாகும். பிஜாப்பூரில் உள்ள கோளகும்மட்டா மற்றும் சௌதத்தியில் உள்ள யல்லம்மா கோவில்கள் புகழ்பெற்ற சுற்றுலா தளங்களாகும். சமூக சீர்த்தவாதிகளில் முன்னோடியான ஶ்ரீ பசவேஸ்வரர் ஐக்கியமான தலம் கூடல சங்கமத்தில் உள்ளன. பெலகாவின் பகுதிகளை இராஷ்ரகூடர்களும் அவர்களுக்கு பின்னர் பஹாமினி மன்னர்கள் ஆட்சி புரிந்தனர்.

இந்திய சுதந்திர இயக்கத்தில் பெலகாவி பகுதிகளின் மாவட்டங்கள் முக்கிய பங்காற்றியுள்ளன. கித்தூர் ராணி சென்னம்மா பொ.ச. 1824 ஆம் ஆண்டு. ஆங்கிலேயருக்கு எதிராக போராடிய வரலாற்றுச்சம்பவம் ஆகும். பின்ன சங்கொள்ளி ராயண்ணாவின் போராட்டம் நினைவில் கொள்ளத்தக்கதாகும். இந்திய தேசிய காங்கிரசின் தேசிய மாநாடு மகாத்மா காந்தியின் தலைமையில், பெலகாவியில் பொ.ச. 1924 இல் நடைபெற்றன. உத்தரகாண்ட் மாவட்டத்தில் வரி மறுப்பு, சத்யாகிரகப் போராட்டம் நடைபெற்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED



கித்தூர் ராணி சென்னம்மா

சங்கொள்ளி ராயண்ணா

இப்பிரிவின் மாவட்டங்கள், மும்பை மாகாணத்தின் ஒரு பகுதியாக இருந்தன. கர்நாடகா ஒருங்கிணைக்கப்பட்ட போது பொ.ச. 1956 இல் அவை கர்நாடகவுடன் இணைக்கப்பட்டன. ஆரம்பத்தில் இப்பிரிவில் பெல்காம், உத்தர கன்னடா, பிஜாப்பூர் (விஜயபுர்) மற்றும் தார்வாட் ஆகிய நான்கு மாவட்டங்கள் இருந்தன. ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல, தார்வாட் மற்றும் விஜயப்பூர் மாவட்டங்கள்

பிரிக்கப்பட்டதால். தற்போது ஏழு மாவட்டங்கள் இப்பிரிவில் உள்ளன, விஜயப்பூர் உத்தரகன்னடா மற்றும் பெல்காம் மாவட்டங்கள், இப்பிரிவின் எல்லை மாவட்டங்களாகும்.

1.4.2 இயற்கை வளங்கள்

குகை கோயில் பாதாமி

இப்பிரிவில் இயற்கை வளங்கள் ஏராளமாக உள்ளன. பாய்ந்தோடும் அறுகள், அடர்ந்த காடுகள், கனிமச் சுரங்கங்கள், வளமான மண் மற்றும் மின் உற்பத்தி மையங்கள் உள்ளன. கிருஷ்ணா, மலபிரபா, கட்டபிரபா, பீமா, காளி மற்றும் துங்கபத்ரா ஆகியவை இப்பிரிவின் முக்கிய ஆறுகள் ஆகும். இவ்வாறுகளின் போக்கில் அழகிய நீர்வீழ்ச்சிகள் உள்ளன. கோகாக் நீர்வீழ்ச்சி கவர்ந்திழுக்க கூடியவை ஆகும். தாண்டேலியின் அருகிலுள்ள மாகோடு நீர்வீழ்ச்சிகள், கார்வாரின் அருகில் தேவமாலா நீர்வீழ்ச்சிகள், முருடேஷ்வர அருகிலுள்ள அப்சரா கொண்டா நீர்வீழ்ச்சிகள் போன்றவை இயற்கை எழில் கொஞ்சும் இடங்களாகும். இப்பகுதியில் அழகிய சுற்றுலா தலங்கள் உள்ளன. அன்ஷி தேசியப்பூங்கா காளி ஆற்றின் கரையில் அமைந்துள்ளன. தண்டேலி வனவிலங்கு சரணாலயமும் உள்ளது. அத்திவேரி பறவைகள் சரணாலயம் மற்றெமொரு இயற்கை எழில் மிகுந்த தலமாகும்.

இப்பிரிலுள்ள பாகல்கோட்டையில் இரும்புத்தாது கிடைக்கின்றன. மற்றொரு மூலப் பொருளான சுண்ணாம்புக்கல்லும் இங்கு கிடைக்கின்றன. இப்பகுதி காடுகளில் கூழாங்கற்கள் அதிகளவில் கிடைக்கின்றன. இலகல் என்னும் இடத்தில் கிராணைட் படிவங்கள் காணப்படுகின்றன. கிராணைட் கற்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இலகல், கிராணைட் தொழில்

@KTBS NOT TO BE REPUBLISHED

1.4.3 காடுகள், வனவிலங்கு சராணாலயங்கள்:

இப்பிரிவில் பெலகாவி, உத்தரகன்னடா மற்றும் தார்வாட் போன்ற மாவட்டங்களில் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. இங்கு பசுமையான காடுகள் உள்ளன. இக்காடுகள் வெப்பமண்டல காலநிலையில் காணப்படுகின்றன மற்றும் ஆண்டு முழுவதும் பசுமை நிலவுகின்றன. வறட்சி நிலை காணப்படுவதில்லை. காடுகளுக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதிகள் உள்ளன. இங்கு ரிசர்வ் காடுகள், மற்றும் திறந்த வெளி காடுகள் உள்ளன. உத்தர கன்னட மாவட்டத்தில் 80% காடுகள் உள்ளன. யானை, காட்டெருமை, மான், புலி, சிறுத்தை, கரடி, காட்டுபூனை, மயில் மற்றும் பிற வன விலங்குகள் இங்கு வாழ்கின்றன.

அடர்ந்த காடு

ரோஸ்வுட், சந்தனமரம், மத்தி, நந்தி, தேக்கு மற்றும் பல விலையுயர்ந்த மரங்கள் இப்பகுதியில் காணப்படுன்றன. அங்கு வனப்பொருட்கள் காடுகளில் வசிக்கும் பழங்குடி சமூகங்களின் வருமான ஆதாரங்களாக அமைந்துள்ளன.

NOT TO BE

1.4.4 வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகள் :

இப்பிரிவில் அதிகளவில் கருப்பு மற்றும் சிவப்பு மண் காணப்படுகின்றன. நெல், பருத்தி, சோளம், பருப்பு வகைகள் கோதுமை, நிலக்கடலை, கம்பு மற்றும் மிளகாய் ஆகியவை இப்பிரிவின் முக்கிய பயிர்களாகும். மகாலிங்கபுராவின் வெல்லம், பியடகியின் காய்ந்த மிளகாய் மற்றும் முந்திரி பருப்புகள் போன்றனவ முக்கிய தயாரிப்புகளாகும். மலபிரபா நீர் பாசனத்திட்டம் (நவிலுதீர்த்தா) மற்றும் கிருஷ்ணா மேற்கரை நீர் பாசனத்திட்டம் (ஆலமட்டி) மற்றும் நாராயணபுரா ஆகியவை முக்கிய நீர்ப்பாசனத்திட்டங்கள் ஆகும். காளி, வரதா, சரஸ்வதி, டோனி, பீமா ஆகியவை முக்கிய ஆறுகளாகும்.

அலமட்டி அணை

NOT TO BE REPUBLISHED ©KTBS

உத்தர கருநாடக மாவட்டத்தில் மீன் பிடித்தல் முக்கிய தொழிலாகும். இங்கு பல மீன் பதப்படுத்தும் ஆலைகள் உள்ளன. முந்திரி கொட்டை மற்றொரு முக்கிய வேளாண் பொருளாகும். பல முந்திரி கொட்டை பதப்படுத்தும் ஆலைகள் இங்குள்ளன. வட கன்னடத்தில் கைகா, கத்ரா, சுபா, கொடசஹள்ளி நாகஜரி மற்றும் கைகா மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. பாக்கு, பருத்தி, மசாலா பொருட்கள் போன்றவை முக்கிய வணிகப் பயிர்களாகும். விஜயபுரா மற்றும் பாகல்கோட்டை மாவட்டங்கள் தோட்டக்கலைப் பயிர்களுக்கு பெயர் பெற்றவை ஆகும். இங்கு நிலவும் காலநிலை மற்றும் மண்ணின் வளம் பழங்கள் விளைச்சலுக்கு ஏற்றதாகும். இம்மாவட்டங்களில் திராட்சை அதிகமாக விளைகின்றன. இங்கு பல திராட்சை பதப்படுத்தும் ஆலைகள் உள்ளன. மாதுளை, ஆரஞ்சு, சப்போட்டா, சாத்துக்குடி மற்றும் மற்ற பழங்கள் முகலியன விளைவிக்கப்படுகின்றன. தரமான விதை உற்பத்தி மையமாக ஹாவேரி விளங்குகின்றன. இங்கு பல தேசிய விதை உற்பத்தி மையங்கள் உள்ளன. குலேதகுட்டா ரவிக்கை துண்டுகள் தயாரிப்பிற்கு பெயர் பெற்று விளங்குகின்றது.

ஹுப்ளி, பெளகாவி, பாகல்கோட்டை, கதக் மற்றும் ஹாவேரி ஆகியவை முக்கிய தொழில்துறை மையங்களாக உருவாகி வருகின்றன. பல கிராணைட் செயலாக்க மையங்கள் இலகல் என்னும் இடத்தில் உள்ளன.

1.4.5 கலை, இலக்கியம், இசை, நாட்டுப்புற கலைகள், நாடகம்

இப்பிரிவின் அனைத்து மாவட்டங்களும் பல்வேறு நுண்கலைகளுக்கு புகழ் வாய்ந்தவை ஆகும். சர்வதேச அளவில் பிரபலமான பல

ஹிந்துஸ்தானி பாடகர்களின் தாயகம் தார்வாட் ஆகும். பாரத ரத்னா பண்டிட் பீம்சென் ஜோஷ், பண்டிட் மல்லிகார்ஜுனா மன்சூர், பாலேகான் (சித்தார்), விதுஷி கங்குபாய் ஹனகல், பண்டிட் வெங்கடேஷ் குமார், பண்டிட் பசவராஜ் ராஜகுரு, ஏனேகி பாலப்பா, அப்பாலால் ஜமகண்டி போன்ற பல இசை கலைஞர்கள் தார்வாடைச் சார்ந்தவர்கள் ஆவர்.

குமாரவியாசர்

கனகதாரசர்


சந்திர சேகர் கம்பாரா


Fr. பெர்டினேண்ட் கிட்டல்

D.R. பெந்ரே

D.C. பாவடே


மொஹரே ஹனுமந்த ராவ்


தினகர் தேசாய்

சிசுநால ஷரிப்

இடைக்காலத்தில் கன்னடத்தில் கவிதைகளை இயற்றிய பல கவிஞர்கள் இப்பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்களில் ரன்னா, நாகச்சந்திரா, நயன சேனா, குமாரவியாசர், சாமரசர், பசவண்ணர், கனகதாசர் மற்றும் சிசுனாள ஷெரீப் போன்றவர் பெளகாவி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தவர்கள் ஆவர். வசனக்கர்தா தந்தை பி.கு. ஹலகட்டி, பூசனூர்மட், தினகர தேசாய், பசவராஜ் கட்டி மனே, எம்.எம் கல்புர்கி மற்றும் ஆதீயா ரங்காச்சார்யா (ஸ்ரீரங்கா), ஞானபீட விருது பெற்ற தா. ரா. பேந்திரே, வி.கே. கோகக், கிரீஷ்கர்னாட், சந்திரசேகர் கம்பர் ஆகியோர் இப்பிரிவை சார்ந்தவர்கள். இவ்வெழுத்தாளர்கள் நவீன இலக்கியத்திற்கு சிறப்பளித்துள்ளனர். கன்னட அகராதியை நான்கு தொகுதிகளாக வெளியிட்ட,

© KTBS NOT TO BE REPUBLISHED

பெர்டினேண்ட் கிட்டல் அவர்கள் பணிபுரிந்த இடம் தார்வாட் ஆகும். நாட்டுப்புற பாடகர் ஹுக்கேரி பாளப்பா, நடோஜா சுக்ரி, பொம்மகௌடா மற்றும் பலர் நாட்டுப்புறக் கலைத்துறைக்கு புகழ் தந்தவர்கள் ஆவர். ஸ்ரீ கிருஷ்ணாபாரிஜாதா, படகுதிட்டு யக்ஷகானா, சன்னாடா, தொட்டாட்டா மற்றும் பிற நாடக கலை, வடிவங்கள் இங்கு வளர்ச்சி கண்டன. அப்பாலாஜமகண்டி, கௌஜலகி நிங்கம்மா, லோகாபுர தேஷ்பாண்டே மற்றும் பலர் நடிப்பு கலையில் தேர்ச்சி புகழ் பெற்றவர்களாக திகழ்ந்தனர்.

கர்நாடகா பல்கலைக்கழகம் - தார்வாட்

கர்நாடகா வித்யா வர்த்தக சங்கம் - தார்வாட்

©KTBS NOT TO BE REPUBLISHED

1.4.6 கல்வி மற்றும் சுகாதாரம் : தார்வாட், பௌகாவி மற்றும் விஜயபுரா ஆகியவை இப்பிரிவின் கல்விமையங்களாகும். பொ.ச. 1949 இல் ஆரம்பித்த கர்நாடக பல்கலைக்கழகம் தார்வாடில் உள்ளன. ஹுப்ளியில் கருநாடக சட்டபல்கலைக்கழகம் உள்ளது. பெலகாவில் ராணி செ ன்னம்மா பல்கலைக்கழகம், எம் விஸ்வேஸ்வரய்யா தொழில் நுட்ப பல்கலைக்கழகம் உள்ளன. விஜயபுரா கர்நாடக மாநிலத்தில் அக்க மஹாதேவி மகளிர் பல்கலைக்கழகம் உள்ளன. பாகல்கோட்டையில் தோட்டக்கலை அறிவியலர் பல்கலைக்கழகம் உள்ளன.

சித்தேஷ்வர சுவாமிகள் பொ.ச. 1940 ஆம் ஆண்டு 5 ஆம் தேதி விஜயபுரா மாவட்டத்தில் உள்ள நந்திஹாளாவில் ஒகேப்ப பிரதாரா மற்றும் சங்கவ்வா ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இவரது சொந்த ஊர் பிஜ்ஜரகி ஆகும். சித்தேஷ்வர் ஒரு துறவி மற்றும் ஆன்மீக சிந்தனையாளர் ஆவார். இவரை காயகயோகி என்றும் அழைப்பர். தன் சொற்பொழிவுகள் மூலம் பலருக்கும் கலங்கரை விளக்கமாக விளங்கிய சுவாமிகள், பிஜாப்பூரில் உள்ள ஞான யோகாஸ்ரமத்தின் தலைவராக விளங்கினார்.



சித்தேஷ்வர சுவாமிகள்

இப்பிரிவின் மாவட்டங்கள் படிப்பறிவு விகிதத்தில் சிறந்து விளங்குகின்றன. பெளகாவி முதல் ஹுப்பள்ளி, விஜயபுரா, பாகல் கோட்டையில் மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகள் உள்ளன. மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் சென்ன பசப்பாவின் தலைமையில் கன்னடப்பள்ளிகள் தொடங்கப்பட்டன மற்றும் கல்வித்துறையில் பல தனியார் கல்வி நிறுவனங்கள் செயலாற்றி வருகின்றன. கிறிஸ்துவ மிஷனரி நிறுவனங்கள், கல்வி வளர்ச்சியில் பெரும் பங்களித்துள்ளன. கன்னட அகராதியை நான்கு தொகுதிகளாக வெளியிட்ட பெர்டினேணட் கிட்டல் அவர்களின் பணியிடம் தார்வாட் ஆகும்.

பெளகாவி பிரிவு சுகாதாரத் துறையிலும் மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளன. மக்கள் தொகை பெருக்கத்தின் அளவு குறைந்தும். குழந்தை இறப்பு விகிதம் மற்றும் தாய் இறப்பு விகிதம் அதிகமாக உள்ளன. கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார மையங்கள் உள்ளன. கிராமங்களில் பல சுகாதார மையங்கள் உள்ளன. மருத்துவ கல்லூரிகள், தங்களின் மருத்துவமனைகளை செயலாற்றுகின்றன.

1.4.7 கலாச்சார வளங்கள்:

பெளகாவி பிரிவு வளமான கலாச்சார பாரம்பரியத்தை கொண்டதாகும். இப்பிரிவு கலை, இசை, நாடகம் மற்றும் இலக்கியத்திற்கு அதிக பங்களித்துள்ளன. இப்பிரிவின் இசைக்கலைஞர்கள் தேசிய மற்றும் சர்வதேச புகழ் பெற்றுள்ளனர். கானயோகி பஞ்சாக்ஷரிகவாயி பார்வையற்ற குழந்தைகளுக்கு தங்குமிடம் அளித்து அவர்களின் இசைக் கல்வியை ஊக்குவித்துள்ளனர். ஹுப்ளி, கருநாடகத்தின் ''வணிக மையம்'' என்று அழைக்கப்படுகின்றது. பேடகி, மகாலிங்கபுரா மற்றும் விஜயபுரா முறையே மிளகாய், வெல்லம் மற்றும் திராட்சை வணிக மையங்களாக உள்ளன. பெளகாவி மாவட்டம் தொழில்முறை திரையரங்கின் சிறப்பு மையமாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED


பீம்சென் ஜோஷி

மல்லிகார்ஜுனா மன்சூர்

கங்குபாய் ஹனகல்

பஞ்சாக்ஷரி கவாயி

இப்பகுதியின் வரலாற்று நினைவுச்சின்னங்கள் உலகப் புகழ் பெற்றவைகளாகும். பாதாமி, பட்டதகல்லு மற்றும் ஐஹொளெ ஆகிய இடங்களில் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள், கர்நாடக

கலாச்சாரத்தைக் பிரதிபலிக்கின்றன. சுற்றுலா தலங்கள் விரைந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. வட கன்னடத்தின் கார்வார் INS கதம்ப கடற்படையின் முக்கிய தலமாக உருவாகி வருகின்றன. இப்பிரிவின் அடர்ந்த காடுகளில் வன விலங்குகள் உள்ளன. பல ஆறுகளின் பிறப்பிடமாகவும் உள்ளன. ஏராளமான நீர்வீழ்ச்சிகள் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கின்றன. கடற்கரைகள் மக்களை கவரும் சுற்றுலா தலங்களாகும்.

1.4.8 சுதந்திர போராட்ட வீரர்கள்:

பாட்டீல் புட்டப்பா

P.G. ஹளகட்டி

@KTBS NOT TO BE REPUBLISHED

பெலகாவி பிரிவின் கித்தூரில் 19 ஆம் நூற்றாண்டிலேயே ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டம் நடந்தது. மைலாரா மகாதேவப்பா, இந்தியாவின் சுதந்திரத்திற்காக பலியானார். இப்பிரிவை சார்ந்த ஆயிரக் கணக்கானோர்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறைவாசம் அனுபவித்துள்ளனர். சித்தப்பா கம்பளி, ஆலூர் வெங்கடராவ், நா.சு ஹர்டிகர், ஹர்டேக்கர் மஞ்சப்பா, கங்காதர் ராவ், தேஷ் பாண்டே முதலானோர்கள் ஆவர். முதன்முதலில் கன்னடாம்பே வரைபடத்தை உருவாக்கிய தொட்ட மேடே அந்தானெப்பா. ஆர்.ஆர். திவாகர், நாடோஜா பாடீல் புட்டப்பா போன்றோர் முனவள்ளி வழக்கறிஞர்களால் நடத்திய ராமதுர்கா விடுதலை போராட்டத்தில் எட்டுப் பேர் தூக்கிலிடப்பட்டனர். விடுதலை போராட்டத்துடன், கர்நாடக ஒருங்கிணைப்பிற்காக போராடினர். அநேகர் இந்த போராட்டங்களுடன், சமூக சீர்திருத்தத்திலும் ஈடுபட்டனர்.

ஆர்.எச். தேஷ்பாண்டே அவர்கள் அனைத்து கன்னடர்களின் சுய மரியாதையைத் தட்டி எழுப்பும் வகையில் ‘‘சிரிகன்னடம் கெல்கே’’

என்ற சப்தாக்ஷரி மந்திரத்தைக் அளித்தார். டா.ப.கு. ஹளகட்டி வசன பிதாமகன் என்ற பட்டத்திற்குரியவரானார் இவர் பத்திரிகையிலும் பணியாற்றினார். மொஹரே ஹனமந்தராயர், பாட்டீல் புட்டப்பா போன்றவர்கள் விடுதலை போராட்டத்தில், தங்கள் பத்திரிகைகளின் வாயிலாக பங்கேற்க மக்களைத் தூண்டினர்.

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களை சரியான சொற்களைக் கொண்டு நிரப்புக:

1. பெலகாவி பிரிவில் உள்ள மாவட்டங்கள் கர்நாடகாவுன் ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டு .... ஆகும்.
2. ஆங்கிலேயர்க்கு எதிராக போராடிய ராணி .... ஆவார்.
3. ஹாவேரி, கதக் மற்றும் பாகல்கோட்டை .... ஆண்டு உருவாக்கப்பட்டன.
4. பாதாமி .... அரசர்களின் தலைநகரமாக இருந்தது.
5. இளகல்லில் .... இயற்கை வளம் கிடைக்கின்றன.
6. பெலகாவி பிரிவின் பியாடகி .... விவசாய உற்பத்திக்கு பெயர் பெற்றது.
7. பெலகாவி பிரிவின் .... மாவட்டத்தில் தாவரவியல் பல்கலைக்கழகம் உள்ளது.
8. கர்நாடக மாநிலத்தின் .... என்னும் இடத்தில் முதன்முதலில் பெண்கள் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.
9. முனவல்லி வழக்கறிஞர்கள் தலைமையில் நடந்த .... போராட்டத்தில் எட்டு பேர் தூக்கிலிடப்பட்டனர்.
10. பெலகாவி பிரிவின் .... மாவட்டத்தில் விதைகள் உற்பத்தி மையங்கள் உள்ளன.

II. கீழ்வரும் வினாக்களுக்கு விடையளி :

11. காந்திஜி தலைமையில் இந்திய தேசியகாங்கிரஸ் மாநாடு நடந்த ஆண்டு மற்றும் எந்த மாவட்டத்தில் நடைபெற்றன?
12. பெலகாவி பிரிவின் ஏதேனும் இரண்டு ஆறுகளின் பெயர்களை குறிப்பிடவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

13. பெலகாவி பிரிவின் வனவிலங்கு சரணாலயத்தின் பெயர் என்ன?
14. பசுமையான காடுகள் என்றால் என்ன?
15. பெலகாவி பிரிவில் உள்ள நீர்வீழ்ச்சியின் பெயர் என்ன?
16. பெலகாவி மாவட்டத்தில் இரும்புத்தாது எங்கு கிடைக்கின்றன?
17. பெலகாவி பிரிவின் முக்கிய பயிர்கள் யாவை?
18. மீன் பிடித்தலை முக்கிய தொழிலாக கொண்ட மாவட்டம் எது?
19. பெலகாவி பிரிவில் ஞானபீட விருது பெற்ற நால்வரின் பெயரை குறிப்பிடுக.
20. பெலகாவி பிரிவில் மூன்று புகழ்பெற்ற பாடகர்களின் பெயர்களை குறிப்பிடுக.
21. பெலகாவி பிரிவின் ஏதேனும் இரண்டு நாடக வடிவங்களை குறிப்பிடுக.
22. பெலகாவி பிரிவின் எந்த மாவட்டத்தில் கருநாடக அரசு சட்டப் பல்கலைக்கழகம் உள்ளது?
23. பெலகாவி பிரிவின் மூன்று குறிப்பிடத்தக்க சுதந்திர போராட்ட வீரர்களின் பெயர்களை எழுது.

@KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடுகள்:

- கர்நாடகாவின் 31 மாவட்டங்களின் பட்டியலை தயாரிக்கவும். மாவட்டவாரியாக வரைபடங்களை சேகரித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலா தலங்களின் பட்டியலையும் உருவாக்கி ஒரு அறிக்கை தயாரிக்கவும்.
- பல்வேறு மாவட்டங்களில் உள்ள வசனகர்த்தாக்களுக்குத் தொடர்பான இடங்களின் பட்டியலை தயாரிக்கவும்.

பாடம் 4	வேத காலப்பண்பாடு (The Culture of the Vedic Period)

R6W8Z1

பாட அறிமுகம்

இப்பாடத்தில் வேதங்களை அறிமுகப்பட்டுள்ளன. முந்தைய வேதகாலம் மற்றும் பிந்தைய வேதகாலத்தின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சமய நிலைகளில் காணலாகும் வேறுபாடுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

திறன்கள் :

1. நான்கு வேதங்களின் பெயர்களை அறிதல்
2. முந்தைய வேத காலம் மற்றும் பிந்தைய வேதகாலங்களிலும் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை பற்றி அறிதல்
3. வேத காலங்களின் அரசியல் அமைப்புகளை அறிதல்
4. வேதங்களில் உள்ள செய்திகளைப் புரிந்து கொள்ளுதல்
5. இந்தியாவின் மகா காவியங்களின் பெயர்களை கூறுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

மத்திய ஆசியாவின் ஆர்ய மக்களின் வருகையினால், இந்தியாவில் புதிய கலாச்சாரம் ஆரம்பமாயின. அதை 'வேதகால கலாச்சாரம்' என்று அழைத்தனர். வேதங்களின் கலாச்சாரம் முதலில் சரஸ்வதி நதி சமவெளியில், பிறகு கங்கா நதி சமவெளியில் தலை தூக்கின. வேத இலக்கியம் உருவாகிய காலத்தை ''வேதகாலம்'' என்று அழைக்கின்றனர்.

வேதம் என்றால் ஞானம். வேதங்கள் நான்கு.அவையாவன

1.ரிக் வேதம்

2.யஜுர் வேதம்

3.சாமவேதம்

4.அதர்வன வேதம்.

இவைகளில் 'ரிக் வேதம்' பழமை வாய்ந்தது. சமஸ்கிருத மொழியில் உள்ள இவ்வேதங்கள் ஆயிரமாயிரம் வருட காலம் வாய்மொழியாகவே இருந்தன. ரிக் வேதத்தில் அதிக முறை குறிப்பிடப்பட்ட நதி - சரஸ்வதி. தற்போதைய இராஜஸ்தானின் தார் பாலைவனத்தில் மறைந்திருக்கும்

‘கக்கர்-ஆக்ரா’ நதியே பழமையான சரஸ்வதி நதி என நம்பப்படுகின்றது. ஆயினும் ஆப்கானஸ்தானித்தில் ஓடும் ஹெல்மண்டு (Helmand) நதியே பழமையான சரஸ்வதி நதி என்ற கருத்தும் உண்டு.

ஆரியரின் காலத்தில் நான்கு வேதங்கள் மற்றும் அவைகளுக்கு தொடர்பான இலக்கியம் உருவாயின. வேதகால வரலாற்றை அறிய மருத்துவ இலக்கியமே ஆதாரம் ஆகும். ரிக் வேத காலத்தை பழைய வேத காலம் என்றும் அதையடுத்த வேதகாலத்தை புதிய வேதகாலம் என்றும் அழைக்கப்படுகின்றன.

முந்தைய வேதகாலம் :

சமூக வாழ்க்கை : முந்தைய வேதகாலத்தில் குடும்பம், சமூகத்தின் அடிப்படை அமைப்பாக இருந்தன. தந்தை குடும்பத்தின் தலைவராக இருந்தார். கூட்டுக்குடும்ப அமைப்பு சமூதாய வழக்கத்தில் இருந்தன. போரில் தாம் வென்றவர்களை அடிமைகளாகவும், தாசிகளாகவும் (பணிபெண்களாகவும்) கருதினர்.

பெண்களின் நிலை: பெண்களுக்கு சமூதாயத்தில் குறிப்பிட்ட நிலை மற்றும் அந்தஸ்து இருந்தன. இவர்கள் அரசாங்க அமைப்புகளிலும் பங்கு கொண்டனர். விதவை திருமணம் வழக்கத்தில் இருந்தன. பெண் குழந்தைகளும் வேத பாடம் பயின்றனர். கோஷா, அபாலா, லோபமுத்ரா, இந்திராணி, விஷ்வரா முதலானோர் வேதகாலத்தின் மகளிர், அறிஞர்களாக விளங்கினர். அரசாங்க அமைப்புகளான சபா மற்றும் சமிதிகளில் பெண்களும் பங்கேற்றனர். குழந்தை திருமணம் மற்றும் கலப்பு திருமண முறை வழக்கம் அக்காலத்தில் இல்லை.

பொருளாதார வாழ்க்கை : கால்நடை பராமரிப்பு மற்றும் விவசாயம் ஆரியர்களின் முக்கிய தொழிலாக இருந்தன. பலவகை தானியங்களை அவர்கள் விளைவித்தனர். இரும்பு முதலான உலோகங்களின் பயன்களை அறிந்திருந்தனர். பருத்தி மற்றும் கம்பளி நெசவாளர்கள், தச்சர்கள், கொல்லர்கள் மற்றும் குயவர்கள் இருந்தனர். தொழில்களில் விவசாயம், மருத்துவம் மற்றும் அர்ச்சக தொழில்கள் முக்கியமானவைகள் ஆகும். ஆயினும் யாராக இருப்பினும் எந்தத் தொழிலையாவது செய்யலாம் எனும் நிலை நிலவியிருந்தன. பசுக்களை செல்வங்களாக கருதினர். அவைகளுக்காக போர்கள் நடைபெற்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

அரசியல் வாழ்க்கை: ஆரியர்கள் கூட்டத்தின் தலைவனை 'அரசன்' என அழைத்தனர். 'அரசன்' சர்வ அதிகாரியாக விளங்கவில்லை மற்றும் அரசு அதிகாரம் வம்ச பரம்பரையாகவும் விளங்கவில்லை. 'சபா', 'சமிதி' மற்றும் 'விதாதா' எனும் அரசாங்க அமைப்புகள் ஆட்சியில் முக்கிய நிலையைப் பெற்றிருந்தன. அரசர் மூத்தோரின் அறிவுரைகளைப் பெற்று தீர்ப்பு வழங்கும் நீதிபதியாகவும் விளங்கினர். போர் புரிதல், மக்கள் வாழ்க்கை, சொத்து மற்றும் கால்நடை பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் போன்றவைகள் அரசரின் கடமைகளாக விளங்கின.

சமய வாழ்க்கை : ஆரியர் இந்திரன், சூரியன், சோமன், வருணன், யமன், அஸ்வினி முதலான தேவதைகளை வழிபட்டனர். ஆரியர்கள் இறைவழிபாட்டினை யாகங்களின் மூலம் வழிப்பட்டனர். ‘‘சத்தியம் என்பது ஒன்றே ஆகும். அறிந்தோர் அதனை பல வகைகளில் விமர்சிக்கின்றனர். உலகின் அனைத்து மூலைகளில் இருந்தும் நல்ல சிந்தனைகள் நம்மை வந்தடையட்டும் என்பதே வேதங்கள் கூறும் கருத்துகள் ஆகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

புதிய வேத காலம் :

பல நூற்றாண்டுகள் உருண்டோடின பின்னர் சப்த சிந்து பகுதியில் மக்கள் தொகை பெருகின. வாழ்க்கை சுழற்சியில் மாற்றங்கள் ஏற்பட்டன. வேதகாலத்து மக்கள் படிப்படியாக கங்கா, யமுனா சமவெளிகளில் குடிபெயர்ந்தனர். சிலர் விந்திய மலையினையும் கடந்து தென்பகுதிக்கு சென்றனர்.

அரசியல் மாற்றங்கள் : புதிய வேத காலத்தில் அரசன் வலிமை வாய்ந்தவனாக விளங்கினான். விதாதா முழுமையாக மறைந்ததால் சபா மற்றும் சமிதிகள் தமது முக்கியத்துவத்தை இழந்துபோயின. அரசன் தனது ஆட்சியின் எல்லையை விரிவுப்படுத்தி கொள்ள தொடங்கினான். அரசாட்சி பரம்பரையாக மாறின. அரசன் தன்னுடைய எல்லையை விரிவாக்க அஸ்வமேதம், இராஜசூயம் முதலான யாகங்களை செய்ய ஆரம்பித்தான்.

சமூக மாற்றங்கள் : பிந்தைய வேத காலத்தில் ஆசிரம முறை ஆரம்பமாயின. பிரம்மசர்யம், கிரகஸ்தம், வனபிரஸ்தம் மற்றும் சன்னியாசி எனும் நான்கு ஆசிரமங்களின் (சதுராஷ்ரமா) அமைப்பு ஆரம்பமாயின. பெண்களின் நிலைகளில் அதிகமான மாற்றம் ஏற்பட்டது. பெண்களின்

நிலைமையில் மிகவும் நலிவடைந்தன. பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டன. அரசாங்க அமைப்புகளில் இருந்து அவர்கள் விலக்கப்பட்டனர். பிராமணம், க்ஷத்திரியம், வைசியம் மற்றும் சூத்திரம் எனும் நான்கு வர்ணங்கள் அமைப்புமுறை சமூகத்தில் தலை தூக்கின. உடன் கட்டை ஏறுதல், குழந்தை திருமணமுறை ஆரம்பமாயின. அரசு முதலான உயர்ந்த வர்க்கங்களில் பலதார திருமணம் வழக்கத்தில் இருந்தன.

பிரம்மச்சரியம்


கிருகஸ்தன்

வனப்ரஸ்தம்


சன்னியாசி

சமய வாழ்க்கை : சமயக் சடங்குகள் சிக்கலானவைகளாகவும், கடினமாகவும் உருமாறின.

மகா காவியங்கள் : இந்தியாின் பெருமைமிகு இரு மகா காவியங்கள் வால்மீகியின் இராமயாணம் மற்றும் வியாசரின் மகாபாரதம் ஆகும். இந்த மகா காவியங்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்திய மக்களின் வாழ்க்கை, இலக்கியம் மற்றும் கலைகளை உருவாக்கியுள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. வேதம் என்றால் ....
2. வேதங்கள் .... மொழியில் உள்ளன.
3. ஆர்ய சட்டத்தின் தலைவர்களை .... என்று அழைத்தனர்.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி :

4. நான்கு வேதங்கள் யாவை?
5. ரிக் வேத காலத்தின் நான்கு வர்ணங்களின் பெயர்களை கூறுக?
6. வேத காலத்தின் இரு சிறந்த மகளிர் அறிஞர்களைக் கூறுக.
7. இந்தியாவின் பழமையான மகா காவியங்கள் யாவை? இவைகளை இயற்றியவர்கள் யார்?

III. கீழ்க்கண்ட வினாக்களுக்கு குழுவினில் கலந்துரையாடி விடையளிக்க:

8. பழைய வேத கால சமூகத்திற்கும் புதிய வேதகால சமூகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

செயல்பாடுகள் :

* குழந்தைகளுக்கான ஓவியங்கள்/ படங்கள் கொண்ட இராமாயணம் மற்றும் மகாபாரதத்தினைப் படிக்கவும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

*****

பாடம் 5	புதிய மதங்களின் தோற்றம் (Rise of New Religions)

K7T6H5

பாடத்தின் அறிமுகம்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர், வேத சிந்தனைக்கு எதிரான பல்வேறு சிந்தனை முறைகள் தோன்றலாயின. கௌதம புத்தர் மற்றும் மகாவீரர் இருவரும் புதிய சிந்தனை முறைகளுக்கு காரணமானவர்கள் ஆவர். அவர்களின் வாழ்க்கை மற்றும் போதனைகளை இப் பின்னணியில் விவரிக்கப்பட்டுள்ளன. இதனுடன் அவர்களின் காலத்தில் சிந்து - கங்கா நதி கரைகளில் பதினாறு மகாஜனப்பதங்கள் (அரசியல்) மற்றும் பல்வேறு குடியரசுகள் (ஜன நாயகம்) செயல் முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

திறன்கள்:

1. கௌதம புத்தர் மற்றும் மகாவீரரின் வாழ்க்கை வரலாற்றை அறிதல்
2. கௌதம புத்தர் மற்றும் மகாவீரரின் போதனைகளைப் புரிந்து கொள்ளுதல்
3. பௌத்த மற்றும் சமண மதங்களின் தத்துவங்கள் எந்தளவிற்கு இன்றைக்கும் பரவி உள்ளன என்பதை புரிந்துகொள்ளுதல்.
4. 2500 ஆண்டுகளுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த குடியாட்சி பரம்பரையை பாராட்டுதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

2600 வருடங்களுக்கு முன்னர் கங்கை நதிக்கரையோரம் சுமார் 06 புதிய மதங்கள் உதயமாயின. அவைகளில் சமண மதமும், புத்த மதமும் முக்கியமானவைகளாகும். புத்த மதத்தினை தோற்றுவித்த கௌதம புத்தர், சமண மதத்தின் முக்கிய தீர்த்தங்கரர் வர்த்தமான மகாவீரர் ஆவர். இவர்கள் இருவரும் கூட குடியாட்சி அரசுகளின் குலத்தைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள் ஆகும்.

புத்த மதம்

கௌதம புத்தர் தோற்றுவித்த மதமே புத்தமதம் ஆகும். இது சுமார் 2500 வருடங்களுக்கு முன்னரே தோன்றியதாகும்.

புத்தரின் வாழ்க்கை : கௌதம புத்தர் நேபாளத்தின் கபிலவஸ்துவிற்கு அருகில், ‘லும்பினி’யில் பிறந்தார். அவரின் இளமைப் பெயர் சித்தார்த். அவரின் தந்தை சுத்தோதனன் சாக்கிய குடியரசின் அரசனாவான். தாய் மகாதேவி. சித்தார்த்தனின் மனைவி யசோதரா. இராகுல் அவரின் புதல்வன் ஆவர்.

சித்தார்த்தனை குழந்தையில் கண்ட ‘அசிதா’ என்ற முனிவர் இக்குழந்தை உலகை ஆளும் அரசனாவான். இல்லாவிடில் உலகின் துயரத்தை போக்கும் சன்னியாசி ஆவான் என்று சித்தார்த்தனின் எதிர்காலத்தை குறித்துக் கூறினான். முனிவரின் வார்த்தைகளைக் கேட்ட சுத்தோதனன் தனது மகன் அரசனாக வேண்டும் என எண்ணி, சித்தார்த்தனுக்கு துக்கம், வைராக்கிய சந்தர்ப்பங்களே வராமல் சுகம், சந்தோஷம் போன்ற சூழ்நிலைகளிலேயே உருவாக்கினான். ஆயினும், சித்தார்த்தனின் மனம் அமைதியற்றே காணப்பட்டது.

புத்த குருவின் இளமை பருவத்தைப் குறித்த ஒரு தகவல்.

ஒருமுறை நகர்வலம் சென்ற சமயத்தில் அவனின் கண்ணிற்கு எதிர்பாராத விதமாக ஒரு வயோதிகன், ஒரு நோயாளி, ஒரு சன்னியாசி மற்றும் சவ ஊர்வலக் காட்சிகள் காணப்பட்டன. இந்த நான்கு நிகழ்வுகளும் அவனுள் வைராக்கியத்தை ஏற்படுத்தி துயரத்திற்கான காரணத்தை கண்டுபிடிக்க காரணமாயின - இவை புத்த குருவின் வரலாற்றில் உள்ள தகவல்கள் ஆகும்.

NOT TO BE REPUBLISHED ©TBS

ஒரு நாள் இரவு சித்தார்த்தன் யாருக்கும் கூறாமல் அரச வாழ்க்கை மற்றும் அரண்மனையையும் துறந்து குதிரையேறி புறப்பட்டார். துயரத்தை போக்குவதற்காக, பல குருக்களைக் கண்டு அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்றார். ஆனாலும், அவருக்கு துயரத்திற்கான காரணம் குறித்த விடை கிடைக்கவில்லை. இறுதியாக பீகாரின் ‘கயா’ என்னுமிடத்தில் அரச மரத்தின் கீழே அமர்ந்து பலநாட்கள் தியானத்தில் இருந்தார். இறுதியில் அங்கு ஞானோதயம் அடைந்து சித்தார்த்தன் ‘புத்தர்’ ஆனார். புத்தர் என்றால் ‘ஞானி’, ‘அறிந்தவர்’ என்று பொருள் ஆகும். இந்த இடம் ‘புத்தகயா’ என்றே புகழ் பெற்றன.

புத்தர் உத்திர பிரதேசத்தின் வாரணாசியின் அருகில் சாரநாத் என்னும் இடத்தில் தனது முதல் போதனையை ஐந்து சீடர்களுக்கு அளித்தார். இந்நிகழ்ச்சியை ‘தர்மசக்கர பிரவர்த்தனம்’ என்று அழைக்கின்றார்கள்.

அங்கிருந்து பீகார் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் 40 ஆண்டுகள் வரை பயணம் மேற்கொண்டு போதனை செய்தார். புத்தரின் புகழ் சிறிது சிறிதாக பல்வேறு இடங்களிலும் பரவியன. ராஜா, மகாராஜாக்கள் அவரை கௌரவித்தார்கள். இறுதியாக, புத்தர் பீகாரின் குஷீநகர் எனும் இடத்தில் தேகதியாகம் செய்தார்.

புத்தரின் போதனைகள் : (தூய்மையான) நல் வாழ்க்கை மற்றும் நல் எண்ணங்களின் வாயிலாக ஞானத்தை வெல்வதே புத்தரின் போதனைகளின் நோக்கமாக இருந்தன. புத்தர் இதனை 'தம்ம' என்று அழைத்தார். உலகம் முகுந்த துயரங்களில் நிறைந்துள்ளன. ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையை வென்று துன்பத்திலிருந்து விடுபட வேண்டுமானால் நல்ல கண்ணோட்டம், நல்ல நோக்கம், இன்சொல், நற்செயல்கள் முதலான எட்டு வழிகளைக் சுட்டிக் காட்டினார். இவைகளை 'அஷ்டாங்க மார்க்கம்' என்று அழைப்பர்.

புத்தர் வாழ்க்கையின் நான்கு நிலைகள் : துறவு, ஞானோதயம், தர்ம சக்கரம், பிரவர்த்தனம், மகாபரிநிர்வாணம் ஆகும். புத்தரின் அடிப்படைப் போதனைகள் 'நான்கு ஆர்ய சத்தியங்கள்' மற்றும் 'அஷ்டாங்க மார்க்கம்' என்பதாகும். நான்கு ஆர்ய சத்தியங்கள் என்னவெனில்-உலகம் துன்பங்களால் நிறைந்துள்ளன. ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையை வென்று துன்பத்தைக் மேற்கொள்ள இயலும், துன்பத்தை அடியோடு ஒழிக்கும் வழியே அஷ்டாங்க மார்க்கம் ஆகும். சித்தார்த்தனை கௌதம புத்தர், தத்தாகத, ஷாக்கியமுனி என்றும் அழைக்கின்றார்கள்.

இவையன்றி தன்னை பின்பற்றுபவர்கள் உயிர்களைத் துன்புறுத்தல் கூடாது. மது அருந்தக்கூடாது, வன்முறை செயல்களை செய்யாதிருத்தல், பொய் கூறாமை முதலானவைகளை உபதேசித்தார். இவ்வாறு புத்தரின் போதனைகள் எளிமையாகவும், மக்கள் பின்பற்ற கூடியதாகவும் இருந்தன. ஏனெனில் அவர் தனது போதனையை மக்களின் மொழியான பாலி மொழியில் போதித்தார். அவரின் போதனைகளை அவரின் சீடர்கள் மூன்று புத்தகங்கள் பிடகுகளில் சேகரித்தனர். அவைகள் : வினய பிடகா, சுத்த பிடகா மற்றும் அபிதம்ம பிடகா என்பனவாகும்.

புத்தரின் சிறந்த நூல்களான இவைகளை 'த்ரிபிடகம்' என்று அழைப்பர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

சித்தார்த்தன் அரண்மனையை துறப்பதற்கு நதி விவாதம் காரணம் என்ற மற்றொரு செய்தியும் உள்ளன. இரு ராஜ்ஜியங்கள் இடையே நதி நீரின் பகிர்வு (பங்கீடு) பற்றிய விவாதம் நிகழ்ந்தன. சித்தார்த்தினைச் சார்ந்தவர்கள் போருக்கு தயாரானது அவருக்கு விருப்பமில்லாததால், அதனை எதிர்த்து அக்கணமே அரண்மனை வாழ்வைத் துறந்தார் எனக் கூறப்படுகின்றன. இது டாக்டர் அம்பேத்கரின் புத்தகத்தகவல் ஆகும்.

கிஸாகௌதமிக்கு புத்தர் அளித்த குறிப்புகள் : புத்தகுருவைப் பற்றிய இக்கதையானது வழக்கத்தில் உள்ளன. கிஸாகௌதமி தனது அன்பான சிறு குழந்தையை இழந்து விட்டாள். அவள் எந்தளவிற்கு துயரத்திற்கு ஆளானால் என்றால் குழந்தையின் இறந்த தேகத்தை எடுத்துக் கொண்டு வீதிவீதியாக அலைந்து திரிந்து தனது குழந்தைக்கு மறுஉயிர் அளிக்கும் படி மன்றாடி வேண்டினாள். இதனை கண்டு மனம் உருகிய ஒருவன், அவளை புத்தனிடம் அனுப்பி வைக்கிறான். புத்தர் கிஸாகௌதமிக்கு இவ்வாறு கூறினான். ''உனது குழந்தைக்கு மறுஉயிர் அளிப்பேன். ஆனால் மரணம் என்பதே காணாத வீட்டிலிருந்து கடுகு எனக்கு வேண்டும்'' என்றான்.

புத்தனின் சொற்களை கேட்டு மகிழ்வுடன் வேக வேகமாக நடந்து கிஸாகௌதமி மரணத்தை காணாத வீட்டினை தேடி, ஊரெல்லாம் சுற்றித் திரிந்தாள். எல்லா வீடுகளிலும் ஒருவர் இல்லை மற்றொருவர் - அப்பா, அம்மா, தங்கை, தம்பி, கணவன், மனைவி, குழந்தைகள், மாமா, அத்தை, பாட்டி, தாத்தா மரணமடைந்திருத்தனர்.இதைக் கண்ட கிஸாகௌதமிக்கு மரணம், ஒவ்வொருவருக்கும் நிச்சயம் என்ற உண்மையையும், புத்தரின் போதனையையும் உணர்ந்தாள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

புத்தர், வேதங்களை உருவாக்கவில்லை. அவரது போதனைகள் அவரது சீடர்களால் நினைவில் கொண்டு தலைமுறை, தலைமுறையாக போதனைகள் மூலம் பாதுகாக்கப்படுகின்றன. 'சுத்த பிடகா' புத்தரின் போதனைகளை கொண்ட பண்டைய நூலாகும். இது பாலி மொழியில் உள்ளன.

சமண மதம்

மகாவீரர்

மகாவீரரின் வாழ்க்கை : 24வது தீர்த்தங்கராத மகாவீரர் சமண மதத்தை தோற்றுவித்தார். இவர் சுமார் 2500 வருடங்களுக்கு முன்பு வைசாலி அருகில் உள்ள குந்த கிராமத்தில் பிறந்தார். அவரின் இயற்பெயர் வர்த்தமானர் ஆகும். தந்தை சித்தார்த்தன், குலத் தலைவன் ஆவான். தாய் திரிஷாலாதேவி ஆகும். வர்த்தமானன் ஞானோதயத்தைப் பெறுவதற்காக வீட்டைத் துறந்தான். அனைத்தையும் துறந்து சில காலம் திகம்பர முனிவராக சுற்றித் திரிந்தார். பிறகு பன்னிரெண்டு ஆண்டு காலம் தவம் புரிந்து இறுதியாக ஞானோதயம் பெற்று 'ஜின' என்று அழைக்கப்பட்டார். 'ஜின' என்றால் 'மோகத்தை', ஆசையை வென்றவன். என்று பொருள் ஆகும். இவரை பின்பற்றியவர்களே சமணர்கள் ஆவர். மகாவீரர் அனைத்து (வர்கத்தினருக்கும்) உபதேசம் செய்தார். பீகாரின் 'பாவாபுரி' என்னுமிடத்தில் அவர் தேகதியாகம் செய்தார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

மகாவீரரின் போதனைகள் : வர்த்தமான மகாவீரர் (இம்சை) துன்புறுத்துதல் செய்யாதிருத்தல், களவு செய்யாமை, செல்வம், பதுக்கி வைக்காது இருத்தல், பொய் பேசாதிருத்தல் முதலானவைகளை தன்னை பின்பற்றினவர்களுக்கு போதித்தார். அவர் பிரம்மசரியத்தைப் பின்பற்றவும் அழைப்பு விடுத்தார். அகிம்சைக்கு உலகின் பிற எந்த மதமும் அளிக்காத மகத்துவத்தை சமண மதம் அளித்துள்ளன. மகாவீரரின் போதனை 23 வது தீர்த்தங்கரர் ஆன பார்ஷ்வநாதனின் போதனையின் தொடர்ச்சியாக உள்ளன.

பிறகு சமண மதத்தில் ஸ்வேதாம்பரர் மற்றும் திகம்பரர் எனும் இரண்டு பிரிவுகள் தோன்றின. வெள்ளை ஆடை அணிந்த பார்ஷ்வநாதனை பின்பற்றுபவர்கள் ஸ்வேதாம்பரர்கள் ஆவர். ஆடையே அணியாத மகாவீரரை பின்பற்றுபவர்கள் திகம்பரர்கள் என்றழைக்கப்பட்டனர். கருநாடகத்தின் சரவணபெளகொளா சமணர்களின் புகழ்பெற்ற சமண மதத்தின் மையமாகும்.

சமண சமயத்தில் ஐந்து நீதித் தத்துவங்கள் உள்ளன. அவை, அகிம்சை, உண்மை (சத்தியம்), களவு செய்யாதிருத்தல். (திருடாமை), அபரிக்ரஹ (தேவைக்கும் அதிகமான சொத்துக்களை சேர்த்து வைக்காமல் இருப்பது) மற்றும் பிரம்மச்சரியம் (புலன்களை தன்வசம் படுத்தி கொள்ளுதல்).

மகாஜனப்பதங்கள் மற்றும் குடியாட்சிகள்

மகாஜனப்பதங்கள் : நாம் தற்போது 2500 ஆண்டுகளுக்கு முன் கடந்து செல்லலாம். அது புத்தரின் காலம் ஆகும். அக்காலத்தில் சிந்து-கங்கா நதிக்கரையில், பதினாறு சின்னஞ்சிறு இராஜ்ஜியங்கள் இருந்தன. புத்தரின் இலக்கியத்தில் இவைகளை 'மகாஜனப்பதங்கள்' என்று அழைக்கின்றனர். அவைகளில் மகதம், கோசலம் மற்றும் வத்சா எனும் மகாஜனப்பதம் குறிப்பிடத்தக்கவைகளாகும். இங்கு அரசர்களின் ஆட்சி நடைப்பெற்றன.

குடியாட்சிகள் : அக்காலத்தில் பல்வேறு இராஜ்ஜியங்களில் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி நடைமுறையில் இருந்தன. அவைகளை குடியாட்சிகள் என்று அழைத்தனர்.

குடியாட்சிகளில் முக்கியமானது வஜ்ஜி (வ்ருஜி) குடியாட்சியாகும். அவைகள் பல்வேறு குடியாட்சிகளை உள்ளடக்கிய ஒருங்கமைப்பாக இருந்தன. பீகாரின் வைசாலி பட்டணம் அதன் தலைநகரம் ஆகும். வஜ்ஜியின் ஒருங்கமைப்பில் பெரியவர் மற்றும் சிறியவர் உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு 'சபை' ஆட்சி செய்தன. சபா உறுப்பினர்களை 'அரசன்' என்று அழைத்தனர். சபையில் ஒருங்கமைப்புக்கு தொடர்பானஅனைத்து முக்கிய விவரங்கள் (சர்ச்சை) விவாதத்திற்கு கொண்டுவரப்பட்டன.

புதிய சொற்கள் :

வைராக்கியம் : உலகின் அனைத்து வகையான ஆசைகளையும் துறத்தல்

திகம்பரர் : திசைகளையே ஆடையாக அணிந்திருப்பவர்

நிர்வாணம் : பிறப்பு (ஜனன - மரணம்) இறப்புகளின் சக்கரத்திலிருந்து விடுபடுதல்.

அறிந்து கொள்ளுங்கள்

1. புத்த மதத்தில் ஹீனயானம் மற்றும் மகாயானம் எனும் இரு பிரிவுகள் உள்ளன.

பயிற்சிகள் :

I. கோடிட்ட இடங்களை சரியான சொற்களினால் நிரப்புக.

1. கௌதம புத்தர் .... என்னுமிடத்தில் பிறந்தார்.
2. புத்தர் தனது போதனைகளை .... மொழியில் போதித்தார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

3. ‘ஜின’ என்றால் .... ஐ வென்றவர் என்று பொருள் ஆகும்.

4. சமண மதத்தின் 23வது தீர்த்தங்கரர் .... ஆவார்.

5. சமண மதத்தில் வெள்ளை ஆடை தரிப்பவர் .... பிரிவினர் ஆவர்.

II கீழ்க்கண்ட வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி:

6. கௌதம புத்தனின் தந்தை, தாய் யார்?

7. கௌதம புத்தன் தனது முதல்போதனையை (உபதேசத்தை) எங்கு அளித்தார்?

8. ‘தர்மசக்கர பிரவர்த்தனம்’ என்றால் என்ன?

9. மகாவீரர் என்னவென்று போதித்தார்?

10. பழம்பெரும் இந்தியாவில் குறிப்பிடதக்க குடியாட்சிகளின் பெயர்களை கூறுக?

III. கீழ்க்கண்ட வினாவிற்கு குழுவினில் கலந்துரையாடி விடையளிக்க:

11. புத்தனின் போதனைகள் யாவை?

IV. கீழ்க்கண்ட ‘அ’ அட்டவணையில் மற்றும் ‘ஆ’ அட்டவணையில் உள்ள பொருள்களை பொருத்தி எழுதுக.

அ	ஆ
1. கௌதம புத்தர்	அ) குடியாட்சி
2. மகாவீரர்	ஆ) புத்தரின் புனித நூல்கள்
3. வஜ்ஜி	இ) சமண மதத்தின் மையம்
4. சரவணபௌகொளா	ஈ) புத்த மதத்தைத் தோற்றுவித்தவர்
5. திரிபீடகம்	உ) 24ஆம் தீர்த்தங்கரர்

செயல்பாடுகள் :

1. உங்கள் சுற்றுப்புறங்களில் உள்ள சமண மடங்கள் பற்றி அறிந்து கொள்ளுங்கள்

2. சமண மடங்களின் படங்களுடன் தகவல்களை சேகரிக்கவும்.

*****

@KTBS NOT TO BE REPUBLISHED

பாடம்
6

தென் இந்தியாவின் பண்டைய அரச வம்சங்கள்

D4D7U8

பாட அறிமுகம்

இப்பாடத்தில் சங்கம் யுகத்தின் தனித்துவமான இலக்கிய பங்களிப்பைப் பற்றி விளக்கப்பட்டுள்ளன. பிறகு தென் இந்தியாவின் பண்டைய அரசு வம்சங்களான சாதவாகனர்கள், கதம்பர், கங்கர், பாதாமி சாளுக்கியர், காஞ்சி பல்லவர், இராட்டிரகூடர் மற்றும் கல்யாண சாளுக்கியரின் கலாச்சார சாதனைகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஹொய்சல மற்றும் சோழ அரசு வம்ச ங்களின் கௌரவமான பேரரசர்கள் மற்றும் அவர்களின் சிற்பக்கலை மற்றும் இலக்கிய துறைகளுக்கு வழங்கிய சிறப்பு பங்களிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதனுடன் சோழர்களின் கிராம நிர்வாக அமைப்பை பற்றி விவரிக்கப்பட்டுள்ளன.

திறன்கள்

1. சங்க இலக்கியம் மற்றும் மகாகவி திருவள்ளவர் பற்றி அறிந்து கொள்ளுதல்.
2. சாதவாகனர்கள், கதம்பர் மற்றும் கங்கர்களின் கட்டிடக்கலை, சிற்பக்கலை மற்றும் இலக்கிய துறைகளுக்கு கொடுத்த பங்களிப்புகளை பாராட்டுதல்.
3. சாதவாகனர் காலத்தின் வியாபாரம் மற்றும் நகர வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
4. கதம்பரின் காலத்து கலாச்சாரம் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
5. பாதாமி சாளுக்கியரின் கட்டக்கலை பற்றி அறிந்துக்கொள்ளுதல்.
6. காஞ்சி பல்லவர்கள் சிற்பக்கலைகளுக்கு அளித்த பங்களிப்பை அறிதல்.
7. கங்கரின் கட்டிடக்கலை பற்றி அறிதல்.
8. இராஷ்டிரக்கூடர்கள் கன்னடத்திற்கு அளித்த பங்களிப்பை அறிதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

9. கல்யாண சாளுக்கியர் காலத்தின் இலக்கியம், கட்டிடக்கலை பற்றி அறிதல்.

10. பண்டைய கோட்டை, கொத்தளங்கள் மற்றும் நினைவு சின்னங்கள் நமது கலாச்சார பிரதிபலிப்புகள் என்ற உணர்வுடன் அவைகளை கருதுதல் பாதுகாப்பின் சிறப்பினை பாதுகாக்க முற்படுதல்.

11. ஹொய்சலர் மற்றும் சோழர்களின் சிற்பக்கலை மற்றும் இலக்கியத்திற்கு அளித்த பங்களிப்புகளை அறிந்து, அவைகளின் முக்கியத்துவத்தை பாராட்டுதல்.

12. ஹொய்சல விஷ்ணுவர்தன் மற்றும் மூன்றாவது பல்லவன் மற்றும் இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் இவர்களின் சாதனைகளை புரிந்து கொள்ளுதல் வரைபடத்தில் ஹொய்சல மற்றும் சோழர் காலத்து வரலாற்று இடங்களை குறிப்பிடுதல்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

சங்க இலக்கியம், சங்க யுகம்: கண்ணகி, சிலப்பதிகாரம் என்ற பண்டைய தமிழ் பெருங்காவியத்தின் கதாநாயகி ஆவார். இப்பெருங்காவியம் இந்தியாவின் மிக முக்கிய இலக்கிய காப்பியங்களில் ஒன்றாகும்.

மகாகவி திருவள்ளவுர்

'மணிமேகலை' தமிழர்களின் மற்றொரு பெருங்காவியம் ஆகும் இதன் கதாநாயகி மணி மேகலை ஆவார். அவள் கோவலன் மற்றும் அவனின் பணிப்பெண் மாதவியின் மகள் ஆகும். அவள் தன் பிற்க்காலத்தில் புத்த துறவியாகி தேசத்தின் பல பகுதிகளுக்கு சுற்றிதிரிந்து, ஏழைகளின் பசி மற்றும் நோய்களை போக்கினாள்.

சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை இவ்விரண்டும் பெருங்காவியங்கள். அது மட்டுமின்றி, தமிழரின் பிரபலமான நீதி நூல் ஒன்றுண்டு அதுவே 'திருக்குறள்' அதை இயற்றியவர் திருவள்ளுவர். அவர் சங்கம் யுகத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க கவிஞர் ஆவார். 'திரு' என்றால் 'ஸ்ரீ' 'குறள்' என்றால் சிறியது ஆகும். குறள் என்பது ஒன்றரை வரி பாடல் ஆனால் விரிவான பொருள் அடங்கியதாகும்.

''கடுகை குடைத்து அதற்குள் கடலை அடக்கியது போல்'', என்று குறளை குறித்து கூறப்படுகிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் ''திருக்குறள்'' இவைகள் மட்டுமன்றி பண்டைய காலத்தை சேர்ந்த இன்னும் சில இலக்கிய காவியங்கள் உண்டு. இவைகளை அனைக்கும் சேர்த்து 'சங்க இலக்கியம்' என்பர். மதுரையின் பாண்டிய மன்னர்கள் தங்கள் தலைநகர் மதுரையில் தமிழ் சங்கம் (தமிழ் இலக்கிய சங்கம்) நிறுவி, கவிஞர்களை ஆதரித்தனர். கவிஞர்கள் தங்கள் நூல்களை பரிசலிக்க சங்கத்தில் ஒப்புவிக்கும் வழக்கமிருந்தன.

சங்க இலக்கிய கட்டமைப்பு சுமார் ஐந்து நூற்றாண்டுகளாக தொடர்ந்தது. இக்கால கட்டத்தை 'சங்க யுகம்' என்பர். சங்க இலக்கிய நூல்களில் அன்றைய அரச வம்சங்களான சோழர், சேரர் மற்றும் பாண்டிய மன்னர்களின் ஆட்சி மற்றும் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளுக்கு விளக்கம் அளிக்கின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

தென் இந்தியாவின் பண்டைய அரச வம்சங்கள்

எண்	அரச வம்சம்	தலைநகர்	முக்கிய மன்னர்
1.	சாதவாகனர்	மகாராஷ்ரத்தின் பைட்டானா	கௌதமிபுத்திர சதகர்னி
2.	கதம்பர்	பனவாசி	மயூர வர்மா
3.	கங்கர்	தலகாடு	துர்விநீத்தா
4.	பாதாமி சாளுக்கியர்	பாதாமி	ஹிம்மடி புலிகேசி
5.	பல்லவர்	தமிழ்நாட்டின் காஞ்சி	நரசிம்மவர்மா
6.	இராஷ்ட்ரகூடர்	மான்யகேடா	அமோகவர்ஷா நுருபதுங்கா
7.	கல்யாண சாளுக்கியர்	பசவகல்யாணா	6 ஆம் விக்ரமாத்தியன்
8.	ஹொய்சலர்	துவாரசமுத்ரா	விஷ்ணுவர்தனா
9.	சோழர்	தமிழ்நாட்டின் தஞ்சாவூர்	இராஜ ராஜ சோழன்

சாதவாகனர்கள்

பண்டைய காலத்தில் சாதவாகனர்கள் (ஷாதவாகனர்) என்ற அரசவம்சம், தென் இந்தியாவின் சில பகுதிகளை ஆட்சி செய்தனர். மகாராஷ்டிரத்தின் பிரதிஷ்டானபுரா (இப்போது பைடாணா) அதன் தலை நகரம் ஆகும். (வரைபடத்தில் பார்க்கவும்).

கௌதமிபுத்திர சாதகர்னி : இவர் ஷகா, யவனா, பஹலவ என்கிற வெளிநாட்டு மன்னர்களை தோற்கடித்தான். ஷகர சஹபானின் நாணயங்களில் தனது பெயரை மறுபதிப்பு செய்தான். கொங்கண, சௌராஷ்டிரா, மால்வா, பிரார் போன்ற பகுதிகளில் இவனது இராஜ்ஜியம் பரவியது. அவர் த்ரி சமுத்திரதோயா பீதவாஹனா (மூன்று

கடல்களில் நீர் குடித்த குதிரைகளை வாகனமாக கொண்டவர்) என்ற பட்டம் பெற்றவர்.

மதம் மற்றும் சமுதாயம்: சாதவாகனர்கள் வேத மதத்தைப் பின்பற்றியவர்கள் ஆவார். அஸ்வமேதம் முதலான யாகங்களை செய்தனர். அவரது பேரரசில் இருந்த வெளிநாட்டவர்கள் இந்து மதம் அல்லது புத்த மதத்தை சுயமாகவே ஏற்றுக்கொண்டு, அதன் தெய்வங்களின் பெயர்களை சூட்டிக் கொண்டனர். சிவன் மற்றும் விஷ்ணுவை வழிபட்டனர். சமுதாயத்தில் ஒற்றுமையாக வாழ்ந்தனர். பெண்களுக்கே உரிய கௌரவம் அளிக்கப்பட்டன அவர்கள் மிகுந்த ஆஸ்தி உடையவர்களாயிருந்து, சமய மையங்களுக்கு நன்கொடைகளை வழங்கினர்.

இலக்கியம் மற்றும் கல்வி : சாதவாகனர்களின் ஆட்சி மொழியாக பிராகிருதம் இருந்தது. அவர்களின் கல்வெட்டுகளும் பிராகிருத மொழியிலும், பிரம்மி எழுத்துக்களிலும் உள்ளன. ஹாலா மன்னன் 'கதாசப்தசதி' என்ற ஒரு படைப்பை பிராகிருத மொழியிலேயே இயற்றினான். குணாட்யன் 'வட்டகத்தா' மற்றும் சர்வவர்மன் 'காத்தாந்திர சர்வவர்மன்' என்ற நூல்களை எழுதினார். கல்விக்காக அக்ரஹாரங்கள் அமைக்கப்பட்டன. அவைகளில் ஷிமோகா மாவட்டத்தில் உள்ள தாலகுந்தா (ஸ்தானகுந்தூர்) ஒரு முக்கியமான கல்வி மையாக இருந்தன.

கட்டிடக்கலை பங்களிப்பு : சாதவாகனர்கள் கட்டிடக்கலைக்கு அபாரமான பங்களிப்பை அளித்தனர். அவர்கள் காலத்து, மூன்று விதமான புத்த கட்டமைப்புகள் சைத்யா, விகாரம் மற்றும் கல்தூண்கள் ஆகும். சைத்யா என்றால் பௌத்தரின் பிரார்த்தனைக் கூடம், பௌத்த பிட்சுக்கள் வசிக்கும் இடமே விகாரம் ஆகும்.

சாதவாகனர்கள் காலத்தில் மிகப் பெரிய பாறைகளை குடைந்து சைத்யா மற்றும் விகாரங்களை நிர்மாணித்தனர். மகாராஷ்டிராவின் கார்லெ என்னும் இடத்தில் இருக்கும் சைத்யா பெரியதாகவும், அழகாகவும் உள்ளன. கன்னேரி என்ற இடத்தில் உள்ள சைத்யா புகழ் பெற்றவை ஆகும். சைத்யங்களின் பக்கத்தில் பாறைகளைக் குடைந்து செய்த விகாரங்கள் உள்ளன. ஆந்திர பிரதேசத்தின் அமராவதியில் உள்ள அம்ருத சிலை கல்தூண் கலைநயத்துடன் உள்ளன. கர்நாடகாவில் சாதவாகனர்களின் கால கட்டமைப்புகளின் இடிபாடுகள், கலபுரகி மாவட்டம் சன்னிதி மற்றும் வட கன்னட மாவட்டம் பனவாசியில் காணலாம். சாதவாகனர்களின் ஆயிரகணக்கான நாணயங்கள் கிடைத்துள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED



கார்லெயின் சைத்யா (மகாராஷ்டிரா)



அமராவதியின் மாதிரி ஸ்தூபி

மகாராஷ்டிரத்தின் பைடானா, கார்லெ, கன்னேரி, ஜுன்னார் மற்றும் நாசிக், ஆந்திர பிரதேசத்தின் தான்யகடக (தரணிகோட்டே) மற்றும் வட கன்னட மாவட்டத்தின வைஜயந்தி (பனவாசி) முதலியவை நிறுவனங்களாக விளங்கின.

©KTBS NOT TO BE REPUBLISHED

வணிகம் மற்றும் நகரங்கள்: சாதவாகனர்களின் ஆட்சிக்காலம், பொருளாதார வளர்ச்சி காலமாகும். இதன் முக்கிய காரணம், தீவிரமாக நடைபெற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகர் செயல்முறைகள் ஆகும். பேரரசின் சில நகரங்கள் வணிக மையங்களாக விளங்கின நகரங்களை ''நிகமகளு'' என்று அழைத்தனர்.

நகரங்களில் 'ஷ்ரேணி' என்னும் சங்கங்கள் இருந்தன. 'ஷ்ரேணிகள்' என்றால் வியாபாரிகள் மற்றும் பலத்தரப்பட்ட தொழிலாளர்கள், தமது பாதுகாப்பிற்காக அமைத்துக் கொண்ட சங்கங்கள் ஆகும். உதாரணமாக 'தானிக ஷ்ரேணி' என்பது தானிய வியாபாரிகளின் சங்கமாக இருந்தன. இதே போன்று சுரங்கத் தொழிலாளிகள், கொல்லர்கள், குயவர், பிற கைவினைஞர்கள் தங்கள் ஷ்ரேணிகளை அமைத்துக் கொண்டனர். ஷ்ரேணிக்கு ஒரு தலைவன் இருந்தான். அவனை ஸ்ரேஷ்டி அல்லது செட்டி என்று அழைத்தனர்.

சாதவாகனர்களின் நாணயங்கள்

ஷ்ரேணிகள் நவீன வங்கியைப் போல் இயங்கி பணம் பரிமாற்றம் செய்தன. அவை தொழில் மற்றும் வணிக

செயல்பாடுகளுக்கும் சிறப்பு ஆதரவு அளித்தன. கார்லெயின் பிரபலமான சைத்யாவை கட்டியவன் அவன் ஒரு பிரபுவாக இருந்தான்.

பேரரசின், கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைகளில் பல துறைமுகங்கள் இருந்தன. மேற்கு கரையில் பருகச்சா (தற்போதைய போர்ச்), மும்பை அருகில் சோபாரா மற்றும் கல்யாணா முக்கியமான துறைமுகங்கள் ஆகும். கிழக்கு கரையிலும் பல துறைமுகங்கள் இருந்தன.

சாதவாகனர்கள் காலத்தில் ஐரோப்பாவின் ரோம பேரரசோடு இந்தியாவின் வணிக நட்பு சிறப்பாக இருந்தன. வர்த்தகத்தில் இந்தியாவின் ஏற்றுமதி அதிகமாக இருந்ததால், அங்கிருந்து பணத்திற்கு பதிலாக தங்கம் அதிகளவில் இங்கு வந்து சேர்ந்து கொண்டிருந்தன. அது மட்டுமின்றி கிழக்குக் கரை துறைமுகங்கள் மூலம் வெளிநாட்டு வர்த்தகம் நடந்து கொண்டிருந்தன. வெளிநாட்டு வர்த்தகத்தினால் சாதவாகனர்கள் பேரரசு பெரும் பொருளாதார வளர்ச்சியைக் கண்டன.

பனவாசியின் கதம்பர்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED

கதம்ப வம்சம், கன்னடத்தின் முதல் அரச வம்சமாகும். சாதவாகனர்களுக்கு பிறகு வட மேற்கு கருநாடகத்தில் இவர்கள் வளம் பெற்றனர். கதம்ப வம்சத்தை நிறுவியவன் மயூரஷர்மா. அவன் வீட்டருகில் கதம்ப மரம் இருந்த காரணத்தால் அவனின் குலம் 'கதம்பா' என்று பெயர் பெற்றது. கதம்பரின் தலைநகரம் தென் கன்னட மாவட்டத்தின் பனவாசி ஆகும் இவர்களின் சின்னம் சிங்கம் ஆகும்.

மயூர ஷர்மா

பிராமணரான மயூரஷர்மன் தனது படிப்பிற்காக காஞ்சிக்கு சென்றபோது, பல்லவ குதிரைப்படை அதிகாரியால் அவமதிக்கப்பட்டார். அவமானத்தை தாங்கமுடியாமல் பிராமண குலத்தை விட்டு க்ஷத்ரியனாக மாறிட முற்பட்டான். மலைவாழ் மக்களை ஒருங்கிணைத்துப் பல்லவர்களைத் தாக்கினான். இறுதியில் பல்லவ மன்னன் அவனின் அரசாட்சியை ஏற்றுக்கொண்டு, கர்நாடகாவின் பல பகுதிகளை மயூரஷர்மனிடம் ஒப்படைத்தான். சித்ரதுர்கா அருகே சந்திரவல்லி அருகே உள்ள ஏரியை மயூரஷர்மன் சீரமைத்தான்.



Sketch map not to scale

NOT TO BE REPUBLISHED @KTBS

கதம்பர்கள் காலத்தில், பிரக்ருதம், சமஸ்கிருதம் மற்றும் கன்னட மொழிகள் வழக்கத்தில் இருந்தன. ஆரம்பத்தில் பிரக்ருதம், பின்னர் சமஸ்கிருதம் அதிகளவில் அங்கீகாரம் பெற்றன. சமஸ்கிருதம் அரசவை மொழியாக இருந்தன. கல்வியிலும் அவை பயன்பாட்டில் இருந்தன. பின்னர் கன்னட மொழிக்கு அதிக அங்கீகாரம் பெற்றன.

கதம்பரின் சின்னம் - சிங்கம்

- ஹாசன் மாவட்டத்தில் ஹல்மிடி கிராமத்தில், கதம்பர்களின் காலத்து கல்வெட்டு ஒன்று கன்னட மொழி எழுத்து வடிவில் உள்ளன. இது கன்னட கல்வெட்டுகளில் மிகவும் பழமைவாய்ந்தவை ஆகும்.
- சிமோகா மாவட்டத்தின் தாளகுந்தா என்ற இடத்தில், கதம்பரின் காலத்து சமஸ்கிருத கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளன. இதை குப்ஜா என்ற கவிஞர் உருவாக்கினார். கர்நாடக சமஸ்கிருத கவிஞர்களில், இவர் மிகவும் பழமை வாய்ந்தவர். தாளகுந்தா கல்வெட்டு கர்நாடகத்தில் கிடைத்துள்ள முதல் சமஸ்கிருத கல்வெட்டாகும்.



ஹல்மிடி சாசனம்

கதம்பர்கள், கர்நாடகத்தில் கட்டிடக்கலைக்கும் சிற்பக்கலைக்கும் சிறப்பு பங்களிப்பு அளித்தனர். அவர்கள் பனவாசியில் பல கோவில்களை கட்டினர். மதுகேஷ்வர் இங்குள்ள முக்கியமான கோவில் ஆகும். மதுகேஷ்வர், கதம்பர் மன்னர்கள் வழிபட்ட தெய்வம் ஆகும். பனவாசியில். மனதை கவரக்கூடிய பரசுராமனின் உருவச்சிலை உள்ளது.

மதுகேஷ்வர் கோவில், பனவாசி

NOT TO BE REPUBLISHED @KTBS

அரச சின்னம் - யானை

தலகாடின் கங்கர்கள்

வடமேற்கு கர்நாடகத்தில் கதம்பர்கள் ஆட்சி புரிந்த போது, தெற்கு கர்நாடகத்தில் கங்கர்கள் செழித்து வந்தனர். விவசாய, சமூகப் பின்னனையைக் கொண்ட கங்கர்கள் கர்நாடகாவில் நீண்ட காலமாக அரச வம்சமாக இருந்தனர். இவர்கள் சுமார் 650 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். கோலார் (குவலாலம்பூர்) மற்றும் தலகாடு (தலவன்பூர்) அவர்களின் தலைநகரங்கள் ஆகும். இந்த வம்சத்தை நிறுவியவர் கொங்கன் வர்மா ஆவார். அவரின் சின்னம் யானை ஆகும். கங்கர்களில் புகழ்பெற்ற மன்னர் துர்வினதன் ஆவார்.

துர்வினீதன்



கொம்மடேஷ்வரர் சிலை தியாகத்தின் சின்னம்.

சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆண்ட துர்வினீதன், வீரமும், பண்டிதனும் ஆவார். இவரது தாயார் ஜேஷ்டாதேவி புன்னாட்டா அரச வம்சத்தை சார்ந்தவர். அக்குடும்பத்தில் ஆண் வாரிசு இல்லாததால் துர்வினீதன் பன்னட்டா மாநிலத்தின் வாரிசு ஆனான். அண்டை எதிரிகளை பல போர்களில் தோற்கடித்து, கங்கை இராஜ்ஜியத்தை விரிவுப்படுத்தினார். பாசன வசதிற்க்காக பல கடல் போன்ற ஏரிகளை கட்டுவித்தான்.

சமஸ்கிருதம் மற்றும் கன்டை மொழிகளில் புலமை பெற்ற துர்வினீதன், சமஸ்கிருத கவி பாரவியின் கிராதர்ஜீனிய நூலின், 15 ஆம் காண்டத்திற்கு வர்ணனை (விமர்சனம்) எழுதினான். குனாட்யனின் ‘வட்டகத்தா’ வை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தார். மேலும் சிறந்த கன்னட உரைநடை எழுத்தாளர்களில் துர்வினீதன் குறிப்பிடத்தக்கவன் எனக் ‘கவிராஜ மார்கா’ வில் ஸ்ரீவிஜயா குறிப்பிட்டடுன்ளான். ‘கவிராஜா மார்கா’ கன்னடத்தில் கிடைத்த முதன்மை நூலாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

ஸ்ரீபுருஷா, ராச்சமல்லா, துர்வனீதனுக்கு பின்னர் ஆட்சி செய்தனர். உலகபுகழ்பெற்ற 17.6 மீ. (58 ஆடி) கொம்மடேஷ்வரர் சிலை, ராச்சமல்லாவின் அமைச்சர் சாவுண்டராயாவால் விந்தியகிரி மலை உச்சியில் நிறுவப்பட்டது. இச்சிலை ஹாசன் மாவட்டத்தில் உள்ள சரவணபெலகோளாவில் உள்ளது.

இலக்கியம் : கங்க அரசர்களில் சிலர் அறிஞர்களாகவும் திகழ்ந்தனர். துர்வினீதன், சமஸ்கிருதம் மற்றும் கன்னடத்தில் பிரபலமான அறிஞனாவான். ஸ்ரீபுருஷன் 'கஜஷாஸ்திரா' என்ற நூலை எழுதினான். கங்கரின் அமைச்சர் சாவுண்டராயன் 'சாவுண்டராய புராணம்' என்ற நூலை கன்னடத்தில் எழுதினார்.

கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலை : கட்டிடக்கலை மற்றும் சிற்பக்கலைக்கு கங்கர்களின் பங்களிப்பு மகத்தானது. மன்னேயின் (நெலமங்கலா. தாலுக்கா.) கப்லேஷ்வர் தலகாட்டின் பாதாலேஷ்வர், கோலாரின் கோலாரம்மனின் கோயில், சரவணபெலகொளாவின் சமண பசதிகள் கம்பதா கிராமத்தின் (நாகமங்கலா தாலூக்கா) பஞ்சகூட்டா பசதி ஆகியவை, கங்கரின் காலத்து முக்கிய கட்டிடக்கலைகளாகும். சரவணபெலகோளாவில் உள்ள 58 அடி உயரமுள்ள கொம்மடேஸ்வரர் சிலை சிற்பகலைக்கு அவர் அளித்த குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பாதாமி சாளுக்கியர்

பாதாமி சாளுக்கியர் கருநாடகத்தில் சுமார் இரண்டு நூற்றாண்டுகள் சிறப்புடன் ஆட்சி புரிந்தனர் பாகல்கோட்டை மாவட்டம் பாதாமி (வாதாபி) சாளுக்கியர்களின் தலைநகரம் ஆகும். 'வராஹம்' சாளுக்கியர்களின் சின்னம் ஆகும்.

பாதாமி சாளுக்கியரின் சின்னம் - வராஹ

இம்மடி புலிகேசி : இம்மடி புலிகேசி சாளுக்கிய குலத்தின் முக்கியமான மன்னர் ஆவார். பராக்கிரமசாலியான இவன் இராஜ்ஜியத்தை விரிவாக்க பல போர்ப்பயணங்களை மேற்கொண்டான்.

கதம்பர்கள் மற்றும் கங்கர்கள் புலிகேசியிடம் தாமாகவே வந்து சரணடைந்தனர். வட இந்தியாவின் பேரரசன் ஹர்ஷவர்தனனை புலிகேசி, நர்மதா நதிக் கரையோரம் நடந்த கடும்போரில் அவனை

தோற்கடித்தது, அவனின் அபார சாதனையாகும். இதற்கிடையில் கிழக்கு பகுதிகளான கோசலா மற்றும் கலிங்க நாட்டு மன்னர்கள் போரிடாமலேயே புலிகேசியிடம் சரணடைந்தனர். தென் இந்தியாவில் புலிகேசி காஞ்சியின் பல்லவரை தோற்கடித்தான். அங்கிருந்து காவிரி நதியைத் கடந்து சென்று சோழர், கேரளம் மற்றும் பாண்டியரை தன் வசப்படுத்திக் கொண்டான். இவ்வாறு நான்கு திசைகளிலும் வெற்றி கண்ட புலிகேசி வாதாபிக்கு திரும்பினான். அவனுடைய பேரரசு மேற்கு கடலிலிருந்து கிழக்கு கடல் வரை பரவி கிடந்தன.



NOT TO BE REPUBLISHED ©KTBS
Sketch map not to scale

புலிகேசியின் புகழ் இந்தியாவின் புறம்பேயும் பரவி இருந்தன. அவன் பார்சி தேசத்தின் மன்னரான குஸ்ருவிடம், தூதுக்குழுவை ஒன்றை அனுப்பி, விலைமதிப்பற்ற பொருட்களையும், ஒரு

வலிமைமிக்க யானையையும் பரிசாக அளித்தான். குஸ்ருவும் ஒரு தோழர் குழுவை’ புலிகேசியின் அரசவைக்கு அனுப்பிவைத்தான். ‘அஜந்தா குகை ஒன்றில் குஸ்ருவும் அவனின் அரசியும் புலிகேசியை வரவேற்கும் வண்ண ஓவியம் ஒன்று உள்ளன.

சாளுக்கியரின் கட்டிடக்கலை: பாதாமி சாளுக்கியரின் முக்கியமான கட்டிடக்கலை பாதாமி, ஐஹொளெ, பட்டதகல், மஹாகூட்டா மற்றும் நாகராளா என்ற இடங்களில் உள்ளன, ஐஹொளெ மற்றும் பாதாமியில் சாளுக்கியர் காலத்து குகை கோயில்கள் உள்ளன.

பாதாமியின் குகைகோயில்

நடராஜ், பாதாமியின் கோவில்

ஐஹொளெ கோவிலில் சூரியன் (லாட்கான்), மேகுதி, கார்த்திகேயா (உச்சிமல்லி) மற்றும் துர்கா போன்றவை குறிப்பிடத்தக்கவைகள். ஐஹொளெயின் கோயில்களை ‘கோயில்களின் கட்டிடக்கலை தொட்டில்’ என்று அழைக்கின்றனர். பாதாமி குகை கோயில்களில் உள்ள நடராஜர் மற்றும் விஷ்ணுவின் புடைப்புச் சிற்பம் அற்புதமாக உள்ளன.

பட்டதகல்லின் கோயில்களில் விருபாக்ஷர் ஆலயம் அழகிய மற்றும் பெரிய கோயிலாகும். பட்டதகல் ஐக்கிய நாடு சபையின் உலக பாரம்பரிய பட்டியலில் உள்ள தளமாகும்.

விருபாக்ஷா கோவில், பட்டதகல்.

ஷேஷநாகனின் மீது அமர்ந்துள்ள விஷ்ணு, பாதாமி குகை ஆலயம்.

புதிய சொற்கள்

உலக பாராம்பரிய தளம் - உலகின் சில அரிய மற்றும் மதிப்பு மிக்க தளங்கள் உலக பாரம்பரியத்திற்குரியது என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. இவைகளுக்கு சிறப்பு பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளன. கர்நாடகத்தில் ஹம்பி மேற்கு தொடர்ச்சி மலைகள் பேளூர், ஹளேபீடு, சோமநாத்புரா மற்றும் பட்டதகல் உலகப் பாரம்பரிய தளங்கள் ஆகும் .

NOT TO BE REPUBLISHED @KTBS

காஞ்சிப் பல்லவர்கள்

பல்லவ வம்சம், தென் இந்தியாவின் ஒரு புகழ்பெற்ற அரச வம்சமாகும். தமிழ்நாட்டின் 'காஞ்சி' பல்லவர்களின் தலைநகரம் ஆகும். அவர்கள் சுமார் 300 வருடங்கள் காலம் ஆட்சிப் புரிந்தனர்.

நரசிம்மவர்மன் : நரசிம்மவர்மன் பல்லவ மன்னர்களில் சிறந்து விளங்கினான். 'மஹாமல்லா' என்பது இவன் பெற்ற விருதாகும். வலிமை மிக்க இவன் பாதாமி சாளுக்கிய இராஜ்ஜியத்தின் மீது படை எடுத்துச் சென்று இம்மடி புலிகேசியைத் தோற்கடித்து, பாதாமியை வெற்றிக்கொண்டான். இவ்வெற்றியின் அடையாளமாக 'வாதாபிகொண்டான்' என்ற விருதைப் பெற்றான். நரசிம்மவர்மன் மாமல்லபுரம் (தற்போதைய மஹாபலிபுரம்) ரேவு பட்டணத்தை அழகுமிக்க நகரமாக வளர்ச்சிப் பெறச் செய்தான்.

சிற்பக்கலைக்கு பல்லவர்களின் பங்களிப்பு: சிற்பக்கலைக்கு பல்லவர்கள் அளித்த கொடை விலைமதிப்புமிக்கவையாகும். மகாபலிபுரத்தில் நரசிம்மவர்மனின் காலத்து எட்டு ஒற்றைக்கல்

இரதங்கள் உள்ளன. உலகப் புகழ் வாய்ந்த இவைகள், ஒரே கல்லினால் செதுக்கப்பட்டுள்ளன. மகாபலிபுரத்தில் 'கங்காவதரணர்' என்னும் புடைப்புச் சிற்பம் உள்ளன. பகீரதன் தவம் செய்து கங்கையை பூமிக்கு கொண்டு வர முயற்சித்த காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை ஒரு புகழ் வாய்ந்த புடைப்புச் சிற்பமாகும்.

பல்லவர்கள் பிரம்மாண்டமான கோவில்களைக் கட்டினார்கள். அவைகளில் ஒன்று, மகாபலிபுரத்தின் கடற்கரையில் கட்டப்பட்டுள்ள சிவன் கோவில் ஆகும். பல்லவர்கள் கட்டிய இன்னும் இரண்டு புகழ்பெற்ற கோவில்கள் காஞ்சியின் 'கைலாச நாதர்' மற்றும் 'வைகுண்ட பெருமாள் கோவில்கள்' ஆகும்.

மகாபலிபுரம் கோவில்

NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள்

புடைப்புச்சிற்பம் - புடைத்து மேலே காணும் வண்ணம் செதுக்கப்பட்ட சிற்பம்.

இராஷ்ட்ர கூடர்கள்:

பாதாமி சாளுக்கியரின் பேரரசிற்கு பின்னர் இராஷ்ட்ரகூடர்களின் ஆட்சி ஆரம்பமானது. இராஷ்ட்ர கூடர் என்றதும் நினைவில் வருவது- கவிராஜமார்கம், ஆதிகவி பம்பா மற்றும் எல்லோராவின் கைலாச நாதர் ஆலயம் ஆகும்.

இராஷ்ட்ர கூடரின் சின்னம்

‘‘கவிராஜ மார்கம்’’ என்ற சிறப்பு வாய்ந்த நூல் இராஷ்ட்ர கூடரின் காலத்தை சார்ந்தவை. இதை இயற்றியவர் ஸ்ரீ விஜயா. இந்நாள்வரை கிடைத்துள்ள கன்னட நூல்களில் இது மிகவும் பழமை வாய்ந்தவை ஆகும். இதன் காலம் 9 ஆம் நூற்றாண்டு ஆகும்.

மதிக்கதக்க பேரரசர்கள்

- **மூன்றாம் கோவிந்தன் :** மூன்றாம் கோவிந்தன், இராஷ்ட்ரகூடர் பேரரசின் மிக்க மதிப்பிற்குரியவன் ஆவான். இவன் தென் இந்தியாவில் முழுவதையும் ஆட்சி புரிந்தான். பின்னர் இமயலையின் அடிவாரம் வரை படையுடன் வெற்றிப் பயணம் மேற்க்கொண்டான். இம்மகா சாதனையை, அவன் அரசவை கவிஞர் ‘‘கோவிந்தனின் போர் மத யானைகள், கங்கா நதி புண்ணியதீர்த்தத்தின் சுவையைப் கண்டன’’ என்று மனோரஞ்சனையாக வர்ணித்துள்ளான்.

- **அமோகவர்ஷா நிருபதுங்கன் :** அமோகவர்ஷா, நிருபதுங்கன் மும்மடி கோவிந்தனின் மகன் ஆவான் முடிசூட்டு விழாவின் போது இவனுக்கு பதினான்கு வயது நிரம்பியிருந்தது. இவன் 60 வருடத்திற்கு மேலாக ஆட்சி புரிந்தான். மேலும், இவன் அறிஞனாகவும் விளங்கினான் ஸ்ரீ விஜயன் அவனின் அரசவை அறிஞன் ஆக இருந்தான்.

- அமோகாவர்ஷா நிருபதுங்கன் மீது மிகுந்த அக்கறை உள்ளவான திகழ்ந்தான், (தன் குடிமக்களின் நலன்) அவன் மாண்ய கேட பட்டணத்தை (தற்போது மளகேடா, குல்பர்கா மாவட்டம்) கட்டினான். அது இராஷ்டிரகூடர்களின் தலைநகரமாக இருந்தன. அக்காலத்தில், நான்கு பரந்த பேரரசில் இராஷ்ட்ரகூடப் பேரரசு ஒன்றாக திகழ்ந்தன. என்று வெளிநாட்டுப் பயணியான சுலைமான் எழுதியுள்ளான் (மற்றவைகள் ரோமன், அரபு, சீனப் பேரரசர்கள்)

- **மூன்றாம் கிருஷ்ணன் :** மூன்றாம் கிருஷ்ணன் காலத்தில் இராஷ்ட்ரகூடப் பேரரசு மறுபடியும் இந்திய அரசியலில் சிறந்த இடத்தைப் பெற்றன. கிருஷ்ணன், சோழர்களைத் தோற்கடித்து, இராமமேஷ்வரம் வரைக்கும் தனது படையுடன் வெற்றி முழக்கம் கொட்டினான். அங்கு வெற்றித்தூண் மற்றும் ஆலயத்தையும் கட்டினான். இவன் பாண்டிய, சேரர்களைத் தோற்கடித்தது மட்டுமின்றி, சிங்கள மன்னரிடம், கப்பம் வசூலித்தான். இவையன்றி மூன்றாம் கோவிந்தனைப் போன்றே, வட இந்தியாவிலும் மிகவும் வெற்றிகரமாக போர்பயணம் மேற்கொண்டான்.

@KTBS NOT TO BE REPUBLISHED

கவிஞர் பொன்னன், கிருஷ்ணனின்ஆதரவை பெற்றிருந்தான். மூன்றாம் கிருஷ்ணனுக்குப் பிறகு இராஷ்ட்ர கூடர்களின் ஆட்சி அழிவை நோக்கிச் சென்றன.

‘லக்ஷண கிரந்த’ என்பது மொழி, அதன் நடை, பண்புகளை விவரிக்கும் நூலாகும்.

பம்பா : பம்பா, ஒரு சிறந்த கன்னட கவிஞன் ஆவார். இவர் கன்னடத்தில், முதல் காவியத்தை இயற்றியவர் ஆவார். எனவே பம்பாவை ‘கன்னடத்தின் ஆதிகவி’ என்று அழைக்கின்றனர். பம்பனுக்கும் முன்னர் கன்னடத்தில் இயற்றப்பட்ட கவிதைகள் இந்நாள்வரை மட்டும் கிடைக்கவில்லை. பம்பா இராஷ்டிரகூடர்களின் பாலகரான வெமுலவாடாவின் அரிகேசரியின் அவையில் இருந்தான். ‘ஆதிபுராணம்’, ‘விக்ரமார்ஜுனா விஜயா’ ஆகியவை பம்பரின் மாபெரும் காவியங்கள் ஆகும். பம்பா கன்னடத்தின் முன்னணி கவிஞர்கள் மீது செலுத்திய தாக்கம் அளப்பரியது. இக்காலத்தைச் சார்ந்த பொன்னா கன்னடத்தின் மற்றொரு காவியக் கவிஞர் ஆவார்.

வேமுலவாடத்தின் மாண்டலிகா ஹரிகேசரியின் அரசவையில் பம்பா இருந்தான்.

@KTBS BE REPUBLISHED

எல்லோரா மற்றும் எலிபெண்டா

கைலாச ஆலயம், எல்லோரா

மகேச மூர்த்தி, எலிபெண்டா, இவைகள் ‘த்ரிமூர்த்தி’ என்று அழைக்கப்படுகின்றன.

எல்லோராவின் கைலாச ஆலயம், நூறு அடி உயரமான பாறையைக் குடைந்து, ஒரே கல்லினால் செதுக்கப்பட்ட கோயில் ஆகும். இதனை நிறுவிய புகழ், இராஷ்ட்ரகூட மன்னன் ஒன்றாம் கிருஷ்ணனையே சாரும். உலகில் இத்தகைய கட்டிடக்கலையை வேறெங்கும் காண இயலாது. இங்குள்ள உருவச்சிற்பக் கலைகளின் சிறப்பினை

காண்பவரை கவர்ந்திழுக்கவல்லது. உருவசிற்பங்களில், இராவணன் கைலாச மலையைத் தூக்கிய கதையின் விவரங்கள் அழகாக செதுக்கப் பட்டுள்ளன.

இராஷ்ட்ரகூடர்களின் பேரரசில், தற்போதைய மகாராஷ்டிரத்தின் பெரும் பகுதிகளை கொண்டவை. எல்லோரா மற்றும் எலிபெண்டா மகாராஷ்டிராவில் உள்ளன.

இராஷ்ட்ரகூடர்களின் உருவச்சிலை கலைப்பெருமையை எலிபெண்டா குகை கோயில்களில் காணலாம். எலிபெண்டா என்பது மும்பை துறைமுகத்தில் அருகிலுள்ள உள்ள ஒரு சிறிய தீவு ஆகும், இங்குள்ள பிரமாண்டமான மூன்று முகங்களை கொண்ட மஹேஷமூர்த்தியின் உருவச்சிலை பிரமிக்கத்தக்கது.



NOT TO BE REPUBLISHED @KTBS

கல்யாண சாளுக்கியர்கள்

இராஷ்ட்ரகூடர்களுக்குப் பின்னர், சாளுக்கிய வம்சத்தினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். இவர்களே கல்யாண சாளுக்கியர். பீதர் மாவட்டத்தின் பசவ கல்யாணா இவர்களின் தலைநகரம் ஆகும்.

ஆறாம் விக்ரமாதித்யன்: ஆறாம் விக்ரமாதித்யன், கல்யாண சாளுக்கிய வம்சத்தின் மிகச் சிறந்த பேரரசன் ஆவான். இவனின் நீண்டகால ஆட்சியில், கன்னடநாடு வளர்ச்சியில் மேன்மையைக் கண்டன. இவன் 'சாளுக்கிய விக்ரம் சகே' யினை தொடங்கினார். விக்ரமாதித்யன், பல அறிஞர்களுக்கு ஆதரவளித்தான். இவனின் ஆதரவைப் பெற்ற பண்டிதர் பில்ஹன 'விக்ரமாங்க தேவசரிதம்' எனும் மகாகாவியத்தை இயற்றினான். இதில் விக்ரமாதித்தனின் வாழக்கை வரலாறு அடங்கியுள்ளன. விஞ்ஞானேஷ்வரர் அரசவையின் மற்றொரு சிறந்த அறிஞன் 'மிதாக்ஷ்ர சம்ஹிதே' இவரின் இலக்கியப்படைப்பாகும். இந்நூல் இன்றும் சட்டமுறையின் 'ஆதார இலக்கியம்' என்று அங்கீகாரம் பெற்றுள்ளன.

மும்மடி சோமேஷ்வரன் : விக்ரமாதித்யனின் மகனான மும்மடி சோமேஷ்வரனின், காலத்தில் அமைதியும், செழிப்பும் நிலைத்திருந்தன. இலக்கிய கலைகளில் மன்னர், நாட்டம் கொண்டவராய் இருந்தார். இவர் 'மானஸொல்லாஸ' என்னும் புகழ்பெற்ற சமஸ்கிருத நூலை இயற்றினார். இதில் அனைத்து சாஸ்திரங்களும் அடங்கியுள்ளன. சோமேஸ்வரர் ஒரு சிறந்த அறிஞனாக திகழ்ந்ததால், சர்வக்ஞ சக்ரவர்த்தி என்ற புகழுக்குரியவனார்.

இலக்கியம் : கல்யாண சாளுக்கியர்களின் காலத்தில் இலக்கியத்திற்கு பெரும் வரவேற்ப்பை பெற்றன.

- கவி சக்ரவர்த்தி என்ற விருதினைப் பெற்ற ரன்னன் ''ஸாகஸ பீம விஜய'' அல்லது ''கதாயுத்தா'' என்னும், வீரகாவியத்தை இயற்றினான் பம்பா, பொன்னா மற்றும் ரன்னரை கன்னட இலக்கிய ரத்தினங்கள் என்று அழைக்கின்றனர்.
- வசன இலக்கியம், சாளுக்கியர் காலத்து சிறந்த பங்களிப்பாகும். கன்னட கவிஞர்கள், எளிய நடையில் வசனங்களை எழுதினர்.

ஜேடர தாசிமய்யா, பசவண்ணர், அல்லம பிரபு, அக்கமகாதேவி சென்ன பசவண்ணா, சித்தராமா, மடிவாள மாசய்யா, முதலியோர், இக்காலத்து குறிப்பிடத்தக்க கவிஞர்கள் ஆவர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

கட்டிடக்கலை: கல்யாண சாளுக்கியர்கள் காலத்தில் பல கோவில்கள் கட்டப்பட்டன. அவை நுண் கலைகளின் மையங்களாக விளங்கின. கொப்பளா மாவட்டம் 'இடகி மஹாதேவ ஆலயம்' இக்காலத்து மிகச் சிறந்த கட்டிடக்கலையாகும். இதனை அங்குள்ள கல்வெட்டு ஒன்று 'ஆலயங்களின் சக்கரவர்த்தி' என்று வர்ணித்துள்ளன.

மஹாதேவ தேவாலயம், இடகி

NOT TO BE REPUBLISHED

காலவரிசை (பொ.ச)

இராஷ்ரகூடரின் ஆட்சி காலம் - சுமார் 750 இல் இருந்து 950 வரை

கல்யாண சாளுக்கியர்களின் ஆட்சி காலம் - சுமார் 970 இலிருந்து 1150 வரை.

மூன்றாம் கோவிந்தன்	- *793-814*
அமோகவர்ஷா நிருபதுங்கன்	- *814 - 878*
மும்மடி கிருஷ்ணா	- *939 - 967*
ஆறாம் விக்ரமாதித்யா	- *1076 - 1127*
சாளுக்கிய விக்ரம் ஷகே	- *1076*
மும்மடி சோமேஷ்வர்	- *1127 - 1137*

ஹொய்சளர்கள்



ஹொய்சளர்களின் சின்னம்

மாமர ஏரி பள்ளியின் ஆசிரியர் மற்றும் மாணவர்கள், பேலூரின் சென்னகேசவ கோவிலை காண தீர்மானித்தனர். பேருந்தில் சென்று கோவிலின் முன சென்று நின்றபோது, அவர்கள் கண்டது என்ன? சூரியனின் வெளிச்சத்தில் கண்கவரும் சிற்பகலையின் மாயாஜாலம்!

ஆசிரியர் : பிள்ளைகளே, இது, ஹொய்சலரின் உலகப் புகழ் பெற்ற கோவிலாகும் இவற்றின் இரண்டு புதுமை என்னவெனில் கோவிலை உயரமான நடைமேடை (ஜகலி) மேல் கட்டடப்பட்டதும், மேலும் நடைமேடை, நட்சத்திர வடிவை கொண்டதே ஆகும்.

மாணவன்: நடைமேடையின் மேல் கோவிலை ஏன் கட்டியுள்ளனர்?

ஆசிரியர் : கோவிலின் பிரம்மாண்டம், காண்பவர்களின் கண்களுக்கு நன்கு காணவேண்டும் என்ற காரணத்தால் இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன.

மாணவன் : நடைமேடை நட்சத்திர வடிவில் இருக்க காரணம் என்ன?

ஆசிரியர் : நடைமேடை மீது மட்டுமல்ல கோவிலின் சுவர்கள், கர்ப்பகிரகம் மற்றும் கோபுரம் அனைத்துமே நட்சத்திர வடிவிலுள்ளன. இவற்றின் மீது ஒளியும், நிழலும் நன்கு படர வாய்ப்பளிக்கின்றன. அதுமட்டுமல்லாமல் புடைப்பு சிற்பங்கள் மேலும் எழும்பி நின்று காணப்படுகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

பேலூரின் சென்னகேசவ ஆலயம்

ஹொய்சளர்கள், எண்ணற்ற தேவ ஆலயங்களை பளப்பத்தின் மென்மையான கல்லினால் கட்டினார்கள். சிலைகளின் அலங்கரிப்பிற்காக அதிகம் முக்கியத்துவம் அளித்துள்ளனர். வெளிச் சுவரின் கீழ்ப்பகுதியில் யானைகள், குதிரை சவாரிகள், தோரணங்கள், சிங்கமுகம் முதலான புடைப்பு சிற்பங்களின் சிறப்பான வரிசைகள் காணப்படுகின்றன. நுண் கலை வேலைபாடுகளின் சிறப்பு சிற்பங்களில் ஹொய்சலரை மிஞ்சியவர்கள் யாருமில்லை எனக் கூறலாம்.

மாணவன்: ஆசிரியரே, கோவிலுக்குள் செல்லலாமா?

ஆசிரியர் : சரி உள்ளே செல்வோம் வாருங்கள். இது 'நவரங்கா' பூஜை நேரத்தில், சங்கீதம், நடனம் போன்ற கலை சேவைக்காக உள்ள இடமாகும். நவரங்கத்தின் நான்கு கம்பங்களை கவனியுங்கள். இவை சரகி இயந்திரம் (தொழிநுட்ப இயந்திரம்) மூலம் கொண்டு உருவாக்கப்பட்ட கம்பங்கள். கம்பங்கள் கண்ணாடிபோல மினுமினுக்கிறது அல்லவா? நவரங்கத்தின் மேல்கூரையை அண்ணாந்து பாருங்கள் இதை 'புவனேஸ்வரி' என்பர். புவனேஸ்வரியின் சிற்ப அமைப்பு சிறந்த தனித்துவம் வாய்ந்தவைகள் ஆகும்.

© KTBS Not to be republished



புவனேஸ்வரி, பேலூர்

பிள்ளைகளே, இன்னும் உள்ளே வாருங்கள், இவை கருவரையாகும். இங்கு அழகான விஜய நாராயணன் சிற்பத்தை பாருங்கள். பேலூர் தேவாலயத்தின் குறிப்பாக கவர்வது ''மதனிகே சிலைகள்'' மற்றும் பல்வேறு நிலைகளில் உள்ள அழகான பெண் சிற்பங்கள் ஆகும்.

மாணவன் : ஹொய்சளர் கோவில்களை கட்டியவர் சிற்பி ஜகனாச்சாரி என்று கூறுவர், அல்லவா? அவரைப் பற்றி கூறுங்கள்.

ஆசிரியர் : ஜகனாச்சாரியை பற்றின எதுவும் சரியாக தெரியவில்லை என்றாலும், அவரை குறித்த வரலாறு உண்டு.

மதனிகே

ஜகனாச்சாரி: ஜகனாச்சாரி தன் மனைவி மற்றும் ஆண் மகனை பிரிந்து போய் ஊர் ஊராக திரிந்து அங்காங்கே தேவாலயங்களை கட்டும் பணியில் பதினாறு வருடங்களை கழித்து விட்டாராம். ஒருமுறை அவர் ஹொய்சள தலைநகரத்தில் தேவாலயத்தை கட்டிகொண்டிருக்கும் சமயத்தில் அவன் மகன் டங்கனச்சாரி தந்தையைத் தேடி அலைந்து அங்கு வந்தடைந்தான் இவனும் சிற்ப கலையில் திறமையானவன். கோவிலில் நிறுவ ஜகனாச்சாரி ஆயத்தப்படுத்தி வைத்த சிற்பத்தை கண்டவன், அதில் தோஷம் உள்ளது என்று டங்கனாசாரி கூறியபோது, அதனை நிரூபித்தால் தனது கையை வெட்டிக்கொள்ளவதாக ஜகனாசாரி சவால் விடுத்தார். சந்தனத்தை அரைத்து சிற்பத்தின் வயிற்று பகுதியில் பூசிய போது சந்தனம் தொப்புள் பகுதியில் மட்டும் ஈரமாக எஞ்சி காணப்பட்டன. அப்பகுதியில் சிற்பத்தை உடைத்தபோது வெற்றிடமாகவும், அதில் சிறிது தண்ணீரும், மணல் மற்றும் தவளை இருப்பதைக்கண்ட ஜகனாச்சாரி தன் கையை உடனே வெட்டிக் கொண்டாராம். ஜகனாச்சாரி தன் தந்தை என்றும், டங்கனாச்சாரி தன் மகன் என்று ஜகனாச்சாரிக்கு பின்னர் விளங்கியது. பின்னர் ஜகனாச்சாரி தான் பிறந்த ஊரில் ஒரே கையில் கேசவ தேவாலயத்தை கட்டினார். அதை நிறைவு செய்து கொண்டிருக்கும் சமயத்தில் அவர் கை மீண்டும் முன்பு போல் வளர்ந்ததாம்!

©KTBS NOT TO BE REPUBLISHED

ஆசிரியர் : நேரம் கடந்து விட்டன, வாருங்கள், செல்லலாம்.

மாணவர் : சரி, ஐயா

ஹொய்சள பாணியில் நூற்றுக்கணக்கான தேவாலயங்கள் உள்ளன. அவைகளில் ஹாசன் மாவட்டத்தில் பேலூர் மற்றும் ஹளேபீடு மற்றும் மைசூர் மாவட்டத்தில் சோமநாதபுரத்தில் உள்ள தேவாலயங்கள் பெரும்பாலும் சிறப்புமிக்கவைகள் ஆகும். ஹொய்சலரின் தேவாலயங்கள் கிட்டதட்ட. ஹாசன், தும்கூர் மற்றும் மண்டியா மாவட்டங்களில் உள்ளன.

கேசவ தேவாலயம், சோமநாதபுரம்

> ஹளேபீடில் உள்ள விசாலமான பழமை வாய்ந்த ஏரி உள்ளதால், இதற்கு 'துவாரசமுத்ரா' என்ற பெயர் வந்தன. துவார சமுத்ராவை தில்லி சுல்தான் அலாவுதின் படைத்தளபதி மல்லிக்கபூர் கொள்ளையிட்டான் (பொ.ச. 1310) அதன் பின்னர், மீண்டும் சீரமைக்கப்படவில்லை, எனவே 'ஹளேபீடு' என பெயர் பெற்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஹொய்சளர் தென் கர்நாடகம் மற்றும் தமிழ் நாட்டின் பூகோளப் பகுதிகளை கொண்ட விசாலமான பகுதிகளை, மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக சிறப்பான முறையில் ஆண்டனர். ஆரம்பத்தில் பேலூர், பின்னர் துவார சமுத்திரம் அவர்களின் தலைநகரமாக விளங்கின. புலியைக் கொல்லும் வீர சித்திரமே ஹொய்சளரின் சின்னம் ஆகும்.

ஹொய்சள அரச வம்சத்தின் முக்கிய மன்னர்கள்

- **விஷ்ணுவர்தனன்:** விஷ்ணுவர்தனன், ஹொய்சள வம்சத்தின மதிப்பிற்குரிய மன்னர் ஆவார். அவர் சோழ மற்றும் பாண்டவர்களை தோற்கடித்து, அவர்கள் வசம் இருந்த, கன்னட பிரதேசங்களை வெற்றிக் கொண்டான். அவன் சமண மதத்தவனாக இருந்து, பின்னர் ஸ்ரீ வைணவப் சமயத்தை பின்பற்றினான். அவனின் அரசி ஷாந்தலெ சமண சமயத்தினையே பின்பற்றி வந்தாள். மத சகிப்புத்தன்மை கொண்டவனாக இருந்த இவன் சைவம் மற்றும் சமண சமயங்களுக்கு மிகவும் ஆதரவு அளித்தான்.

- மூன்றாம் பல்லாளன் : மூன்றாம் பல்லாளன் ஹொய்சள வம்சத்தின் இறுதி மற்றும் குறிப்பிடதக்க மன்னன் ஆவான். அவன் 50 ஆண்டுகளாக, நீண்ட காலம் ஆட்சி புரிந்தான். அவன் காலத்தில் தில்லியின் சுல்தான்கள், மீண்டும் மீண்டும் தென் இந்திய இராஜ்ஜியங்களின் மீது படையெடுத்து வந்தனர். ஆலயங்கள் நாசமடைந்தன. அங்கிருந்த செல்வங்கள் சூரையாடப்பட்டன.

அப்படையெடுப்பின் விளைவாக தென் இந்தியாவின் முக்கிய அரச வம்சங்கள் அழிந்து விட்டன. ஆயினும் சுல்தான்கள் ஹொய்சள இராஜ்ஜியத்தை தொடாமல் சென்றனர். இக்கடுமையான தாக்குதலை மூன்றாம் பல்லாளன் தனித்து நின்று போராட வேண்டியிருந்தன.

அதற்கிடையில் தில்லியின் பிரதிநிதியாக இருந்த மதுரையின் சுல்தானின் கருணையற்ற செயல்கள் அதிகரித்தன. வயது முதிர்ந்த பல்லாளன் அவனை தண்டிக்க சென்றான். போரில் சுல்தானின் வஞ்சகத்தால் பல்லாளனை சிறைபிடித்து, கொடுமையான முறையில் கொன்றனர். அந்நிய படையெடுப்பின் காலகட்டத்தில் நேர மூன்றாம் பல்லாளன் மாலை நேர இருளில் தனித்து, ஒளிரும் வெள்ளியைப் போல காணப்பட்டார். பின்னர் அவர் மகன் நான்காம் பல்லாளன் பொ.ச. 1346 இல் மதுரை சுல்தானால், கொல்லப்பட்ட போது ஹொய்சள அரசு அழிந்து ‘விஜய நகர பேரரசு’ நிறுவப்பட்டன.

©KTBS NOT TO BE REPUBLISHED

கன்னட இலக்கியத்திற்கு ஹொய்சளரின் பங்களிப்பு

ஜன்னா, ஹரிஹர மற்றும் ராகவாங்கா போன்றவர்கள் ஹொய்சளர்கள் கால சிறந்த கவிஞர்கள் ஆவர். ஜன்னன் இக்காலத்தின் மிக சிறந்த கவிஞனாகத் திகழ்த்தார். கவி சக்கரவர்த்தி என்ற பட்டம் இவருக்கு இருந்தது. ஹரிஹரன் ரகளேகளையும், மகாகாவியங்களையும் எழுதினான். ராகவாங்கன் பல காவியங்களை இயற்றினான். இவைகள் மொழியின் புதிய வளர்ச்சிக்கு வழி வகுத்தன.

ஆண்டய்யா தூய கன்னடத்தில் இலக்கியம் இயற்றினார். இக்காலத்திலேயே பசவேஷ்வரர் மற்றும் மற்ற சரணர்கள் வசனங்களையும், கன்னட இலக்கிய வளத்தை பெருக்கின.

கவி, காவியங்கள் : ஜன்னா - ‘யஷோதர சரிதா’, ஹரிஹரன் - கிரிஜா கல்யாண, ராகவாங்க் -ஹரிசந்த்ர காவ்யா, ஆண்டய்யா. கப்பிகர காவம்.

ஹெய்சளர் விஷ்ணுவர்தனின் பேரரசு

©KTBS NOT TO BE REPUBLISHED

சோழர்

படம் 1

படம் 2

மேலுள்ள சோழர்களின் காலத்து வெண்கல சிலைகளை அடையாளம் கண்டு கொள்ள இயலுமா?

இவைகள் நடராசர் மற்றும் காளிங்கன் மேல் நடனமாடும் பாலமுரளி கிருஷ்ணர் ஆகும். சோழர்கள் இந்திய உருவ சிற்ப கலைக்கு அளித்த வெண்கல சிலைகள் அபூர்வமான பங்களிப்பாகும்.

தாமிரம் மற்றும் தகரம் இவ்விரண்டும் கலந்த கலப்பு உலோகமே வெண்கலம் ஆகும். இவை உறுதியும் பளபளக்கும் தன்மையும் கொண்டதாகும். அச்சுகளில் வெண்கல திரவத்தை வார்த்து, வெண்கல சிலைகள் தயாரிக்கப்படுகின்றது. இம்முறை தற்போதும் வழக்கத்தில் உள்ளன.

சோழர்கள் கட்டிடக்கலை துறைக்கும் சிறந்த பங்களித்துள்ளனர். தஞ்சா ஊரின் பிருகதீஷ்வரர் ஆலயம் உலக புகழ் பெற்ற கட்டிடக்கலையாகும். இவை ஓராயிரம் ஆண்டுகளுக்கும் பழமை வாயந்தவை ஆகும்.

பிருகதீஷ்வர ஆலயத்தின் கலசத்தை கவனியுங்கள். கலசம் என்றால் மேல் கோபுரம் கருவரை மேலுள்ள கோபுரமாகும். இந்த ஆலயத்தின் விமானம் (மேல் கோபுரம்) பதிமூன்று மாடிகள் மேலிருந்து விண்ணை தொடுவது போல் உள்ளது. விமானத்தின் உயரம் 61 மீ. (200 அடி) பிருகதீஷ்வரா இந்தியாவிலேயே உயரமான மற்றும் பிரம்மாண்டமான தேவாலயமாக உள்ளது. உலக பரம்பரையின் ‘அற்புதத் தலம்’ என்று இது அங்கீகாரம் பெற்றுள்ளது.

NOT TO BE REPUBLISHED @KTBS

பிருகதீஷ்வரர் ஆலயம், தஞ்சாவூர்

அனைதது சிவன் கோயில்களிலும் முற்பகுதியில் நந்தி இருப்பது, கட்டிடக்கலையின் ஒரு சிறப்பியல்பாகும். இங்குள்ள நந்தி சிலையின் அளவு தென் இந்தியாவிலேயே மிகவும் பெரியதாகும், சோழர்களின் மற்றுமொரு பெரிய கோயில் கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள சிவன் கோவில் ஆகும்.

இந்திய ரிசர்வ் வங்கி 2010 இல் ரூ. 1000 மதிப்புள்ள ''ஆயிரம் வருடம் பழமையான பிருகதீஷ்வரர் ஆலயம்'' என்னும் நாணயத்தை வெளியிட்டது.

முக்கிய சோழ பேரரசர்கள்

சோழர்கள் சுமார் நான்கு நூற்றாண்டுகளாக தென்னியந்தியாவில் ஆதிக்கம் செலுத்திய அரசியல் ஆற்றல் படைத்தவர்களாக திகழ்ந்தனர். 'தஞ்சாவூர்' (தமிழ் நாடு) சோழர்களின் தலைநகரம் ஆகும். சோழப் பேரரசில், இராஜ ராஜ சோழன் மற்றும் இராசேந்திர சோழன் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.



@KTBS
NOT TO BE REPUBLISHED

- இராஜராஜ சோழன் : இராஜ ராஜசோழன் வலிமைமிக்கவன் மற்றும் திறமைமிக்க மன்னராவான். இவனின் பேரரசு துங்கபத்ரா நதியின் தெற்கிலிருக்கும் அனைத்துப் பகுதிகளையும், இலங்கை மற்றும்

மாலத் தீவுகளை கொண்டிருந்தன. பேரரசின் பாதுகாப்பிற்காக இவன் புகழ்பெற்ற தரைப்படை மற்றும் கப்பற்படையையும் கட்டினான். பிருகதீஷ்வரர் ஆலயம் இராஜ ராஜனின் பங்களிப்பாகும்.

- **இராஜேந்திர சோழன் :** இராஜ ராஜனுக்குப் பின்னர் அவனது மகன் இராஜேந்திரன் பேரரசின் தலைமையை ஏற்று மன்னரானான். வட இந்தியாவின் வெற்றி வீரப்பயணம், அவனின் ஒரு சிறந்த சாதனையாகும். அவ்வெற்றியின் நினைவாக இராஜேந்திரன் ‘கங்கை கொண்ட சோழபுரம்’ என்னும் புதிய தலைநகரையும் அங்கு ஒரு பிரம்மாண்டமான சிவன் கோயிலையும் கட்டினான். தலைநகருக்கு அருகில் நீர்ப் பாசனத்திற்கு உகந்த ‘சோழகங்கம்’ என்னும் மிகப்பெரிய ஏரியைத் தோண்டினான்.

தென்கிழக்கு ஆசியாவின் சுமத்ராவில் ஸ்ரீ விஜய இராஜ்ஜியத்தை வென்றது இராஜேந்திரனின் மற்றொரு மிகச்சிறந்த சாதனையாகும்.

இலக்கியம் : சோழர்களின் ஆட்சிகாலம், தமிழ், இலக்கியம் மற்றும் கலாச்சார பொற்காலமாக விளங்கியன. அவர்கள் காலத்தில் பக்தி இலக்கியம் செழிப்பாக வளர்ந்தன. ‘பெரிய புராணம்’ பக்தி இலக்கியத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இக்காலத்தைச் சார்ந்த கம்பன் எழுதின ‘கம்ப இராமாயணம்’ இன்றும் மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளன.

©KTBS NOT TO BE REPUBLISHED

கிராம ஆட்சி : சோழர்களின் கிராம ஆட்சி முறை முன்னுதாரணமாக இருந்தன. கிராம ஆட்சியை அக்கிராம சபைகளே செயலாற்றின. கிராமசபையே உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தன. சிலர் உறுப்பினர்கள் உள்ள சங்கங்களை உருவாக்கி, அவைகளுக்கு குறிப்பிட்ட பணிகள் செய்யும் பொறுப்பளிக்கப்பட்டன. சங்கங்கள் நிதி வரவு செலவு கணக்குகளை ஒப்புவிக்க வேண்டியிருந்தன. தகுதியற்ற உறுப்பினர்களை கிராம சபையிலிருந்து வெளியேற்றம் செய்யும் வழக்கம் இருந்தன. சோழ கிராம ஆட்சி முறையானது தற்போதைய பஞ்சாயத்து முறைமையின் படியே இருந்தன.

இந்தியாவில் ஆட்சி நடத்திய பிரிட்டிஷ் அதிகாரிகள், சோழர்களின் திறமையான ஆட்சியை பாராட்டினர். சோழர்கள் காலத்து கிராமங்கள் ‘சிறிய குடியரசுகள்’ போல விளங்கின என்றும் வர்ணித்துள்ளனர்.

செயல்பாடுகள் : சோழர்கள் காலத்து கிராம ஆட்சிக்கும், தற்போதைய கிராம பஞ்சாயத்திற்கும் இணையான பண்புகளை பற்றி எழுதுக.

வணிகம் : சோழர்களின் இராஜ்ஜியம் செழிப்பாக இருந்தன. அயல்நாட்டு வியாபாரம், விறுவிறுப்பாக நடந்தன. சீனா, சுமத்ரா, ஜாவா மற்றும் அரேபியா முதலிய பிரதேசங்களுடன் பேரரசு, வணிக நட்பு கொண்டிருந்தன. வர்த்தக சங்கங்கள் உள்நாட்டு, அயல்நாட்டு வணிக பரிமாற்றங்களை செய்தனர்.

காலவரிசை (பொ.ச.)

சோழர்களின் ஆட்சிகாலம்	-	சுமார் 850 - 1200
இராஜ ராஜ சோழன்	-	985-1014
ஹொய்சளரின் ஆட்சி காலம்	-	1006-1346
இராஜேந்திர சோழன்	-	1015 - 1044
விஷ்ணுவர்தன்	-	சுமார் 1108 - 1141
மூன்றாம் பல்லாளன்	-	சுமார் 1291 - 1343
விஜயநகரம் நிறுவப்பட்டன	-	1336

அறிந்து கொள்ளுங்கள் :

- திருக்குறள் 1300 குறள்களைக் கொண்டதாகும். அவற்றில் சில நீதி வாக்கியங்கள் உள்ளன. களங்கமற்ற உள்ளமே மதம் (தர்மம்) ஆகும். பிறப்பால் அனைத்து மக்களும் சமம். மன்னருக்கு வெற்றியளிப்பது ஈட்டி அல்ல, அவரின் பாரபட்சமற்ற ஆட்சியேயாகும்.
- சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே சங்க இலக்கியம் இயற்றவது, ஆரம்பித்து சுமார் 500 ஆண்டங்கள் வரை தொடர்ந்தன.
- பனவாசி வைஜெயந்தி என்ற பெயரில் சாதவாகனர்களின் மாகாணம் தலைநகராக விளங்கின. சாதவாகனர்கள் காலத்தில் பிராக்ரிதம் பிரபலமான மொழியாக விளங்கின.
- சாதவாகனர்களின் ஆட்சி சுமார் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பங் கொண்டு, சுமார் நான்கு நூற்றாண்டுகள் காலமாக தொடர்ந்தன.

@KTBS NOT TO BE REPUBLISHED

- கதம்பர்களின் ஆட்சி சுமார் 1650 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பம் கொண்டன. அவர்கள் சுமார் 190 ஆண்டுகள் ஆண்டனர். ஹால்மிடி மற்றும் தாலகுந்தா கல்வெட்டுகள் சுமார் 1550 ஆண்டுகள் கால பழமை வாய்ந்தவைகள்.

- கங்கர்கள் காலத்தில் வேளாண்மை நிலங்கள் கணிசமாக விரிவடைந்தன. கங்க மன்னர்கள் ஏரிக்கரைகளை கட்டி விளைச்சலுக்கு வழிவகுத்தனர். கிராமங்களில் பொதுவான ஏரி ஒன்றிருக்கும், கேழ்வரகு, சோளம், பருத்தி முதலியவை முக்கிய பயிர்கள் ஆகும், கால் நடைகள் ஏராளமாக இருந்தன, மகிஷி, கோவு, அஷ்வ, குக்குட்ட (எருது, பசு, குதிரை, கோழி) மாநிலத்தில் ஏராளமாக இருந்தன.

- கங்கர்களின் காலத்தில் சில இடங்களில் பெண்கள் அதிகாரிகளாக விளங்கினர். சுயமாக தானங்களைச் செய்தனர். நேர்மை, பக்தி, வீரம் மற்றும் தாழ்மை-இவைகள் இக்காலத்து சமூக விழுமியங்கள் ஆகும்.

- சரவணபெளகொளாவின் சிக்கபெட்டாவில் சந்திர குப்தனின் பசதி அமைந்துள்ளது. சந்திரகுப்த மௌரியன் இதை கட்டினான். இதனால் சிக்கபெட்டா ‘சந்திரகிரி’ என்று பெயர் பெற்றது. தொட்ட பெட்டாவை ‘இந்திரகிரி’ என்று அழைக்கின்றனர்.

- கர்நாடகத்தில், கார்கள (உடுப்பி மாவட்டம்), வேணூர் (தென் கன்னடா), கொம்மட்டகிரி (மைசூர் மாவட்டம்), பஸ்திகிராமம் (மண்டியா மாவட்டம்) மற்றும் பிற இடங்களில் பழமைவாய்ந்த கொம்மட்டா சிலைகள் உள்ளன. கார்கலத்தின் ரஞ்சாள கோபால ஷெனை தர்மஸ்தளத்தின் கொம்மட்டா. சிலையின் சிற்பி ஆவார்.

பயிற்சிகள்

I. கோடிட்ட இடங்களை பொருத்தமான சொற்களால் நிரப்புக:

1. திருக்குறளை இயற்றியவர் .... ஆவார்
2. சங்க யுகத்தின் தலைசிறந்த கவிஞர் .... ஆவார்
3. சாதவாகன வம்சத்தின் குறிப்பிடதக்க மன்னர் .... ஆவார்.
4. கதம்பரின் தலைநகரம் .... ஆகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

5. கன்னடத்தின் பழமை வாய்ந்த கல்வெட்டு .... ஆகும்.

6. இரண்டாம் புலிகேஸியால் தோற்கடிக்கப்பட்ட வட இந்திய பேரரசர் .... ஆவர்.

7. கோயில்களின் சிற்ப தொட்டில் என்று .... இடம் அழைக்கப்படுகின்றது.

8. சரவணபெலகொளாவில் கொம்மட்ட சிலையை கட்டுவித்தவர் .... ஆவார்.

9. கங்கர் வம்சத்தின் புகழ்பெற்ற மன்னர் .... ஆவார்.

10. சாவுண்டராயன் இயற்றிய நூல் .... ஆகும்.

II. கீழே உள்ள வினாக்களுக்கு விடையளிக்க :

11. சிலப்பதிகாரம் பெருங்காவியத்தின் கதாநாயகி யார்?

12. சங்கம காலத்தின் இரண்டு பெருங்காவியங்களின் பெயர்களை கூறுக.

13. ‘சைத்யா’ என்றால் என்ன?

14. சாதவாகனர் கால ‘சைத்யா’க்கள் எங்குள்ளன?

15. கர்நாடகத்தில் சாதவாகனர்களின் கட்டிடங்களின் இடிபாடுகள் எங்கு காணலாம்?

16. ‘ஷ்ரேணி’ என்றால் என்ன?

17. கதம்ப வம்சத்தின் புகழ்பெற்ற மன்னர் யார்?

18. சாளுக்கியரின் தலைநகரம் எது? எந்த மாவட்டத்தில் உள்ளன?

19. சாளுக்கியரின் முக்கிய கட்டிடக்கலைகளைக் கொண்ட மூன்று இடங்களின் பெயர்களைக் கூறுக.

20. காஞ்சி பல்லவரின் புகழ்பெற்ற மன்னர் யார்? அவனுக்கு அளித்த விருது என்ன?

21. கங்கர்களின் தலைநகரம் தலகாடு, எந்த மாவட்டத்தில் உள்ளது?

@KTBS NOT TO BE REPUBLISHED

III. குழுவில் கலந்துரையாடி, விடையளிக்கவும்.

22. ''பிறப்பால் அனைத்து மக்களும் சமம்'' என்ற திருவள்ளுவரின் கூற்று நமக்கு அவசியமானது. ஏன்?

23. சாதவர்கனர்களின் காலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கு காரணமான அம்சங்கள் எவை?

24. பண்டைய அரச வம்சங்கள் பொதுவாக எக்காரணங்களால் வீழச்சியை கண்டன?

25. பம்பா, பொன்னா மற்றும் ஸ்ரீ விஜயா இவர்களைக் பற்றி குறிப்பு வரைக.

26. எல்லோராவின் கைலாச தேவாலயம் மற்றும் எலிபெண்டாவின் குகைகோயில் புகழ்பெறக் காரணம் என்ன?

27. மூன்றாம் கோவிந்தனின் போர் சாதனைகளை கூறுக.

28. அமோகவர்ஷா நிருபதுங்கன் ஏன் மதிப்புமிக்க பேரரசனாக கருதப்பட்டது, ஏன்?

29. ஆறாம் விக்ரமாதித்தியனை கல்யாண சாளுக்கியர் வம்சத்தின் மிக முக்கியமான பேரரசன் என்று ஏன் அழைக்கின்றார்கள்?

30. 'விக்ரமாங்காதேவ சரிதா' 'மிதாக்ஷர சம்ஹிதே' மற்றும் 'மானசலுல்லாச' இக்காவியங்களை பற்றி குறிப்பு வரைக.

31. 'கோயில்களின் சக்கரவர்த்தி' என்று எந்த கோயிலை அழைக்கிறார்கள்? காரணம் என்ன?

32. ஹொய்சள தேவாலயங்களின் இரண்டு சிறப்புகளை கூறுக.

33. 'புவனேஸ்வரி' என்றால் என்ன?

34. ஹொய்சளரின் ஆட்சி கால, முக்கிய கோவில்களின் பெயர்களை எழுதுக.

35. ஹொய்சளரின் ஆட்சி காலங்களின் முக்கிய கவிஞர்களையும், அவர்களின் காவியங்களையும் கூறுக.

36. பிருகதீஷ்வரன் தேவாலயம் ஏன் புகழ் பெற்றுள்ளன?

@KTBS NOT TO BE REPUBLISHED

37. இராஜராஜ சோழனின் சாதனைகள் யாவை?

38. சோழர் காலத்து கிராம ஆட்சி முறையின் சிறப்புகள் யாவை?

செயல்பாடுகள் :

- ❋ சாளுக்கிய மற்றும் பல்லவரின் கட்டிடக்கலையின் படங்களை, குறிப்புகளுடன் சேகரிக்கவும்.
- ❋ ஹர்ஷவர்தனன் மற்றும் இம்மடி புலிகேசியின் வாழ்க்கை வரலாறு படிக்கவும் (மூலம் : பாரத பாரதி நூல் வளம்)
- ❋ இராஷ்ட்ரகூடரின் மற்றும் கல்யாண சாளுக்கியரின் கால கட்டிடக் கலையின் படங்களை விளக்கங்களுடன் சேகரிக்கவும்.
- ❋ வரைப்படத்தில் இராஷ்ரகூடர் மற்றும் கல்யாண சாளுக்கியரின் தலைநகர் மற்றும் கட்டிடக்கலை மையங்களைக் குறிப்பிடுக.
- ❋ கொம்மட்டா சிலையின் சிறிய உருவத்தை களி மண்ணினால் அல்லது ஏதேனும் பொருளைக் கொண்டு உருவாக்கவும்.
- ❋ வாய்ப்பு கிட்டும் போது சரவணபெளகொளாவிற்கு சென்று அங்குள்ள சிற்ப கலைபொருட்களின் பெருமையை அனுபவிக்கவும்.
- ❋ உங்கள் சுற்று சூழலில் உள்ள கல்தூண்களின் குறிப்புகளை சேகரிக்கவும்.
- ❋ ஹொய்சள மற்றும் சோழரின் சிற்பச்சிலை மற்றும் கட்டிடக்கலை விளக்கும் படங்களை சேகரிக்கவும்.
- ❋ வரைப்படத்தில் ஹொய்சள மற்றும் சோழர் கால வரலாற்று ஸ்தலங்களை குறிப்பிடவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

குடிமையியல்

பாடம் 7

குடிமக்கள் மற்றும் குடியுரிமை

பாட அறிமுகம்

இப்பாடத்தில் குடிமக்கள் மற்றும் குடியுரிமைப் பற்றின கருத்துக்களின் விளக்கங்களுடன், குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளும் மற்றும் ஆனை இழக்கும் சூழ்நிலைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. அதனுடன் நல்ல குடிமக்களின் பண்புகள் பற்றியும் முன்மொழியப்பட்டுள்ளன.

திறன்கள் :

1. குடிமக்கள் மற்றும் குடியுரிமையின் பொருள் அறிதல்.
2. குடியுரிமை பெற்றுக் கொள்ளும் முறைகள் மற்றும் அவைகளை இழக்கும் சூழ்நிலைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.
3. நல்ல குடிமக்களின் பண்புகளை அறிந்து கொள்ளுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பாட அணுகல்

''அ'' மைசூர் அரண்மனை ''ஆ''

முன்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள படத்தை கவனி :

1. மைசூர் அரண்மனையைச் சுற்றிப் பார்ப்பதற்கு சுற்றுலா பயணிகள் எங்கிருந்தெல்லாம் வருகின்றார்கள்?
2. ''ஆ'' பிரிவில் உள்ளவர்கள் அனைவரும் இந்தியரா?
3. அயல் நாட்டினரை, நீ எவ்வாறு அடையாளம் காண்பாய்?

சரிதாவின் ஐயங்கள் :

சரிதா, தசரா விடுமுறையில் பேளூரு, ஹளேபீடு மற்றும் மைசூரை சுற்றிப் பார்ப்பதற்கு, தன் தாய், தந்தையருடன் சென்றிருந்தாள். ஒவ்வொன்றையும் குறித்து விவரமாக அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் வினாக்கள் கேட்டுக் கொண்டே இருந்தாள். மைசூர் அரண்மனையைச் சுற்றிப் பார்க்கும் சமயத்தில் அவளுடைய கவனம் வேறு பக்கம் சென்றதை கவனித்த, அவளுடைய தந்தை இக்கண்ட வினாக்கள் கேட்டார்.

தந்தை : யாரை நோக்கி பார்க்கிறாய், அம்மா?

சரிதா : அப்பா, அங்கே பாருங்கள், முகப்பாவனை, உடல் கட்டமைப்பு, ஆடை அணிகலன்கள், மொழி அனைத்திலும் வேறுபாடுள்ள, இவர்கள் யார்?

தந்தை : ஆமாம், அவர்கள் வேறு நாட்டினர், அயல் நாட்டவர்கள். இந்தியாவை சுற்றிப் பார்ப்பதற்காக இங்கு வந்துள்ளனர், அவர்கள் வேறு நாட்டின் குடிமக்கள்.

சரிதா : அம்மா ''குடிமக்கள்'' என்றால் யார்?

தாய் : ஒரு நாட்டில் நிரந்தரமாக குடிக்கொண்டு, கடமை உணர்வுடன் வாழும் மக்களை 'குடிமக்கள்' என்று அழைப்பர். நமது நாடு இந்தியா. நாம் இந்தியர்கள், நம் பாட்டன், முப்பாட்டன்மார்கள் இந்நாட்டிலேயே இங்கேயே பிறந்து வாழ்ந்தவர்கள். நாம் அனைவரும், இந்நாட்டில் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், இக்காரணத்தால் நாம் அனைவரும் இந்திய குடிமக்கள்.

நம் குடும்பத்தில் நாம் உறுப்பினர்கள் என்பதை போன்றே, இந்நாட்டின் உறுப்பினரர்கள். ஒரு நாட்டின்

NOT TO BE REPUBLISHED ©KTBS

சட்டப்பூர்வ உறுப்பினர் உரிமையை 'குடியுரிமை' எனப்படும்.

சரிதா : நமக்கும், அயல் நாட்டினருக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் என்ன?

தந்தை : இந்நாட்டின் குடிமக்களாகிய நமக்கு சில உரிமைகள் உண்டு. அயல் நாட்டினவருக்கு அத்தகைய உரிமைகள் வழங்கப்படமாட்டாது.

சரிதா : ''குடியுரிமை'' என்றால் என்ன?

தாய் : நாம் அனைவரும் நம் குடும்பத்தின் உறுப்பினராய் இருப்பது போன்றே, இந்நாட்டின் உறுப்பினரும் கூட, ஒரு நாட்டின் உறுப்பினர்களின், உறுப்பினர் உரிமையை ''குடியுரிமை'' என்று அழைக்கின்றோம்.

சரிதா : ஒரு நாட்டின் குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் என்ன?

தந்தை : ஒரு நாட்டின் குடியுரிமையை பெற்றுக் கொள்வதற்கு பொதுவாக இரண்டு வழி முறைகள் உள்ளன.

1) இயற்கை குடியுரிமை 2) இயல்பான குடியுரிமை

சரிதா : குடியுரிமை பெறும் முறை யாவை?

தந்தை : பின்வரும் முறைகள் மூலம் குடிமக்கள் ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெறலாம்.

1) **பிறப்பால் :** ஒரு நபர் எந்த நாட்டில் பிறக்கிறானோ அல்லது பிறக்கிறாளோ அந்த நாட்டின் குடியுரிமையை பெறுகிறார். அத்தகையவர்களுக்கு அவர்களின் பெற்றோரின் தேசியத்தைக் குறித்து கருதாமல் பிறப்பால் குடியுரிமை வழங்கப்படும்.

ஒரு நாட்டின் குடியுரிமை பெற பிறப்பு ஒரு முக்கிய காரணமாகும். உதாரணமாக : ஜனவரி 26, 1950 அன்று அல்லது அதற்குப் பின்னர் இந்தியாவில் பிறந்தவர், இந்திய குடிமகன் ஆவார். ஏனெனில் இந்நாளில் சுதந்திர இந்திய, தனது அரசியலமைப்பை நடை முறைக்கு கொண்டு வந்தது.

© KTBS NOT TO BE REPUBLISHED

2) **வம்சாவளியின் மூலம் :** இந்த முறையின் படி ஒருவர் தனது பெற்றோர் எந்த நாட்டிற்குரியவர்கள் என்ற அடிப்படை காரணமாக, குடியுரிமை பெறுகின்றார். உதாரணமாக, ஜனவரி 26, 1950 அன்று அல்லது அதற்குப் பின்னர் இந்தியாவிற்கு வெளியே, இந்தியக் குடும்பங்களில் பிறந்தவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படுகின்றது. இவ்விரண்டு முறைகளும் இயல்பான குடியுரிமை என்று அழைக்கப்படுகின்றன.

3) **பதிவு மூலம் :** எந்தவொரு நாட்டின் குடியுரிமையும் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் விண்ணப்பித்து, பதிவு செய்வதன் மூலம் பெறலாம். ஒவ்வொரு நாடும் விண்ணப்பிக்க சில நிபந்தனைகளை விதிக்கின்றன உதாரணமாக இந்தியாவில் குறைந்தது 5 ஆண்டுகள் காலம் வசிப்பவர்கள் பதிவு செய்வதன் மூலம் குடியுரிமை பெறலாம் இம்முறையை இயற்கை (அங்கரிக்கப்பட்ட) இயல்பான குடியுரிமை என்று அழைக்கப்படுகின்றது.

@KTBS NOT TO BE REPUBLISHED

சரிதா : அம்மா எத்தகைய சூழ்நிலைகளில் ஒரு குடிமகன் தன் நாட்டின் குடியுரிமையை இழக்கின்றார்?

தாய் : குடியுரிமையை இழப்பதற்கான சில வழிமுறைகள்: பின்வரும் வழிமுறைகளால் ஒரு நாட்டின் குடியுரிமையை இழக்க நேரிடுகிறது.

1) **துறத்தல் / தன்னலமறுப்பு (Renunciation) :** வேறொரு நாட்டின் குடியுரிமையைப் பெறும் எந்தவொரு இந்தியக் குடிமகனும், தானாக முன் வந்து பதிவு செய்து அறிவிப்பதன் மூலம் இந்திய குடியுரிமையை துறக்கலாம்.

2) **முடிவுறுத்தல் (Termination) :** இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் ஒரு அயல்நாட்டின் குடியுரிமையை பெற்றால், அவர் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் வரை காத்திராமல், அவரின் இந்தியக் குடியுரிமையை சட்டப்பூர்வமாக முடிவுறுத்தலாம்.

3) **மறுத்தல் (By Deprivation) :** ஒருவர் இந்தியக் குடியுரிமையை மோசடியாகப் பெற்றிருந்தால் அல்லது தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டாலோ அல்லது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கீழ்ப்படியால் இருந்தாலோ, இந்திய அரசு குடியுரிமை ரத்து செய்வதன் மூலம் அவருக்கு /அவருடைய குடியுரிமையை மறுக்கலாம். இது கட்டாயமாக மறுக்கப்படும்.

தந்தை : மகளே! ஒரே நேரத்தில் இரு நாடுகளின் குடியுரிமை பெறுவது சாத்திமற்றது.

சரிதா : அப்பா, நான் இந்தியாவை நேசிக்கிறேன், இந்திய குடிமகளாகவே இருப்பேன்.

தந்தை : மிக்க நன்று, அம்மா, வா அரண்மனைக்குள் சென்று சுற்றிப் பார்க்கலாம்.

குடிமகனின் பண்புகள்



ஒவ்வொரு குடிமகனுக்கும் தன் நாட்டின் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடுவது, அரசு பணியாற்றுவது, பாதுகாப்பு படையில் சேர்வது போன்ற உரிமைகள் உண்டு. இதனுடன் அவனால் நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமைகள் உள்ளன இவை கடமை மட்டுமல்லாமல் ஒரு குடிமகனின் பண்புகளாகும்.

NOT TO BE PUBLISHED @KTBS

குடிமகனின் பண்புகள்

1. அரசியலமைப்பு, தேசியக் கொடி மற்றும் தேசிய கீதத்தை கௌரவித்தல் மற்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் செய்த தியாகங்களுக்கு மதிப்பளித்தல்.
2. அறிவியல் மனப்பான்மை, மனிதநேயம் சீர்திருத்த உணர்வு கொண்டிருத்தல்.
3. அரசியலமைப்பிற்கு கீழ்படிந்து, அதன் நோக்கங்களுக்கு மதிப்பளித்தல்.
4. தேர்தலில் வாக்களித்தல்.
5. மொழி, மதம், சாதி வேறுபாடின்றி அனைவரையும் சகோதரர்களாகக் காணுதல்.
6. நாட்டிற்கு ஆபத்து நேரிடும் சமயங்களில், பாதுகாப்பு பணியில் ஈடுபடுதல்.
7. தவறாமல் வரி செலுத்துதல்.
8. சுற்றுச் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு.
9. பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் வன்முறை சிந்தனயை தவிர்த்தல்.
10. மூத்த குடிமக்களுக்கு உதவுதல்.
11. ஒவ்வொரு தாய் / தகப்பன்மாரும், 6 - 14 வயதுக்குப்பட்ட தங்கள் குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் வாய்ப்பளிக்க வேண்டும்.

NOT TO BE REPUBLISHED
© KTBS

அறிந்து கொள்ளுங்கள் :

- நம் நாடு ஒரே குடியுரிமை கொண்ட நாடாகும். மாநில வாரியாக குடியுரிமை இல்லை.
- குடியுரிமை என்பது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மேலும் பொதுவாழ்வில் குடிமக்கள் ஆற்றக்கூடிய கடமைகள் பற்றி விவரிக்கின்றன அனைவரும் குடியுரிமை பற்றி அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

பயிற்சிகள்

I. பொருத்தமான சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. குடியுரிமை பெற்றுக் கொள்ளும் 2 பொதுவான முறைகள் .... மற்றும் .... ஆகும்.

2. குடியுரிமையை தானாக முன்வந்து துறப்பதை .... என்பர்.

3. இந்தியாவில் .... குடியுரிமை முறை உண்டு.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க.

4. குடிமகன் என்று யாரை அழைப்பர்?

5. நீ ஒரு இந்தியக் குடிமகனா ? எவ்வாறு?

6. குடியுரிமையை பெற்றுக் கொள்ளும் இரண்டு வழி முறைகளை கூறுக.

7. ஒரு நல்ல குடிமகனின் பண்புகள் யாவை?

8. நீங்கள் முதியோர்களுக்கு எவ்வகைகயில் உதவிகள் புரியலாம்?

©KTBS NOT TO BE REPUBLISHED

பாடம் 8	நமது அரசியலமைப்பு

S3S5E7

பாடப்பொருள் அறிமுகம்

இப்பாடத்தில் நமது அரசியலமைப்பின் பொருள், முக்கியத்துவம், அமைப்பு மற்றும் அதன் தனிப்சிறப்புகளைக் கொண்டு வடிவமைக்ப்பட்டுள்ளன.

திறன்கள் :

1. நமது அரசியலமைப்பின் பொருள் மற்றும் அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளுதல்.
2. அரசியலமைப்பு, அதன் முன்மொழிதலின் முக்கியத்துவத்தைப் போற்றுதல்.
3. இந்திய நாட்டு அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்களை அறிந்துக் கொள்ளுதல்.
4. இந்திய அரசியலமைப்பு கட்டமைப்பு பணியில் பங்கேற்ற மதிப்பிற்குறியவர்களைப் பற்றி அறிதல்.
5. 'குடியரசு' என்ற கருத்தை அறிந்து கொள்ளுதல்.
6. அன்றாட வாழ்வில் மதச்சார்பின்மை கொள்கையின் விழுமியங்களை கடைபிடித்தல்.
7. அரசியலமைப்புச் சட்டத்திற்கு மதிப்பளித்தல் மற்றும் அதன் நற்கருத்துக்களை ஏற்றுக் கொண்டு பின்பற்றுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

அரசாங்கம் என்றால் என்ன? குடிமக்களின் நல்வாழ்விற்கு, நாட்டில் ஒழுக்கம், அமைதி, முறையான நிர்வாகம், பாதுகாப்பு, பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூகநீதி போன்றவற்றை நிலைநாட்டவும், முறையான நிர்வாகம் அமைப்பு அவசியம் தேவை. அத்தகைய அமைப்பினை 'அரசாங்கம்' என்று அழைப்பர்.

அரசியலமைப்பின் பொருள் மற்றும் முக்கியத்துவம்

அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் மிக முக்கியமான அடிப்படை சட்டமாகும். இந்த ஆவணம் நாட்டின் நிர்வாகத்திற்கு தேவையான கட்டமைப்பை வழங்குகின்றன. இது அரசாங்கத்தின் அங்கங்களாகும். இவை அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கின்றன. அரசியலமைப்பில் குடிமக்களின் உரிமைகள்

மற்றும் கடமைகள் பற்றின குறிப்பு உள்ளன.தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து அரசாங்கங்களும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு செயலாற்ற வேண்டும்.

அரசியலமைப்பின் முக்கியத்துவம்: ''அரசியலமைப்பு'' நாட்டின் அடிப்படை சட்டம் என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அனைவரும் அரிசியலமைப்பு சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள் ஆவர். ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள். அரசு அதிகாரிகள் என அனைவரும் அரசியலமைப்பை நிலைநிறுத்தக் கடமைப்பட்டவர்கள்.

1) அரசியலமைப்பு மக்களின் இலட்சியங்களையும், அவாக்களையும் பிரதிபலிக்கின்றன.

2) 'அரசியலமைப்பு' ஒரு நல்லரசை நிறுவ வழி வகுக்கின்றன.

3) இது அரசாங்கத்தின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் சீர்ப்படுத்துகின்றன.

4) சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கையை நிலைநாட்டி. குடிமக்களின் சட்ட உரிமைகளைப் பாதுகாக்கின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

செயல்பாடு: டாக்டர் அம்பேத்கர் என்பவர் யார்? இன்றும் நாம் ஏன் அவரை நன்றி உணர்வோடு நினைவு கூறுகின்றோம் என்பதை குறித்து குழுவில் கலந்துரையாடவும்

இந்திய அரசியலமைப்பின் உருவாக்கம்

இந்திய அரசியலமைப்புச்சட்டம் 'அரசியலமைப்பு வரைவு குழு' என்ற சிறப்பு ஆலோசனைக் குழுவினரால் உருவாக்கப்பட்டது. அக்குழுவின் உறுப்பினர்கள் தங்களது இரண்டாவது அமர்வில், டாக்டர் பாபு ராஜேந்திர பிரசாத்தை தலைவராகத் தேர்ந்தெடுத்தனர்.

1946 இல் நடைப்பெற்ற, முதல் அமர்வில் அரசியல் நிர்ணய சபையில் 299 உறுப்பினர்கள் இருந்தனர்.

அரசியலமைப்பு வரைவுக் குழு, அதன் பணிகளை விரைவுபடுத்தும் நோக்ககுடன், சுமார் 22 குழுக்களை அமைத்தன. அரசியலமைப்பின் வரைவு நகலைத் தயாரிப்பதற்காக அரசியலமைப்பு வரைவுக் குழு ஒன்றை நியமித்தது. டாக்டர் பி.ஆர். ஆம்பேத்கரை இக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். சர்தார் வல்லபாய் படேல் தலைமையில்

அடிப்படை உரிமைகளுக்கான ஆலோசனைக் குழு என்னும், ஜே.பி. கிருபாலனியின் தலைமையில் அடிப்படை உரிமைகளுக்கான துணை குழுவும் உட்பட பல குழுக்கள் அமைக்கப்பட்டன. இளவரிசி அம்ரித்கவுர், லீலாராய், மாலதி சவுத்ரி, சரோஜினி நாயுடு, பேகம் ஐஜாஜ் ரசூல், விஜயலட்சுமி பண்டிட், தாக்ஷாயினி வேலாயுதன் உள்ளிட்ட 15 மகளிர் உறுப்பினர்களும், கர்நாடகத்தைச் சார்ந்த எஸ். நிஜலிங்கப்பா, கெங்கல் ஹனுமந்தையா உட்பட பலர் அரிசியலமைப்பு சட்டம் உருவாக்கத்தில் பங்காற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இந்திய அரசியலமைப்புக் குழுவில் பங்குபெற்ற மகளிர் உறுப்பினர்கள்

© NOT TO BE REPUBLISHED

- சட்டமன்ற உறுப்பினர்கள், அரசியலமைப்பு வரைவை ஆய்வு செய்த பின்னர் அதில் 2473 திருத்தங்களை பரிந்துரைத்தனர். சட்டமன்றங்கள், அரசியலமைப்பு சட்ட வரைவு மற்றும் திருத்தங்கள் குறித்து அரசியல் நிர்ணய சபையில் விரிவாக விவாதிக்கப்பட்டன. இவ்வாறு, அரசியலமைப்பை இறுதியாக முடிவு செய்ய சுமார் இரண்டு ஆண்டுகள், 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் ஆனது.
- டாக்டர் அம்பேத்கர் 15.08.1947 முதல் 6.10.1951 வரை நாட்டின் சட்ட அமைச்சராக இருந்தார்.

ஜனவரி 26, 1950 அன்று ‘அரசியலமைப்பு சட்டம்’ நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பு இந்தியாவை ‘குடியரசு’ நாடாக அறிவித்தது. இந்நாளை ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினமாக அனுசரிக்கப்பட்டு தேசிய விழாவாக கொண்டாடப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26 ஆம் தேதி அரசியலமைப்பு தினமாக கொண்டாடுகின்றோம்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு. பொ.சா. 1951-52 ஆம் ஆண்டு முதன் முதலில் பொதுத் தேர்தல் நடைபெற்றன. முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தில் (பார்லிமெண்டில்), ராஜ்யசபா (நாடாளுமன்றம்) மற்றும் லோக்சபா (மக்களவை) என இரு அவைகள் உள்ளன. இது பொ.சா. 1952 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.

குடியரசு தின அணிவகுப்பு, புதுதில்லி

@KTBS NOT TO BE REPUBLISHED

நமது அரசியலமைப்பின் சட்டப்புத்தகத்தின் அளவு:

நமது அரசியலமைப்பின் அளவு : நமது அடிப்படை அரசியலமைப்பில் 395 விதிகளையும், 22 பிரிவுகள், 8 பின்னிணைப்புகளை கொண்டதாகும். 2023 ன் செப்டம்பர் வரை அரசியலமைப்பில் 106 முறை திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆகவே நமது அரசியலமைப்பில் 471 கட்டுரைகள், 25 பிரிவுகள் மற்றும் 12 பின்னிணைப்புகள் உள்ளன.

முகவுரை

அரசியலமைப்பின் தொடக்கத்தில் முன்மொழிவு வடிவில் ஒரு முகப்புரை உள்ளது. அரசியலமைப்பின் உயிர்நாடி போன்றுள்ள இந்த முகப்புரை இந்தியர்களின் இலட்சியங்களையும், அவாக்களையும் பிரதிபலிக்கின்றன. நீதி, சுதந்திரம், சமத்துவம், சுய கௌரவம், சகோதரத்துவம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு போன்றவைகள் இதன் தத்துவங்கள் ஆகும்.



THE CONSTITUTION OF INDIA

PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA,
having solemnly resolved to constitute India into a
SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC
and to secure to all its citizens;
JUSTICE, social, economic and political;
LIBERTY of thought, expression, belief, faith and worship;
EQUALITY of status and of opportunity;
and to promote among them all
FRATERNITY assuring the dignity of the individual and the unity and integrity of the Nation;
IN OUR CONSTITUENT ASSEMBLY
this twenty-sixth day of November, 1949, do
HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

© KTBS NOT TO BE REPUBLISHED

அரசியலமைப்பு சிறப்புத் தன்மைகள்

1. **எழுதவடிவ அரசியலமைப்பு (Written Constitution) :** இந்திய அரசியலமைப்பானது, எழுதப்பட்ட அரசியலமைப்பாகும். உலகின் மற்ற அரசியலமைப்புகளை விட நீண்டதும், விரிவானதுமாகும். அரசாங்கத்தின் அங்கங்களான சட்டமன்றம், நிர்வாகம் மற்றும் நீதித்துறை போன்ற அரசியலமைப்பு, அதிகாரங்கள் மற்றும் நோக்கம் ஆகியவற்றைக் கூறுகின்றது. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இரண்டிற்கும் அரசியலமைப்புச் சட்டம் ஒன்றேயாகும்.

2. **குடியரசு :** அரசியலமைப்பு இந்தியாவைக் 'குடியரசு நாடு' என்று அறிவிக்கின்றது. 'குடியரசு' என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவர்களின் அமைப்பாகும். குடியரசு நாட்டில், மன்னராட்சி

இல்லை, மாறாக குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஆட்சி செய்யப்படும். இந்தியாவும் அத்தகைய அரசியல் அமைப்பை கொண்ட ஒரு ‘ஜனநாயகக் குடியரசு’ நாடாகும்.



டா. பாபு ராஜேந்திர பிரசாத் அரசியலமைப்பு வரைவு குழுவின் தலைவர்.

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்

டா. பி.ஆர் அம்பேத்கார் அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவர்.

ஜவஹர்லால் நேரு இந்தியாவின் முதல் பிரதமர்

NOT TO BE REPUBLISHED @KTBS

3. **அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளின் குறிப்புகள் :** ‘அரசியலமைப்பு’ குடிமக்களுக்கு ஆறு அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளன. அவற்றை குறைக்க எந்த ஒரு மாநிலமும் சட்டம், ஒழுங்குமுறை அல்லது முயற்சியையும் உருவாக்கக் கூடாது. குடிமக்களின் உரிமைகள் மீறப்படும் நேரங்களில் அவற்றை பாதுகாக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு உண்டு. குடிமக்கள் உரிமைகளை தங்கள் விரும்பம் போல் செயல்படுத்தி, சமூக அமைதி மற்றும் சட்ட ஒழுங்கை சீர் குலைக்கக் கூடாது. அரசியலமைப்பில் குடிமக்கள் பின்பற்ற வேண்டிய 11 அடிப்படை கடமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

4. **மதச்சார்பின்மை கொள்கைக்கு அங்கீகாரம் :** அரசியலமைப்பு மதச்சார்பின்மை கொள்கையை (Secularism) நிலை நிறுத்துகின்றன. அரசாங்கம் மதத்தின் பெயரால் பாகுபாடின்றி, அனைத்து மதங்களையும் சமமாக கண்நோக்குவதே மதச்சார்பின்மை கொள்கையாகும். அனைத்து மதங்களுக்கிடையில் சமத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். அரசு எந்தவொரு மதத்தையும் தேசிய மதமாக கருதுவதில்லை. மதச்சார்பின்மை கொள்கை என்பது

அனைவருக்கும் வழிபாடு மற்றும் நம்பிக்கைக்கு சுதந்திரம் அளித்துள்ளன. சமூதாயத்தின் நலன்களுக்காக மத சுதந்திரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் மதச்சார்பறற விழிமியங்களை மேம்படுத்துவதற்கும் அரசுக்கு அதிகாரம் உள்ளது.

5. **சுதந்திரமான நீதிமன்ற அமைப்பு (தற்சார்பு நீதிமன்ற அமைப்பு):** இந்திய நீதிமன்ற அமைப்பானது சுயாதீனமானது மற்றும் போதுமான அதிகாரங்கள் கொண்டுள்ளன. நீதித்துறையில் சட்டமன்றமோ, பாராளுமன்றமோ தலையிடக்கூடாது. சட்டத்தின் முன் அனைவரும் சமம்; என்ற கொள்கை, அனைவருக்கு நீதி கிடைக்கவேண்டும், என நீதித்துறை நிலை நாட்டுகின்றன. குடிமக்கள் அனைவருக்கும் நீதியை பெற, அதை அணுகுவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது, எனவே அனைவரும் அதற்கு கட்டுப்பட வேண்டும்.

6. **உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை :** உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை என்பது மக்களாட்சியின் அடிப்படை உரிமையாகும். உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமை என்பது 18 வயதிற்கும் மேற்பட்ட அனைத்து குடிமக்களும், தேர்தலில் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் உரிமையாகும். அனைத்து குடிமக்களும் தங்கள் மன்சாட்சியின்படி வாக்களிப்பதின் மூலம் வலுவான அரசு தேர்ந்தெடுக்கப்படும். இக்காரணத்தால் நமது அரசியலமைப்பு வயது வந்தோர் வாக்குரிமையை உலகளவில் அங்கீகரிக்கின்றன.

7. **தீண்டாமை பின்பற்றுவதற்கு தடை :** பிறப்பின் அடிப்படையிலான தீண்டாமை, ஒரு சமூகக் கொடுமையாகும். எனவே தீண்டாமையால் வளர்ந்துள்ள சாதிச்சார்ந்த பாகுபாடுகளைக் களைந்து சமூக நீதியை நிலைநாட்டுவதே, நமது அரசியலமைப்பின் தலையாய முழக்கமாகும்.

8. **நல்லரசு நிறுவுதல் :** நல்லரசு (Welfare State) நிறுவுவதே இந்திய அரசியலமைப்பின் நோக்கமாகும்.

> அனைவருக்கும் சமூக மற்றும் பொருளாதார வாய்ப்பு, பாதுகாப்பு வழங்குவதே நோக்கமாகக் கொண்ட நாட்டை பொதுவாக ''நல்லரசு'' என்று அழைக்கப்படுகின்றன.

9. **தேர்தல் முறை :** உலகிலேயே இந்திய ஒரு மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். கடந்த ஏழு தசாப்தங்களாக பொதுவாக தேர்தல் அவ்வப்போது நடக்கின்றன. இக்காலகட்டத்தில் நாட்டில் மக்களாட்சி ஆழமாக வேரூன்றி உள்ளன.

© KTBS NOT TO BE REPUBLISHED

புதிய சொற்கள் :

அரசியலமைப்பு வரைவுக்குழு : சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பின் தோராய நகலைத் திருத்தியமைத்து உருவாக்கிய குழு.

கட்டுரை (Article): அரசியலமைப்பின் ஒரு பகுதி

ஜனநாயகம் : மக்களாட்சி

பயிற்சிகள்

I. பொருத்தமான சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக.

1. அரசியலமைப்பு வரைவு குழுவின் தலைவர் .... ஆவார்.
2. நமது அரசியலமைப்பு .... அன்று நடைமுறைப் படுத்தப்பட்டது.
3. பாராளுமன்ற ....மற்றும் .... என இரு அவைகளை கொண்டதாகும்.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க :

4. அரசியலமைப்பு என்றால் என்ன? இதனால் நமக்கு என்ன பயன்?
5. அரசியல் நிர்ணய சபையின் தலைவர் யார்?
6. அரசியலமைப்பை உருவாக்குவதில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் பங்கு என்ன?
7. குடியரசு என்றால் என்ன?
8. மதச்சார்பின்மை என்றால் என்ன?
9. அரசியலமைப்பு தினம் என்று கொண்டாடப்படுகின்றது?
10. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் பெண் உறுப்பினர்கள் பெயர்களை குறிப்பிடவும்.

III. குழுவில் கலந்துரையாடி விடையளிக்க :

11. அரசியலமைப்பு முகப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளைப் பற்றி கலந்துரையாடவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

செயல்பாடுகள் :

- நம் அரசியலமைப்பு அனைவருக்கும் உரிமைகள் மற்றும் கடமைகள். நமக்கு வழங்கியுள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானவைகள் எவைகள் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? என்பதை குழுக்களில் கலந்துரையாடி தங்களின் கருத்துக்களை புள்ளி விவரங்களுடன் குறிப்பிடுடவும்.
- அரசியல் நிர்ணயச் சபை உறுப்பினர்களின் படங்களை சேகரிக்கவும்.

பாடம் 9

அரசாங்க வகைகள்

U8X6P4

இப்படத்தின் மூலம் கீழ்வரும் திறன்களை அறியலாம் :

1. அரசாங்கம் என்பதன் பொருளை அறிதல்.
2. மக்களாட்சி அரசினைப் பற்றி அறிதல்.
3. வல்லாண்மை அரசினைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
4. அரசாங்கத்தின் மூவகைகள் மற்றும் அவற்றின் வேறுபாடுகளை குறிப்பிடுதல்.

அரசாங்கம் என்பதன் பொருள் :

ஒரு நாட்டின் குடிமக்கள், நிம்மதி, அமைதி மற்றும் மகிழ்ச்சியாக வாழ, முறையான ஆட்சி அவசியம் ஆகும். 'மக்களாட்சி' என்பது முறையான அரசியல் விதிமுறைகளை கொண்ட ஆட்சி முறை ஆகும். குடிமக்களின் நலனுக்காக சட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதற்கும், அமைதி மற்றும் ஒழுங்கு முறையை காப்பாற்றுவதும் மக்களாட்சியின் கடமையாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

அரசாங்க முறைகள்

1. மக்களாட்சி அரசாங்கம் (Democratic Government)
2. சர்வாதிகார அரசாங்கம் (Dictatorial Government)
3. பொதுவுடைமை/கம்யூனிஸ்ட் அரசாங்கம் (Communist Government)

1. மக்களாட்சி அரசாங்கம் : மக்களாட்சி என்பது அரசாங்க ஆட்சியின் ஒரு முறையாகும். இங்கு மக்கள் தேர்தல் மூலம் தங்கள் பிரிதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து நடத்தும் அரிசியல் அமைப்பை மக்களாட்சி என்பர். மக்கள் ஆதரவுடன், மக்களால் ஆளப்படுவதால் மக்கள் அரசு என்றும் அழைக்கப்படுகின்றது. குடிமக்கள் தங்கள் 'பிரிதிநிதிகளைத்' தேர்ந்தெடுக்கும் உரிமையே மக்களாட்சியின் உயிர் நாடியாகும். மக்களாட்சி என்பது குடிமகனுக்கே உரிய தனிமனித உரிமை, கருத்தினை வெளிபடுத்தும் உரிமை, நிறுவன அமைப்புகளை நிலைப்படுத்தி குடிமக்களுக்கு கொண்டு சேர்க்கும்

அமைப்பாகும். அபிரகாம் லிங்கன் அவர்கள் ‘மக்களாட்சி’ என்பது மக்களால், மக்களுக்காக, மக்களுக்கான அரசு என்று கூறியுள்ளார்.

மக்களாட்சி உள்ள நாடுகள் : இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட உலகின் பெரும்பாலான நாடுகள் மக்களாட்சி முறையை பின்பற்றுகின்றன.



வாக்குச்சாவடி

NOT TO BE REPUBLISHED

2. **சர்வாதிகார அரசாங்கம் :** இவ்வகை அரசின் முழு அதிகாரமும் ஒரு தனிமனிதன் அல்லது ஒரு சிறு குழுவை மையமாக கொண்டதாகும். சர்வாதிகார அரசு என்பது யாருக்கும், எதற்காகவும் கட்டுபாடுகளுமின்றி தனி மனிதன் அல்லது ஒரு அமைப்பின் கருத்தையே சார்ந்ததாகும். மக்களாட்சியின் சுதந்தரத்தை நோக்கும் போது சர்வாதிகார அரசு அதற்கு எதிர் மறையாக உள்ளன. சர்வாதிகார அரசு தன் விருப்பம்படி ஆட்சி செய்யலாம். இத்தகைய் ஆட்சியில், நீதி, மதம், பொருளாதாரம், சமூக கொள்கைகள் இவை அனைத்தும் சர்வாதிகார அரசு கட்டளை தீர்மானிக்கப்படுகின்றன. இவைகளை எதிர்த்து கேள்வி கேட்பதற்கு, குடிமக்களுக்கு உரிமையில்லை.

சர்வாதிகார ஆட்சிக்கு ஹிட்லரின் ஆட்சியே உதாரணமாகும்

3. **பொதுவுடமை/கம்யூனிஸ்ட் அரசாங்கம் :** சமுதாயத்தின் விளைச்சல்களின் (உற்பத்தி) மூலங்கள் நிலம், உழைப்பாளர்களின் உழைப்பு, முதலீடு இவையனைத்தும் சமூகதாயத்திற்கே உரியது என்றும் தன் சக்திக்கேற்ப உழைத்து, தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்தும் ஆட்சி முறையை பொதுவுடமை அரசு என்கிறோம். இதில் தனியார் சொத்துக்களுக்கு அனுமதி இல்லை. சமத்துவ கொள்கையை அடிப்படையாக கொண்ட பொதுவுடமை அரசாங்க சமுதாயத்தில் ஏழை - பணக்காரன் என்றும் உயர்ந்தவர்கள் - தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாடற்ற மனித சார்பமைப்பாக்கும். தனியார் சொத்துக்கள், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளியை படிப்படியாக அதிகரித்து சமத்துவமின்மையை உருவாக்குகின்றது. இறுதியில் பெரும்பாலும் உழைக்கும் வர்க்கமே வெற்றிக் கொள்வார்கள். மேலும் பாகுபாடற்ற சமத்துவ சமுதாயம் உருவாகும். இதில் அனைவருக்காகவும் உழைக்கும் கலச்சாரம் உருவாகி, அனைவரும் மகிழ்வுடன் வாழும் அமைப்பாக உருவாகும், ஜெர்மன் தத்துவஞானி கார்ல் மார்க்ஸ் என்பவர் இம்முறையை முன்மொழிந்தவர் ஆகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. விடுப்பட்ட இடங்களை தகுந்த சொற்களால் நிரப்புக :

1. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிநிதிகளின் ஆட்சியினை ………… அரசாங்கம் என அழைப்பர்.
2. ''நாம் அனைவரும் ஒன்றே'' என்ற உணர்வு ……………… ஆகும்.

3. தனி நபர் அல்லது ஒரு குழுவின் கருத்தை கொண்ட ஆட்சியே .... அரசாங்கமாகும்.

4. பொதுவுடமை அரசாங்க முறையை முன்மொழிந்தவர் .... ஆவார்.

II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக :

5. அரசாங்கம் என்றால் என்ன?

6. சர்வதிகார அரசாங்கம் என்றால் என்ன?

7. பொதுவுடைமை அரசாங்கம் என்றால் என்ன?

III. குழுவில் கலந்துரையாடி, விடையளிக்க :

8. இந்தியா ஒரு மிகப்பெரிய மக்களாட்சி நாடாகும். இங்கு மக்களாட்சியின் அடிப்படைக் கொள்கைகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை ஆசிரியரின் துணையுடன் கலந்துரையாடவும்.

9. ஒரு குடிமகனாக நீங்கள் மக்களின் பிரதிநிதியாக மாறினால் எவ்வாறு ஆட்சி செய்வீர்கள் என்பதை குறித்து வகுப்பில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

10. நீங்கள் விரும்பும் அரசாங்க முறை எது? நாட்டின் முன்னேற்றதிற்கு அது எவ்வாறு பயனளிக்கும் என்பதை குறித்து எழுதுக.

11. சர்வாதிகார அரசாங்கம் பற்றிய கூடுதல் தகவல்களை சேகரிக்கவும்.

செயல்பாடுகள் :

- மக்களாட்சி, சர்வாதிகார மற்றும் பொது வுடமை அரசாங்கங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை பட்டியலிடவும்.
- மக்களாட்சியின் குடிமக்களே, பிரதிநிதிகள் - இக்கூற்றை ஏற்றுக் கொள்வீர்களா? என்பதை குறித்து கலந்துரையாடவும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

புவியியல்

பாடம்
10

கோளம் மற்றும் வரைப்படங்கள்

X6I3K7

பாட அறிமுகம்

புவியியலைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதற்கு கோளம் (Globe) மற்றும் வரைப்படங்கள் (maps) சிறந்த கற்றல் சாதனங்களாகும். பூமியின் மாதிரியான கோளம் (Globe), அதைப் பற்றின பொருள் மற்றும் பயன்பாடுகளை அறிந்து கொள்ளுதல். வரைப்படங்களின் (maps) பொருள், வகைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகளை அறிந்து கொள்ளுதல். வரைப்படங்களை தயாரிக்கவும், படித்தறியவும் அவசியமான முக்கிய குறியீடுகள் பற்றின விவரங்களை இப்பாடத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED

திறன்கள் :

1. கோளம் மற்றும் அதன் சிறப்பான பயன்பாடுகளைப் புரிந்து கொள்ளுதல்.
2. வரைப்படங்களின் வகைகள் மற்றும் அவைகளைத் தயாரிப்பதற்கு அவசியமான முக்கிய கூறுகளைப்பற்றி புரிந்து கொள்ளுதல்.
3. வரைப்படங்களில் முக்கியமாக காணப்படக்கூடிய அம்சங்கள் மற்றும் அவற்றின் பயன்களை அறிந்து கொள்ளுதல்.
4. வரைப்படங்களில் உள்ள பூகோளக் சின்னங்கள் (அடையாளங்கள்) மற்றும் குறியீடுகளை அறிந்து கொள்ளுதல்.
5. வரைப்படங்களை படித்தறியும் திறனை அறிந்து கொள்ளுதல்.

1. கோளம் (Globe)

பொருள் : அறிவியல் பாடத்தில் பூமியின் வடிவம் மற்றும் அளவைப் பற்றி படித்தறிந்துள்ளீர்கள். பூமி ஜியாட் (Geoid) வடிவத்தில் (ஆரஞ்சுபழம் போன்று) உள்ளது. அதனை கோளம் (பூமி உருண்டை) மாதிரியை கொண்டு நிருபிக்கலாம். செயற்கைக் துணைக் கோள்களிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் பூமியின் உண்மையான வடிவத்தை

காண்பிக்கின்றன. ஆனால் அவை பூமியின் ஒரு பகுதியை மட்டுமமே காண்பிக்கின்றன. பூமியின் மாதிரியான கோளம் (globe), அதனை சுழற்றுவதால் பூமியை முழுமையாகவும், அதன் அனைத்துப் பகுதிகளையும் காணலாம்.

ஒரு கோளத்தின் சிறப்பு அம்சங்கள் :

கோளம் (globe), இது பூமியின் ஒரு சிறிய மாதிரியாகும். இது பூமியின் உண்மையான கோள வடிவத்தை காட்டுகின்றன. மேலும் வரைப்படத்தில் காணப்படுவது போல தட்டையானது அல்ல, மேலும் பூமியின் பல அம்சங்களைப் பற்றின தகவல்களை நமக்கு அளிக்கின்றன. இது ஒரு எளிய கற்றலின் கருவியாகும். இம்மாதிரியை மேஜையின் மீது வைத்து சுழற்றி பூமியின் வெவ்வேறு பூகோள அமைப்புகளை அறிந்து கொள்ளலாம்.

கோளம் (Globe)

பயன்கள் :

அ. கோளம் பூமியின் வடிவத்தை அறிந்து கொள்ள உதவுகின்றன.

ஆ. பூமியில் உள்ள கண்டங்கள், சமுத்திரங்கள், மற்றும் கடல்கள் இருப்பிட அளவு, வடிவம் ஆகியவற்றை அறிய உதவுகின்றன.

இ. பூமியின் அட்சரேகை மற்றும் தீர்க்கரேகைகள் மூலம், இடங்களின் சரியான நிலைகள் மற்றும் அரசியல் எல்லைகளையும் கண்டறிய உதவுகின்றன.

பூமியின் செயற்கைக் கோள் படம்

ஈ. நன்கு வடிவமைக்கப்பட்ட ஒரு கோளத்தின் மூலம் பூமியின் மீதுள்ள வெவ்வேறு பூகோள அமைப்பு, பூமி அச்சின் சாய்வு, பூமியின் இயக்கம், தினசரி மற்றும் ஆண்டு சுழற்சி மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகளை அறிந்து கொள்ளுவதற்கு பயன்படுகின்றன.

© KTBS NOT TO BE REPUBLISHED

எடுத்துக்காட்டு: பகல் மற்றும் இரவு மற்றும் பருவகாலங்கள்.

உ. கோளத்தின் மூலம் பூமியின் மீதுள்ள பல்வேறு அமைப்புகளான மலைகள், பீடபூமி, சமவெளி, பாலைவனங்கள், தீவுகள், நதி, புல்வெளிகள் மற்றும் காடுகள் போன்றவற்றின் தகவல்கள் அறிந்து கொள்ளலாம்.

2. வரைப்படங்கள் (maps)

கோளம் (globe) நமக்கு பூமியைப் பற்றின தகவல்களை மட்டுமே அளிக்க இயலும், ஆனால் ஒரு இடம், மாநிலம், நாடு மற்றும் பல்வேறு பூகோள அமைப்புகளின் விவரங்களைப் அறிவதற்கு வரைப்படங்கள் அவசியம் தேவைப்படுகின்றன.

பூமியின் முழுமையான பாகம் அல்லது அதன் ஒரு பகுதியின் பாகத்தை சமதளத்தின் மேற்பரப்பில் அளவின் (Scale) படி வடிவமைப்பதை வரைப்படம் (map) என்பர். வரைப்படங்கள் வடிவமைக்கும் அறிவியல் மற்றும் கலையை ‘‘வரைப்படக் கலை’’ (Cartography) என்று அழைக்கப்படுகின்றது. பல்வேறு வரைப் படங்களால் தொகுக்கப்பட்ட புத்தகத்தை ‘‘அட்லாஸ்’’ (Atlas) அல்லது ‘‘வரைப்பட புத்தகம்’’ என்பர்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

வரைப்படங்களின் வகைகள்

வரைப்படங்கள் அவைகளின் அளவு மற்றும் நோக்கங்கள் போன்ற ஆதாரத்தின் அடிப்படையில் பல வகைகளாகப் பிரிக்கப் படுகின்றன.

1. **அளவின் அடிப்படை வரைப்படங்கள் :** அளவுகளின் அடிப் படையில் வரைப்படங்கள் இரு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன.



பெரிய அளவிலான வரைப்படம்

அ. பெரிய அளவிலான வரைப்படங்கள் (Large scale maps)

இந்த வரைப்படங்கள் சிறிய பிரதேசங்களை குறிக்கின்றன. இவை வருவாய் வரைபடங்கள் மற்றும் இட வடிவமைப்பு வரைப்படங்கள் என வகைப்படுத்தலாம். வருவாய் வரைப்படங்கள் தனிப்பட்ட நபரின் சொத்து பற்றின தகவல்களை அளிக்கின்றன. புவியியல் வரைபடங்கள் இடம் மற்றும் பகுதியைப் பற்றின கூடுதல் தகவல்களை அளிக்கின்றன.

ஆ. சிறிய அளவிலான வரைப்படங்கள் (Small scale maps)

இவைகள் மிகப் பரந்தளவிலான பகுதினைக் குறிப்பிட்டு காட்டுகின்றன. உதாரணம் : உலகம், கண்டங்கள், நாடுகள் முதலியன. இவைகள் வரைப்படங்கள் (maps) மற்றும் அட்லாஸ் புத்தகங்கள் என இருவகைப்படும்.



சிறிய அளவிலான வரைப்படம்

NOT TO BE REPUBLISHED @KTBS

பூமியின் வரைப்படங்கள், அட்லாஸை விடப் பெரியவை, அவைகள் வகுப்பறையில் போதிப்பதற்கு ஒரு கருவியாக பயன்படுத்தப்படுகின்றன. அவை அரசியல் பிரிவுகள், மேற்பரப்பு அம்சங்களை போன்ற பொதுவான மற்றும் முக்கியமான அம்சங்களைக் காட்டுகின்றன.

அட்லாஸ் வரைப்படங்கள் சிறியதாக இருப்பினும் அவை நமக்கு விரிவான தகவல்களை அளிக்கின்றன.

2. நோக்கங்களை ஆதாரமாகக் கொண்ட வரைபடங்கள்: (maps based on purpose)

இவைகள் தகவல்கள் ஆதாரமான வரைப்படங்கள். அவைகளைக் கீழ்காணுமாறு வகைப்பட்டுத்தப்பட்டுள்ளன.

அ. **இயற்கை வரைப்படங்கள் :** இவை இயற்கை அம்சங்களை சார்ந்தவையாகும். பூமியின் நில வடிவங்களான மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் ஆறுகள் போன்றவற்றை குறிப்பிட்டு காட்டுகின்றன.

ஆ. **அரசியல் வரைப்படங்கள் (political maps) :** இவை மாநிலம், நாடு, கண்டங்களுக்கு இடையிலான அரசியல் எல்லைகள் மற்றும் அவற்றின் நிலபரப்பைக் காட்டுகின்றன.

இ. **பங்கீடு வரைபடங்கள் (Distribution maps) :** இவ்வரைப்படங்கள் பூமியின் பயன்பாடு, வளிமண்டல வெப்பளவு, மழை, மக்கட் தொகை, இயற்கை தாவரங்கள், விளைப் பொருட்கள், கனிமங்கள், கைத் தொழில்கள், இரயில் பாதை, நிலவழிச் சாலைகள், நீர்வழி போன்ற பங்கீடுகளைப் பற்றி அறிந்து கொள்ள பயன்படுத்தப்படுகின்றன.

வரைப்படத்தின் அம்சங்கள் (Components of map)

நன்கு வடிவமைக்கப்பட்ட வரைப்படம் குறிப்பிட்ட தலைப்பு, மற்றும் சரியான அளவிலான அட்சரேகைகள், தீர்க்க ரேகைகள், திசைக் காட்டி குறியீடுகள் போன்ற தக்க தகவல்களை கொண்டதாக இருக்க வேண்டும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

1. **தலைப்பு (Title):** ஒவ்வொரு வரைபடமும், பொருத்தமான தலைப்புகளைக் கொண்டிருக்க வேண்டும். இது நமக்கு தேவையான உள்ளடக்க அம்சங்களை வெளிப்படுத்தும். உதாரணம்: இந்தியா-புவியியல் இயற்கை அம்சங்கள் அல்லது இந்தியா-அரசியல் முதலியன.
2. **அளவீடு (Scale):** இது பூமியின் இரு இடங்களுக்கு இடையே உள்ள தூரத்தை அறிய உதவுகின்றன. பூமியின் மேலுள்ள தூரத்திற்கும் வரைப்படத்தில் உள்ள தூரத்திற்கும் இடையிலான அளவை அளவீடு என்பர். வரைபடத்தில் இரண்டு இடங்கள் மிக அருகில் உள்ளன போன்று காணப்பட்டாலும், பூமியின் மேல் அவை வெகு தொலைவில் அமைந்திருக்கும்.
3. **அட்ச ரேகைகள் மற்றும் தீர்க்க ரேகைகள்:** இவைகள் கற்பனைக் கோடுகள் கொண்ட வலைப்பின்னால் ஆகும். வரைப்படத்தில் இடங்களின் இருப்பிடம், தூரம் மற்றும் திசைகளை குறிப்பிடுவதற்கு உதவுகின்றன.
4. **திசைகள் (Direction):** வரைப்படத்தில் வ(N) என்னும் எழுத்துள்ள அம்புக் குறியீடு, வடக்கு திசையை குறிக்கும், அம்பின் நுனி வடக்கு திசையைக் காட்டும். இக்குறியீட்டின் மூலம் வடக்கு திசையை அறிந்து கொண்டால் மற்றெல்லா திசைகளையும் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

5. **குறியீட்டு (Index):** வரைபடத்தில் சுட்டிக்காட்டுவதற்கும், குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படும் குறியீட்டை வரைப்படக் குறியீட்டு (map index) என்று அழைப்பர், இது வரைபடத்தின் அடிப்படை அம்சமாகும், வரைபடத்தில் காண்பித்துள்ள அனைத்து அம்சங்களையும் குறிக்கின்றன. குறியீட்டில் பல்வேறு வண்ணங்கள் மற்றும் பூகோள குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. எ.கா: நீல வண்ணம் நீர்ப் பகுதிகளையும், பச்சை வண்ணம் சமவெளிப் பிரதேசங்களைக் சுட்டி காட்ட பயன்படுத்தப்படுகின்றன.



வடக்கு திசை நிரூபித்தல்

வரைபடக் குறியீடு

வரைப்படங்களின் பயன்கள் : வரைபடங்கள் நமக்கு பலவகையில் பயனளிக்கின்றன.

- வரைப்படங்கள் நமக்கு நகரம், மாவட்டம், மாநிலம், நாடு, கண்டம் முதலியவைகளின் இடஅமைப்புகளை அறிந்து கொள்ள உதவுகின்றன.
- இயற்கை அமைப்புகளான மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் பாலைவனம், கடற்கரைப் பிரதேசம், தீவுகள் போன்றவைகளை சுட்டிக்காட்டுவதற்கு உதவுகின்றன.
- பிரதேசங்களின் முக்கிய போக்குவரத்து வழிகள் (சாலை, இரயில் பாதைகள், ஆகாய வழிகள்) போன்றவைகளை அறிந்து கொள்ள உதவுகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

- விளைப் பொருட்கள், கனிமங்கள், தொழிற்சாலைகள் முதலியவைகளின் விநியோகத்தைப் நாம் அறிந்து கொள்வதற்கு உதவுகின்றன.
- போர் மற்றும் பாதுகாப்பு நேரங்களில் இராணுவவீரர்களுக்கு பயனளிக்கின்றன.
- வரைப்படங்கள் பயணிகளுக்கு வழிகாட்டுகின்றன.
- வரைப்படங்கள், வகுப்பறை கற்றலுக்கு சிறந்த கற்றல் கருவிகளாகும். இவைகள் எளிதாக எடுத்துச் செல்ல கூடியவை.

பூவியியல் சின்னங்கள் (Geographical symbols)

ஒரு குறியீடு, ஒரு பொருளின் கற்பனை சின்னமாக உள்ளன. வரைப்படத்தில் பயன்படுத்தும் சின்னங்கள் உலககெங்கும் ஒரே மாதிரியானவைகள். சின்னங்கள் அளபறியா தகவல்களை அளிக்கின்றன.

வண்ணங்கள் : நீங்கள் வரைப்படத்தை காணும் போது பல்வேறு வண்ணங்களை காண்பீர்கள், இவ்வண்ணங்கள் வரைப்படங்களின் மேல் பல்வேறு இயற்கை அம்சங்களின் தகவல்களை குறிக்கின்றன. இயற்பியல் வரைபடத்தில் பயன் படுத்தப்படும் வண்ணங்கள் பின்வருமாறு.



வண்ணடையாளங்கள்

அ. நீல நிறம் : கடல், ஏரிகள் மற்றும் ஆறுகள் போன்ற நீர் நிலைகளை நீல நிறம் குறிக்கின்றன.

ஆ. பச்சை : சமவெளிகள் அல்லது தாழ்நிலங்களை குறிப்பது பச்சை நிறமாகும்.

இ. மஞ்சள் : உயரமான நிலப்பரப்பு அல்லது சமவெளியிலிருந்து உயரமான பகுதிகளை மஞ்சள் நிறம் குறிக்கின்றன.

ஈ. பழுப்பு நிறம் (Brown) : குன்றுகள், மலைகளின் தாழ்பகுதிகள் உயரமான மலைகளை குறிக்கின்றன.

NOT TO BE REPUBLISHED @KTBS

உ. அடர்பழுப்பு நிறம் (**Dark Brown**) : உயரமான மலைகளை குறிக்கின்றன.

ஐ. வெண்மை அல்லது ஊதாநிறம் - பனியால் சூழ்ந்த பிரதேசங்களை குறிக்கின்றன.

மேலும் அரசியல் வரைப்படங்களில் மாவட்டங்கள் அல்லது மாநிலங்கள் உடனடியாக அடையாளம் காண்பதற்கு பல்வேறு வண்ணங்களில் வரையப்பட்டுள்ளன.



புவியியல் சின்னங்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED

கோடுகள்: வரைப்படத்தின் மீது சாலை, இரயில் பாதை, விமானப்பாதை போன்ற வலைப் பின்னல்களைக் காட்ட பல்வேறு வகையான கோடுகளை பல்வேறு வண்ணங்களினால் வரையப்பட்டுள்ளன. கருப்பு வண்ணம் எல்லைகோடுகளையும், சிவப்பு வண்ணம் சாலைகளையும் குறிப்பதற்கு பயன்படுத்துகின்றனர்.

4. வரைப்படம் படித்தல்

வரைப்படங்களை படித்து, புரிந்து கொள்ள சில அம்சங்களை அறிந்திருக்க வேண்டும். ஒரு பொருள் கொண்ட சொல்லை உருவாக்க எழுத்துக்கள் அறிந்திருக்க வேண்டும், அதுப் போன்றே வரைப்படத்தை படித்தறிய பல்வேறு அம்சங்களை, கோடுகள் மற்றும் அடையாளங்கள் பற்றியும் அறிந்திருக்க வேண்டும்.

வரைப்படத்தைப் படிப்பது என்பது ஒரு திறமையாகும், நாம் அனைவரும் வரைப்படத்தின் மீதுள்ள இடம் மற்றும் பல்வேறு அம்சங்களை புரிந்து கொள்வதற்கு சில நிபுணத்துவம் மற்றும் பொதுவான திசைகள் கொண்டிருக்க வேண்டும். அவைகள் கீழ்க்காணுமாறு.



வரைபடம் படிக்கும் முறை

குறிப்பு: அளவின் படி (Scale) கலபுரகி மற்றும் பாலக் கோட்டிற்கு இடையிலான தூரம் 222 கி.மீ. ஆகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

1. **இருப்பிடம் அடையாளம் காணுதல்:** மேற்கண்ட இடங்களை அறிந்து கொள்ள நாம் அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

2. **திசைகளை அடையாளம் காணுதல் :** வரைப்படத்தின் மீது ஓரிடத்தினை அறிவதற்கு வடதிசையை நோக்கி முகம் காட்டியுள்ள அம்பு சின்னத்தை அறிந்துகொண்டால் மற்ற திசைகளை எளிதாக அடையாளம் காணலாம்.

3. **இடங்களுக்கு இடையேயுள்ள தூரத்தை அடையாளம் காணுதல்:** இரண்டு இடங்களுக்கு இடையிலான தூரத்தை அறிந்து கொள்ள வரைப்படத்தில் கொடுத்துள்ள அளவுகோல் உதவியாக இருக்கும்.

புதிய சொற்கள் :

மாதிரி கோளம் (குளோப்) வரைப்படம், பூகோள அமைப்பு, அட்லாஸ், அளவீடு, வரைபடக்கலை, குறியீடு / காட்டி, தலைப்பு, சாலை போக்குவரத்து.

நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் :

- பாபிலோனியாவில் (பொ.ச.மு. 2300) காணப்படும் வரைப்படம் மிகவும் பழமைவாய்ந்தவை. கிரேக்க நாட்டின் வான சாத்திர அறிஞர் கிளாடியஸ் டாலெமே (பொ.ச. 90-168) அவர்கள் முதன் முதலில் அட்லாஸ் தயாரித்தவர் ஆவார்.

- பரந்து விரிந்த பிரதேசங்களைக் காட்டும் வரைப்படங்கள் சிறிய அளவிலான பிரதேசங்களைக் குறிக்கும், சிறிய அளவிலான வரைப்படங்கள், பெரிய பிரதேசங்களைக் குறிக்கின்றன.

- புவியியல் சாத்திரம் படிப்பதற்கு வரைப்படங்கள் உதவுகின்றன. அவைகள் கற்றல் கருவிகளாகும்.

- பூமியின் மேல் சரியான தூரத்தை துல்லியமாக அறிய நாம் அளவீட்டை சென்டி மீட்டர்களை, கி.மீ. களுக்கு அல்லது அங்குலத்தை மைல்களுக்கு மாற்ற வேண்டும்.

- காந்த திசைகாட்டியில் உள்ள முள் எப்போதும் வடக்கு திசையையே சுட்டிக்காட்டும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. பொருத்தமான சொற்களால் விடுப்பட்ட இடங்களை நிரப்புக:

1. பூமியின் மாதிரியை .... என்று அழைப்பர்.
2. பல்வேறு வரைப்படங்களால் தொகுக்கப்பட்ட புத்தகத்தை .... என்பர்.
3. வரைப்படத்தில் சமவெளிகளை அடையாளம் காண .... வண்ணத்தில் குறிப்பிட்டுள்ளன.
4. பூமியின் மேல் .... மற்றும் .... என்ற கற்பனை கோடுகள் வரைப்பட்டுள்ளன.

II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க:

5. கோளத்தின் இரண்டு பயன்களைக் கூறுக.

6. வரைப்படம் என்றால் என்ன?

7. வரைப்படங்களின் வகைகள் யாவை?

8. வரைப்படங்களின் இரண்டு பயன்கள் என்ன?

9. அட்லாஸ் அல்லது வரைப்பட புத்தகம் என்றால் என்ன?

10. அளவீடு (Scale) என்றால் என்ன?

11. புவியியல் சின்னங்கள் என்றால் என்ன?

12. வரைப்படத்தின் அடிப்படை அம்சங்கள் யாவை?

செயல்பாடுகள் :

* காகித அட்டை அல்லது இரப்பர் பந்தை உபயோகித்து மாதிரி கோளம் (குளோப்) ஒன்றைத் தயாரிக்கவும்.
* பல்வேறு வகையான வரைப்படங்களை கூர்ந்து கவனித்து அவைகளில் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்க.
* இந்தியாவின் வரைப்படம் வரைந்து, உரிய வண்ணங்களை கீழ்க் காண்பவைகளுக்கு பயன்படுத்துக.
    - (ஆ) இந்தியாவின் இயற்கை அம்சங்களை குறிக்கவும்.
    - (ஆ) இந்தியாவை சுற்றிலும் அமைந்துள்ள கடல்கள், சமுத்திரங்களுக்கு வண்ணமிடுதல் மற்றும் பெயர்களைக் குறிக்கவும்.

ஶஶ

@TNTB NOT TO BE REPUBLISHED

பாடம் **11**

பூமியின் நில வடிவமைப்புகள்

D2A5G2

பாட அறிமுகம்

இப்பாடத்தில் பூமியின் மேற்பரப்பு அதன் பல்வேறு நிலப்பரப்புகள் மலைகள், பீடபூமி, பாலைவனம், தீவுகள் அவற்றின் பொருள், தோற்றம் மற்றும் முக்கியத்துவம். உலகின் முக்கியமான இயற்கை பகுதிகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

திறன்கள் :

1. பூமியின் தன்மைகள் / வடிவங்கள் பற்றி புரிந்து கொள்ளுதல்.
2. பூமியில் உள்ள முக்கிய நிலப்பரப்பு வடிவங்களின் தோற்றம் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றி அறிதல்.
3. உலகின் முக்கியமான இயற்கை பகுதிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

1. முக்கிய நிலவடிமைப்புகள்

பூமியை சுற்றி நோக்கினால் அதன் நிலப்பரப்பு ஒரே சீராக இல்லை என்பதை அறியலாம். சில இடங்களில் நிலப்பரப்பு உயர்ந்தும் சில இடங்களில் தாழ்வாகவும் இருக்கும். சில பகுதிகள் முற்றிலும் சமதளமாகவும் மற்றவை மலைப் பாங்கானவை, இன்னும் சில பகுதிகள் மிக தாழ்வாக உள்ளன. அதனால் பூமியில் மேற்பரப்பில் பல அம்சங்களைக் காணலாம். இவை மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள், பாலைவனம் மற்றும் தீவுகள் போன்றவைகள். இவ்வாறு பூமியின் பல்வேறு நிலப்பரப்பு அம்சங்களை 'பூமியின் நிலவடிவமைப்புகள்' என்று அழைக்கின்றோம்.

எந்த நிலப்பரப்பும் நிரந்தரமானது அல்ல, அவை உருமாறிக் கொண்டே இருக்கின்றன. இங்கு நீங்கள் காணும் எந்த நிலப்பரப்பும் அதன் அசல் வடிவம் அல்ல, பூமியின் அடிப்பகுதியில் மற்றும் வெளிப்புற ஆற்றல்களின் செயல்களின் விளைவாக பூமியின் மேற்ப்பரப்பு. உருமாறுகின்றன.

சில வடிவங்கள் மனித வாழ்க்கை மற்றும் அவனின் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நிலவடிவங்களின் வகைகள் : நிலவடிவங்கள் மூன்று முக்கிய பிரிவுகளை கொண்டுள்ளன, அவை (1) மலைகள் (2) பீடபூமி (3) சமவெளிகள்.

மலைகள் : மலைகள் மிக முக்கியமான நிலப்பரப்பு மற்றும் கடினமாவை ஆகும். அவை பூமியின் மேற்பரப்பின் உயர்ந்த பகுதிகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் உயரமான நிலப்பகுதிகளாகும். இவை கடல் மட்டத்திலிருந்து ஆயிரம் மீட்டருக்கும் அதிகமான செங்குத்தான சரிவுகள், சிகரங்களும் கொண்டுள்ளன. உயரமான மலை உச்சிகள் உள்ளன. அவைகளை மலைச்சிகரம் என்று அழைப்பர்.

குன்று என்பது இயற்கையான உயரமான பகுதியாகும் ஆனால் மலையை விட உயரமானவை அல்ல. குன்றுகள் பொதுவாக 600 மீட்டர்கள் உயரமானவைகள், அவற்றின் சரிவுகள் மிகவும் செங்குத்தானவை அல்ல.

@KTBS
NOT TO BE REPUBLISHED



பூமி மேற்பரப்பின் பல்வேறு நில வடிவங்கள்

சிகரங்கள் அல்லது சிகரங்கள் அல்லாத மலை தொடர்ச்சியை 'மலைத்தொடர்' என்று அழைக்கப்படுகின்றன. எ.கா : இமயமலை (ஆசியா), ஆல்பஸ் (ஐரோப்பா), ஆண்டிஸ் (தென் அமெரிக்கா) ராக்கீஸ் (வட அமெரிக்கா) போன்றவை.

மலைகளின் வகைகள் :

மலைகள் பெரும்பாலும் பாறை அடுக்குகள் மற்றும் எரிமலைகள் போன்ற உள் நிகழும் ஆற்றல்களினால் உருவாகின்றன. அவை பொதுவாக கடினமான பாறைகளால் ஆனவை. அம்மலைகள் பழமையானவை அல்லது சமீபத்தில் உருவாகியும் இருக்கலாம். இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலைகள் சமீபத்தில் உருவான மலைகள், ஆனால் அப்பலேஷியன் (வட அமெரிக்கா) மற்றும் ஆராவளி (இந்தியா) மலைகள் பழமை வாய்ந்தவை. உயரமான மலை உச்சிகள் அதன் மலை சரிவுகள் பனியால் சூழந்திருக்கும்.

மலைகள் உருவாக்கத்தின் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1) முடிச்சு மலைகள் 2) தடுப்பு மலைகள் 3) எரிமலைகள்

அ) முடிச்சு மலைகள் : பாறை அடுக்குகளின் முடிச்சுகள் காரணமாக முடிச்சு மலைகள் உருவாகின்றன. இவை மிக உயரமான மலைகள். ஆகும். எ.கா : இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலை முடிச்சு மலைகள்.

ஆ)தடுப்பு மலைகள் : இரண்டு இணையான பாறையின் பிளவுகளுக்கு இடையே எழுச்சியால் இம்மலைகள் உருவாகின்றன. இத்தகைய மலைகள் மிக உயரமானவை அல்ல. எ.கா. : சியரா நிவேதா (வட அமெரிக்கா), வாசேஜஸ் (Vosges) ஐரோப்பா)

இ) எரிமலைகள் : பொருட்கள் கொந்தளித்து வெடிப்புகளின் மூலம் வெளியே வந்து குவிவதால் எரிமலை உருவாகின்றன. அவற்றின் தளங்கள் அகலமானவை மற்றும் உயர்ந்த கூம்பு வடிவ சிகரங்களை கொண்டுள்ளன. (எ.கா) கிளிமஞ்சாரோ மலை (ஆப்பிரிக்கா) மற்றும் புஜ்ஜியமா மலை (ஜப்பான்) போன்றவைகள்.

@KTBS NOT TO BE REPUBLISHED

மலைகளின் முக்கியத்துவம் :

மலைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகள் அவைகள்:

- நாடுகளின் இடையே எல்லைகளை உருவாக்குகின்றன.
- மலைகள், இயற்கை வளங்களின் களஞ்சியங்கள் ஆகும்.
- நீர்மின் உற்பத்திக்கு நீர் வழங்கக் கூடியவை.
- ஆறுகளின் பிறப்பிடமாக உள்ளன.
- வளிமண்டலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- இயற்கை எழில் கொஞ்சும், காட்சியளிக்கின்றன, எனவே இவை சுற்றுலா மையங்களாகும்.
- தோட்டப் பயிர்களுக்கு ஏற்றதாகும்.

பீடபூமிகள் : பீடபூமி என்பது செங்குத்தான பக்கங்களைக் கொண்டு உயரமான தட்டையான மேற்பரப்புள்ள நிலமாகும். அவை மேசை நிலம் என்றும் அழைக்கப்படுகின்றன. இயல்பாக அவை சுற்றியுள்ள பகுதிகளுக்கு உயர்ந்து காணப்பட்டு, சீரற்ற மேற்பரப்பைக் கொண்டதாய் இருக்கும். சில பீடபூமிகள் மிகவும் பரந்து விரிந்தவைகளாகும் இந்தியாவிலுள்ள தக்காண பீடபீமி, இதற்கு ஒரு எடுத்துக்கட்டாகும். சில பீடபூமிகள் கடல் மட்டத்திற்கும் மிக உயரமானவைகள். எ.கா: திபெத்தின் பீடபூமி, இது உலகின் மிக உயரமான பீடபூமி மற்றும் 'உலகின் கூரை' என்றும் அழைக்கப்படுகிறது. சில பீடபூமிகள் தாழ்வான இடங்களில் அமைந்துள்ளன. பீடபூமிகள் கனிமங்கள் நிறைந்த கடினமான பாறைகளால் ஆனவை. கருநாடகாவின் தென்மேற்கு பகுதி ஒரு பீடபூமியாகும்.

NOT TO BE REPUBLISHED @KTBS

பீடபூமியின் வகைகள் :

பீடபூமிகளை மூன்று வகைகளாக பிரிக்கலாம்: (அ) மலைகளுக்கு இடையிலான பீட பூமி (ஆ) மலைப்பாங்கான பீடபூமிகள் (இ) கான்டினென்டல் பீடபூமி.

அ. மலைகளுக்கு இடைப்பட்ட பீடபூமி : இவை மலைத் தொடர்களால் சூழப்பட்டுள்ளன. எ.கா: திபெத்தின் பீடபூமி (ஆசியா), பொலிவியா பீடபூமி (தென் அமெரிக்கா)

ஆ. மலைப்பாங்கான பீடபூமி : இவை ஒருபக்கம் மலைகளாலும் மறுபக்கம் சமவெளிகள் அல்லது பெருங்கடல்களாலும் சூழப்பட்டுள்ளன. எ.கா படகோனியா பீடபூமி (தென் அமெரிக்கா).

இ. கான்டினென்டல் பீடபூமி : இவை எரிமலை குழம்பு பரவல் அல்லது கண்டங்களின் விரிவான மேம்பாட்டால் உருவாகின்றன. எ.கா வடமேற்கு தக்காண பீடபூமி (இந்தியா).

பீடபூமிகளின் முக்கியத்துவம் :

பீடபூமிகள்

- கனிமங்களின் களஞ்சியமாகும்.
- நீர்மின் உற்பத்திக்கு மிகவும் ஏற்றதாகும்.
- விவசாயத்திற்கு ஏற்ற மண்வளம் மிக்கவை.
- கால் நடை வளர்ப்புக்கு பயனுள்ளதாக உள்ளன..

சமவெளிகள் : பரந்த தட்டையான மேற்பரப்பு அல்லது குறைந்த ஏற்ற இறங்கங்களுடன் கூடிய தாழ்வான நிலப் பகுதிகளை சமவெளிகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை பல பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை.

பெரும்பாலான சமவெளிகள் ஆறுகள் அடித்துக் கொண்டு செல்லும் வண்டல் படிவத்தால் உருவாகியுள்ளன. சில சமவெளிகள் பனிப்பாறை, காற்று மற்றும் கடல் அலைகளால் உருவாக்கப் பட்டவைகளாகும். ஆற்றின் பள்ளத்தாக்கு மற்றும் கடலோரப் பகுதிகளிலும் பல சமவெளிகள் காணலாம். எ.கா. கங்கை சமவெளி மற்றும் அதன் (டெல்டா) முகத்துவரம் பகுதிகளாகும்.

சமவெளிகளின் வகைகள் : கட்டமைப்பு சமவெளிகள், அரிப்பு சமவெளிகள் மற்றும் வண்டல் சமவெளிகள் என மூன்று வகைப்படும்.

அ) கட்டமைப்பு சமவெளிகள் : கடற்பரப்பின் மேம்பாட்டின் காரணமாகவும் அல்லது ஒரு பகுதி சரிவதன் காரணமாக கட்டமைப்பு சமவெளிகள் உருவாகின்றன, உதாரணம் : அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் தென்கிழக்கு சமவெளி.

© KTBS NOT TO BE REPUBLISHED

ஆ) அரிப்பு சமவெளிகள் : பாறைகள் அல்லது பீடபூமிகளிலும் ஏற்படும். அரிப்புகளால், அரிப்பு சமவெளிகள் உருவாகின்றன. எ.கா. : சைபீரியா மேற்கு பகுதிகள்.

இ) வண்டல் சமவெளிகள் : ஆறுகள், காற்று மற்றும் பனிப்பாறைகளின் திரட்சியினால் அடித்துச் செல்லப்படும் வண்டல் படிவுகளின் காரணமாக வண்டல் சமவெளிகள் உருவாகின்றன. எ.கா சிந்து - கங்கை சமவெளி.

சமவெளிகளின் முக்கியத்துவம் :

- பரந்து விரிந்த நிலப்பரப்பும் மற்றும் வளமான மண் கொண்டவைகள்.
- வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
- போக்குவரத்து வளர்ச்சிக்கு சாதகமாக உள்ளன.
- நாகரிகத்தின் மையங்களாக உள்ளன.
- நகரங்கள் மற்றும் நகரங்களின் வளர்ச்சிக்கு பயனிளக்கின்றன.

பாலைவனங்கள் : மேற்பரப்பு அம்சங்களின் காரணமாக மலைகள், பாலைவனம் மற்றும் சமவெளிகளின் ஒவ்வொன்றும் வேறுபடுகின்றன. காலநிலையின் தாக்கத்தால் பாலைவனங்கள் உருவாகின்றன. பாலைவனங்கள் பகலில் வெப்பமாகும், அதிகளவில் இரவில் மிகவும் குளிராகவும் இருக்கும். பாலைவனங்கள் மிகக் குறைந்த மழையைப் பெறுவதால், இயல்பாக அவை வறண்டு காணப்படுகின்ற, எனவே பரந்த வறண்ட நிலங்களை பாலைவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. பாலைவனங்கள் பூமியின் மேற்பரப்பின் ஐந்தில் ஒரு பகுதியை ஆக்கிரமித்துள்ளன. பாலைவனங்கள் பாறைகளாகவோ அல்லது மணல் காடுகளாகவும் இருக்கலாம். ஐரோப்பா மற்றும் அண்டார்ட்டிகாவைத் தவிர்த்து அனைத்து கண்டங்களிலும் பாலைவனங்கள் காணப்படுகின்றன. சஹாரா பாலைவனம் உலகின் மிகப்பெரிய பாலைவனமாகும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

பாலைவனங்களில் சோலைகள் உள்ளன. சோலைகள் என்பது பாலைவனத்தில் நிலத்திடி நீர், நீருற்றுகள் வழியாக மேற்பரப்பில் வரும் இடங்களாகும். அவை தாவரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளின் வளர்ச்சிக்கு பயனுள்ளதாக அமைகின்றன.

பாலைவனங்களின் முக்கியத்துவம் :

பாலைவனங்களில் நாடோடிகள் வசிக்கின்றனர். அவர்கள் தங்கள் விலங்குகளுடன் இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்பவர்கள். பாலைவன மண் வளமற்றவை, ஆனால் தண்ணீர் உள்ள இடங்களில் பயிரிடலாம். எ.கா : எகிப்தின் நைல் நதிப் பள்ளத்தாக்கு, பெரும்பாலான பாலைவனங்களில் கனிமங்கள் நிறைந்துள்ளன. எ.கா: சவுதி அரேபியாவின், குவைத் நாட்டில் பெட்ரோலியம் படிவங்கள் கிடைக்கின்றன.

பாலைவனம்

சோலை

NOT TO BE REPUBLISHED

தீவுகள் :

தீவு என்பது நீரால் சூழப்பட்ட ஒரு சிறிய நிலப்பரப்பாகும், கடல்கள், ஏரிகள் அல்லது ஆறுகளின் இடையே தீவுகள் காணப்படுகின்றன. மிகச்சிறிய தீவுகளை 'சிறு தீவுகள்' (islets) என்று அழைக்கப்படுகின்றன. ஆறுகள் மற்றும் ஏரிகளின் இடையே உள்ள தீவுகளை (மத்தியதீவு) என்று அழைக்கப்படுகின்றன. பூவியியல் ரீதியாக தீவுகளின் குழுவை ''தீவுக்கூட்டம்'' என அழைக்கப்படுகின்றன. எ.கா: டியாரா - டெல் ஃபியூகோ, இந்தோனேசியா தீவுகள்.

தீவுகளின் வகைகள் :

தீவுகளில் இரண்டு முக்கியமான வகைகள் உள்ளன. அவை கான்டினென்டல் தீவுகள் மற்றும் கடல் தீவுகள் ஆகும். கான்டினென்டல் தீவுகள் பிரதான நிலப்பகுதியிலிருந்து பிரிவால் உருவாகின்றன.

எ.கா. கிரின்லாந்து, ஹைஸ்லாந்து முதலியன. பெருங்கடல் தீவுகள் கடலில் உருவாகின்றன மற்றும் எரிமலைகளிலிருந்து வெளியாகும் பொருட்களின் திரட்சியினால் சமுத்திரங்களின் இடையே உருவாகின்றன எனவே அவை எரிமலை தீவுகள் என்று அழைப்படுகின்றன. எ.கா: சுமுத்திரா தீவு (இந்தோனேஷியா) சில தீவுகள் பவளப் புழுக்களால் பவள பாறைகள் உருவாகின்றன. அவை பவளத் தீவுகள் என்று அழைக்கப்படுகின்றன. எ.கா லட்சத்தீவுகள் (இந்தியா)





@KTBS NOT TO BE REPUBLISHED

தீவுகள்

அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள் இந்தியாவின் முக்கிய தீவுகள் ஆகும். கர்நாடகாவின் கடற்கரையில் சில தீவுகள் உள்ளன. எ.கா செயின்ட் மேரிஸ் தீவு (தேங்காய் தீவு) முதலியன.

தீவுகளின் முக்கியத்துவம்.

சில தீவுகள் இதமான கால நிலையைக் கொண்டுள்ளன அவை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. சிலர் தோட்ட விவசாயம் செய்கிறார்கள். மீன்பிடித்தல், மக்களின் மிக முக்கிய தொழிலாகும்.

2. உலகின் முக்கிய இயற்கைப் பிரதேசங்கள்

பொருள்: ஒரே மாதிரியான இயற்கை அம்சங்களைக் கொண்ட பகுதிகளை இயற்கைப் பிரதேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு இயற்கைப் பிரதேசங்களுக்கும் அதன் தனித்துவமான தன்மைகள் உள்ளன. அவை ஒரே மாதிரியான தட்பவெப்பநிலை, நிலத்தின் மேற்பரப்பு தன்மைகள், மண், தாவரங்கள் விலங்குகினங்கள், மனிதர்களின் தொழில்கள் முதலியன இவைகளின் சிறப்பு தன்மைகளாகும். இவற்றின் ஒரே பிரதேசத்திள்ள மாறுபாடுகள், பல்வேறான பிரதேசங்களில் உள்ள வேறுபாடுகளை விட குறைந்தே காணப்படும். ஆனால் அப்பிரதேச அம்சங்களிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கும் குறிப்பிட்ட எல்லைகள் இல்லை. அவைகளின் அளவு மற்றும் எல்லைகள் தோராயமானவைகள்.



@KTBS
NOT TO BE REPUBLISHED

உலகின் முக்கிய இயற்கை பிரதேசங்கள்

இயற்கை பிரதேசங்களின் முக்கியத்துவம் : உலகின் பல்வேறு பிரதேசங்களின் இயற்கை சூழலை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் மனிதனின் எதிர்வினையைப் அறிந்து கொள்வதற்கும், இயற்கை பகுதிகளைப் அறிந்திருப்பது நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இயற்கை பிரதேசங்களின் வகைகள் : காலநிலையின் அடிப்படையில் பூமியின் மேற்பரப்பு பல இயற்கை பிரதேசங்களாக பிரிக்கப்பட்டுள்ளன அவற்றின் முக்கியமான இயற்கை பிரதேசங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

1. பூமத்திய ரேகைப் பகுதி அல்லது அமேசான் வகை.
2. வெப்பமண்டல புல்வெளி பிரதேசங்கள் அல்லது சூடான் வகை.
3. வெப்பமண்டல பருவமழை மண்டலங்கள்.
4. வெப்பமண்டல கடல் பிரதேசங்கள்.
5. வெப்பமண்டல பாலைவனப் பிரதேசங்கள் அல்லது சஹாரா வகை.
6. மிதமான பாலைவனப் பகுதிகள்.
7. மத்திய தரைக்கடல் பிரதேசம்
8. மித வெப்ப மண்டலங்களின் விளிம்புப் பகுதிகள் அல்லது சீனா வகை.
9. குளிர் மிதமான கடல் பிரதேசங்கள் (மேற்கு ஐரோப்பா வகை)
10. மிதமான புல்வெளி பிரதேசங்கள் அல்லது (புல்வெளி மாதிரி)
11. குளிர் மிதமான வெப்பமண்டல கிழக்கு கடற்கரை பிரதேசங்கள் (செயின்ட் லாரனஸ்)
12. குளிர்ச்சியான கண்டப் பகுதி அல்லது டைகா பிரதேசங்கள்.
13. குளிர்ச்சியான பாலைவனங்கள் அல்லது தந்தரா பிரதேசங்கள்.

புதிய சொற்கள் :

நிலப்பரப்புகள், மலைகள், குன்றுகள், பீடபூமிகள், சமவெளிகள், பள்ளத்தாக்கு, பாலைவனங்கள், தீவுகள், மலைத்தொடர்கள், சிகரங்கள், முடிச்சு மலைகள், (தடுப்பு மலை), எரிமலைகள், மேசை நிலம், கனிமங்கள், பவளப்பாறைகள், இயற்கை பிரதேசங்கள், காலநிலை.

அறிந்து கொள்ளுங்கள் :

- உலகின் மிக உயரமான சிகரம், எவரெஸ்ட் சிகரமாகும்.
- ஆப்பிரிக்காவின் பீடபூமிகள், தங்கம் மற்றும் வைரங்களுக்கு புகழ் வாய்ந்தவை.
- கங்கை நதியின் டெல்டா, உலகின் மிகப்பெரிய டெல்டா பகுதியாகும். அவை சுந்தரவனம் என்று அழைக்கப்படுகின்றது.
- மிதமான வெப்பமண்டலத்திலுள்ள புல்வெளிகளை, ஆப்பிரிக்காவில் 'ஸ்டேப்பி', வட அமெரிக்காவில் 'ப்ரெரி', தென் ஆப்பிரிக்காவில் வேல்ட்ஸ் என்று பெயர்களால் அழைக்கின்றனர்.
- இந்தியாவின் வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள வெப்பமண்டலத்தில் தார் பாலைவனம் உள்ளது.

@KTBS NOT TO BE REPUBLISHED

பயிற்சிகள்

I. ஏற்ற சொல்லைக் கொண்டு விடப்பட்டுள்ள இடத்தை நிரப்புக:

1. பூமியின் பல்வேறு நிலப்பரப்பின் தன்மைகளை .... என்பர்.
2. மிக உயரமான சிகரத்தின் உச்சியை .... என்பர்.
3. இமயமலை .... வகை மலைக்கு உதாரணமாக உள்ளது.
4. பாலைவனத்தில் ஊற்று வடிவில் வெளியேறும் நிலத்தடி நீர் .... எனப்படும்.
5. தட்டையான மேல்பரப்பு மற்றும் செங்குத்தான பக்கங்களை கொண்ட ஒரு பகுதியை .... என்று அழைப்பர்.

II. கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதில் அளிக்க:

6. நிலவடிவங்கள் என்றால் என்ன?
7. மலைகள் என்றால் என்ன?
8. 'மலைத்தொடர்கள்' என்றால் என்ன?
9. பீடபூமி என்றால் என்ன?
10. உலகின் மிக உயரமான பீடபூமி எது?
11. 'சமவெளிகள்' என்றால் என்ன?
12. 'பாலைவனம்' என்றால் என்ன?
13. இந்தியாவை சார்ந்த ஏதேனும் ஒரு தீவின் பெயரைக் குறிப்பிடவும்.
14. இயற்கை பிரதேசங்கள் என்றால் என்ன?

NOT TO BE REPUBLISHED
@KTBS

செயல்பாடுகள் :

- பல்வேறு வகையான நிலவடிவங்களின் மாதிரிகளைத் தயாரிக்கவும்.
- உலகின் முக்கிய மலைகள், பீடபூமிகள் அல்லது சமவெளிகளின் படங்களைச் சேகரிக்கவும்.
- உலக வரைப்படத்திலுள்ள கண்டங்களிலுள்ள முக்கிய மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகளை ஆசிரியரின் துணையுடன் குறிப்பிடவும்.